# THAYAGAM

# தாயகம்

75¢

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**TEXTILES,**
**GIFTS,**
**EVERSILVER**
**ITEMS**
**& BOOKS**

**566 A PARLIAMENT ST**
**(PARLIAMENT/WELLESLEY)**
**(416) 964-8601**
**324-9345**
**968-9545**

**வர்த்தகர்களுக்கு**
**விசேட கழிவுகள்**
**உண்டு**

*தலைநகை, தலைப்பாகை*
*வாடகைக்கு கிடைக்கும்*

**சிவசங்கரி, பாலகுமாரன்,**
**அனுராதா ரமணன், சுஜாதா,**
**புஷ்பா தங்கத்துரை, லேனு**
**தமிழ்வாணன், மு.கருணாநிதி,**
**கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா**
**உட்பட தமிழகத்தின் பிரபல**
**எழுத்தாளர்களின் புத்தகங்கள்**
**மலிவு விலையில் கிடைக்கும்.**

இலங்கை, இந்தியப்
பத்திரிகைகள், சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடிவினியோகமும் உண்டு.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- ✪ மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ✪ ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- ✪ சாறி வகைகள்
- ✪ அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- ✪ மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில்*
*எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**வவுனியா,**
**யாழ்ப்பாணம்,**
**கொழும்பு, இந்தியா,**
**சிங்கப்பூர் மற்றும்**
**ஐரோப்பிய நாடுகளுக்கும்**
**உடனுக்குடன்**
**பணம் அனுப்பி**
**வைக்கப்படும்**

**566 A PARLIAMENT ST (PARLIAMENT/WELLESLEY)**

Second class mail Registration No:8435

# தாயகம்

உண்மை 5 தேடல்:4+5

## வேல்விழாவில் குண்டுவெடிப்பு ஆறு பேர் பலி

கொழும்பு ஆடி வேல்விழாவில் இடம் பெற்ற குண்டுவெடிப்புகளில் ஆறு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வெடித்த இரண்டு குண்டுகளினால் குண்டு வைத்தவர்களில் ஒருவரும் கொல்லப்பட்டதுடன் பதினொரு பேர் காயமடைந்திருக்கிறார்கள். இந்தக் குண்டுவெடிப்புக்கு கோயில் நிர்வாகத்தில் உள்ள இரண்டு போட்டிக்குழுக்களின் மோதலே காரணம் என்று பொலிசார் நம்புகிறார்கள். இதுவரையும் யாரும் கைது செய்யப்படவில்லை.

கடந்த சனிக்கிழமை தொடங்கி ஐந்து நாட்கள் நடைபெறும் வேல்விழாவின் போது முதலாவது

3ம் பக்கம் பார்க்க..

## திருநெல்வேலி, இருபாலையில் குண்டுவீச்சு பதினொருபேர் பலி

ஜானகபுரத்தில் நடைபெற்ற தாக்குதல்களில் இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக விமானப் படையினர் நடத்திய தாக்குதல்களில் ஒரு வயதுக்குழந்தை உட்பட பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்ட இந்த தாக்குதல்களில் ஐவர் கொல்லப் பட்டதாக புலிகளின் வானொலி தெரிவித்திருந்தது. திருநெல்வேலியில் தொட்டிலில் இருந்த ஒருவயதுக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொல்லப் பட்டிருந்தனர். தேங்காய் சண்முகம் என்ற வர்த்தகரது குடும்பத்தினரே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் ஆவர். இவரது வீடு திருநெல்வேலி பால் பண்ணைக்கு பின்புறமாக உள்ளதாம்.

விமானங்களிலிருந்து போடப்பட்ட இரண்டு குண்டுகள் பல வீடுகள் உட்பட பல கட்டடங்களுக்கு சேதங்களை உண்டுபண்ணியிருந்தனர். மூன்றாவது குண்டு வெடிக்காததால் புலிகள் அதை எடுத்துச் சென்றுள்ளனர்.

இரண்டாவது தாக்குதலில் இருபாலையில் மூன்று குழந்தைகள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர். அத்துடன் அருகில் உள்ள முருகன் கோயில் ஒன்றும் சேதத்திற்குள்ளானது. அங்கு தஞ்சமடையச் சென்ற குழந்தை ஒருத்தியும் கொல்லப்பட்டுள்ளது.

## ஏழு கிராமவாசிகள் விடுவிப்பு

கடந்த வாரம் . ஜானகபுரம் தாக்குதலில் புலிகளால் கடத்தப்பட்ட கிராமவாசிகளில் ஏழு பேர் புலிகளால் விடுவிக்கப பட்டுள்ளனர். இவர்கள் வவுனியாவை வந்தடைந்துள் ளனர். கடந்த வியாழக்கிழமை இவர்கள் வவுனியா வந்தனர். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டனர். இரண்டு பெண்கள், ஒரு ஆண், நான்கு குழந்தைகள் உட்பட இரண்டு குடும்பத்தினரே இவ்வாறு விடுவிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த வாரம் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட பதினெட்டு இராணுவத்தினரது உடல்களைத் தாங்கள் எரித்து ள்ளதாக புலிகள் அறிவித்து ள்ளனர். முதலில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் உடல்களை ஒப்படைப்பதாக இருந்த போதும், உடல்கள் எரிந்து அடையாளம் காண முடியாத நிலையில் இருந்ததால் அவர்களின் உடல்களை எரித்து சாம்பரைத் தரும்படி கேட்டுக் கொண்டதாக இராணுவ தரப்பில் கூறப்பட்டது.

## ஏடு இட்டோர் இயல்

# உருவமும் உள்ளார்ந்த தன்மையும்

இவ்வாரம் தாயகம் புதிய வடிவத்தில்... பலருக்கு 'இன்ப' அதிர்ச்சியாக இருந்திருக்கலாம். தாயகம் கைக்கு அடக்கமான சஞ்சிகை வடிவத்தில்... இதற்கான காரணத்தைக் கூறு விட்டாலும் பலருக்கு மண்டை வெடித்து விடும்.

தாயகம் செய்திப் பத்திரிகையா? சஞ்சிகையா? என்பது பெரிய கேள்வி. எந்த வித கருத்துமில்லாமல் செய்திகளை 'அஞ்சல்' செய்கின்ற ஒரு பத்திரிகையாக தாயகம் இருந்ததில்லை. செய்திகளை விட, தாயகம் சொல்கின்ற கருத்துக்களும் நடத்துகின்ற விவாதங்களும் தாயகத்தில் முக்கியமானவை. மற்ற எல்லாப் பத்திரிகைகளையும் விட தாயகத்திற்கே தனித்துவமான பண்பு அது. செய்திகளைச் சொல்வதுடன் பத்திரிகையின் கடமை முடிந்து விடுவதில்லை. அந்த செய்தி விபரிப்புகள் வாசகன் மனதில் எந்த சிந்தனையையும் தூண்டி விடாது. 'மனிதன் நாயைக் கடித்தான்' என்பது செய்தியாக இருந்தால், சிலர் வாயைப் பிளக்க உதவுமே அன்றி சிந்தனையை தூண்டாது. மனிதன் நாயைக் கடிப்பதற்கான சூழ்நிலை என்ன என்பது பற்றிய கருத்துக்களும் சேர்ந்து வரும் போது அது சிந்தனையைத் தூண்டி விவாதத்தை தொடங்குகிறது. விவாதம் 'மண்டையை உடைத்து' (அதன் இரு பதங்களிலும்) (சரியான) முடிவுக்கு வர வழிவகுக்கிறது.

தாயகம் பத்தோடு பதினொன்றான பத்திரிகை அல்ல என்ற அபிப்பிராயம் தாயகத்தின் அபிமானிகளான வாசகர்கள் மத்தியிலும் தாயகத்தை 'தீண்டத்தகாததாக' கருதுகின்ற எதிர்ப்பாளர்கள் மத்தியிலும் உண்டு.

பத்திரிகைக்கும் சஞ்சிகைக்குமான வேறுபாடுகளில் ஒன்று பத்திரிகையின் ஆயுள் குறைவானது. செய்திக்கு ஆயுள் குறைவு. அடுத்த செய்தி வந்ததும் பழைய செய்தி ம(ற)றந்து போய் விடுகிறது. செய்தி சரித்திரமாகக் கூடிய தகுதியைக் கொண்டிரா விட்டால் அது வெறும் காற்றில் கலந்து சேதியாகத் தான் இருக்கும்.

கருத்துக்கு ஆயுள் அதிகம். நியூட்டனின் தலையில் அப்பிள் விழுந்த செய்தியை விட, புவியின் ஈர்ப்புச் சக்தி பற்றிய கருத்து ஆயுள் கூடியது. இதைப்போலத் தான் கருத்துக்கள் தவறாகி புதிய கருத்துக்கள் தோன்றினாலும் இரண்டு கருத்துக்களுக்குமே ஆயுள் உண்டு. பூமி தட்டையானது என்ற கருதுகோள் தவறானது என்று பூமி கோள் வடிவானது என்ற கண்டுபிடிப்பு வந்தாலும் 'முன்பு மக்கள் பூமி தட்டையானது என நினைத்தார்கள்' என்ற கருத்தும் தொடர்ந்து வருகிறது.

எனவே தாயகம் செய்திகளோடு கருத்துக்களைத் தருகின்ற ஒரு வெளியீடு. 'சுடச் சுடச்' செய்திகளைத் தருவதற்கு பத்திரிகைகளில் தங்கியிருந்து பழக்கப்பட்டதால் செய்திகள் என்றதும் பத்திரிகை ஞாபகம் அதனோடு இணைந்து வருவது தவிர்க்க முடியாதது. ஆனால் வார இதழில் 'சுடச் சுட' செய்தி தருவதற்குள் அடுத்த 'சூடு' நடந்து செய்தி பரவி விடுகிறது. (எங்கள் நிலைமை இங்கே அப்படி)

தாயகத்தின் இயல்புகள் பெரும்பாலும் ஒரு சஞ்சிகைக்குரிய தன்மையையே சார்ந்து நிற்கின்றன.

அத்தோடு தாயகத்தை பல வாசகர்கள் பேணிப் பாதுகாத்து வருவது குறித்து எங்களுக்குத் தெரிவித்திருந்தார்கள். நீண்ட காலத்திற்கு சேமித்து வைக்கக் கூடிய உருவ அமைப்பு இதற்கு அவசியமானது.

வெளிநாட்டு வாசகர்களுக்கு பத்திரிகை ரூபத்தில் அஞ்சலில் அனுப்புவது கூட சில சிரமங்களைத் தருகிறது.

இந்த உருவ மாற்றத்துக்கு இவையும் காரணங்கள் தான். பல்வேறு அம்சங்களை ஆராய்ந்த பின்னர் எடுக்கப்பட்ட முடிவின் விளைவு தாயகம் சஞ்சிகை உருவம் பெறுகிறது.

உருவம் மட்டுமே இங்கு மாறுகிறது. இருந்தாலும் தாயகத்தை செய்திப் பத்திரிகையாக மட்டும் உருவகிப்பவர்களுக்காக சில அமைப்பு முறைகள் தொடர்கின்றன. செய்திப் பகுதி வழமையான தாயக பத்திரிகை அமைப்பு முறையில் தொடரும்.

உருவம் மாறுவது வளர்ச்சியின் ஒரு படியாகவே கருதுகிறோம். தாயகத்தின் உண்மைக்கான தேடலும் கருத்து நேர்மையும் எந்தக் கட்டத்திலும் மாறாது என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்பதை வாசகர்கள் உணர்ந்து கொண்டால் அதுவே போதுமானது.

உருவம் மாறலாம். உள்ளார்ந்த தன்மை மாறாது.

# அரசு கூறியது பொய்யே!

கடந்த வாரம் நடைபெற்ற தாக்குதலில் இலங்கை அரசு ஒத்துக் கொண்டதை விட அதிகமான துருப்புக்கள் இறந்ததாகவும் அதிகளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றிக் கொண்டதாகவும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. புலிகள் இந்த தாக்குதல்களில் 150 றைபிள்கள், 14 மென் இயந்திரத் துப்பாக்கிகள், பல கண்ணிவெடிகள், மோட்டார் வீசிகள், மோட்டார் சைக்கிள்கள், தொடர்பு சாதனங்கள் போன்றவற்றையும் கொண்டு சென்றுள்ளதாக இப்பத்திரிகை கூறியுள்ளது. இவற்றின் மொத்தப் பெறுமதி ஐந்து கோடி என்று கூறப்படுகிறது.

அத்துடன் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையும் அதிகம் என்று கூறிய போதிலும் எத்தனை பேர் என்பது குறித்து செய்திகள் எதையும் சண்டே ரைம்ஸ் தெரிவிக்கவில்லை.

கடந்த வாரம் ஜுலைக் கலவரத்தின் பத்தாண்டு நிறைவின் போது புலிகள் ஜானகபுரத்தில் நடத்திய தாக்குதலில் 42 இராணுவத்தினரும், 17 பொதுமக்களும், பத்து புலிகளும் கொன்றதாக இராணுவம் கூறியதுடன் 51 ஆயுதங்கள் மட்டுமே புலிகளால் கொண்டு செல்லப்பட்டதாக கூறியிருந்தது.

அரசாங்கம் உடனடியாக இரண்டு அமைச்சர்களை அங்கே அனுப்பியதுடன் எப்படி இந்த முகாம் புலிகளால் தகர்க்கப்பட்டது என்பது குறித்து விசாரிக்க விசேட குழு ஒன்றையும் இராணுவ தளபதி அமைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புலிகள் தங்களுக்கு ஒரு வருடத்திற்கு தேவையான ஆயுதங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக கூறியுள்ளனர். தாங்கள் 52 இராணுவத்தினரைக் கொன்றதாகவும் மூன்று பொதுமக்களை உயிருடன் பிடித்ததாகவும் புலிகள் கூறியிருந்தனர். யாழ்ப்பாணப் பத்திரிகைச் செய்திகளின்படிக்கு புலிகள் பெருமளவு ஆயுதங்களையும் சக்தி வாய்ந்த தொடர்பு சாதனங்களையும் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் பத்து லட்சம் ருபா பணத்தையும் தாம் கைப்பற்றியுள்ளதாக புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

**வேல்விழாவில்..**

குண்டு நள்ளிரவு வெடித்தது. கோயில் வளாகத்தினுள் ஒரு சிங்களவர் அந்தக் குண்டைக் கொண்டு சென்ற போது வெடித்தது. அக்குண்டு வெடித்த போது கற்பூர, தேனீர், இனிப்பு வியாபாரிகள் சுமார் நூறு பேர் அவ்வளாகத்தில் இருந்தனர். உடனடியாக குண்டைக் கொண்டு சென்றவர் கொல்லப்பட்டதுடன் அறுவர் காயமடைந்தனர். குண்டைக் கொண்டு சென்றவர் குண்டை கோயிலினுள் வைக்க கொண்டு சென்றிருக்கலாம் என்று பொலிசார் நம்புகிறார்கள்.

இரண்டாவது குண்டு தேனீர் தயாரிக்கப் பயன்படும் பித்தளைப் பாத்திரம் ஒன்றினுள் மறைத்து வைத்திருந்த போது வெடித்தது. ஒரு சிங்களப் பெண் அதை வெளியே எடுக்க முயன்ற போது அது வெடித்தது. அந்தப் பெண்ணும் வேறிருவரும் அப்போது கொல்லப்பட்டனர். காயமடைந்த ஏழு பேரில் இருவரும் வைத்தியசாலையில் மரணமாகினர். இறந்த பெண்ணான சில்மாலா பெர்ணாண்டோ என்ற 25 வயதானவர் அந்தப் பாத்திரத்தினுள் குண்டு இருந்ததை அறிந்திருக்கவில்லை.

தனது மனைவி பாத்திரத்தினுள் ஒரு பை இருப்பதைக் கண்டு தன்னைக் கூப்பிட்டதாகவும் நான் செல்வதற்குள் குண்டு வெடித்து விட்டதாகவும் கணவரான ஹேர்பட் பின்ரோ கூறியுள்ளார்.

பொலிசார் இடத்தைச் சுற்றி வளைத்து கயிறு கட்டியுள்ளனர். குண்டு வெடிப்பில் காயமடைந்த புறா ஒன்று தவழ்ந்து சென்றதைத் தான் கண்டதாக நிருபர் ஒருவர் கூறுகிறார்.

கோயிலில் உள்ள வியாபாரப் பகுதியை வாடகைக்கு விடுவதில் கோயில் நிர்வாகத்தில் இரு சாராருக்கு இடையில் மோதல் ஏற்பட்டதாகவும் மற்றக் குழுவினரால் வாடகைக்கு விடப்பட்ட கடைகளிற்கு குண்டு வைக்க எதிர்க் குழுவினர் முயன்றிருக்கலாம் என்றும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

பிந்திய செய்திகளின்படி 38 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் கேளிக்கை விளையாட்டு நடத்த இடம் கிடைக்காததால் ஆத்திரம் அடைந்த வியாபாரி ஒருவரே இக்குண்டுவெடிப்புகளுக்கு காரணமாகலாம் என்று பொலிசார் கூறியுள்ளனர்.

# கிளாலிக்கடலில் 12 பேர் பலி

கிளாலிக் கடலில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் பன்னிரண்டுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கிளாலிக் கடலைக் கடந்து செல்ல முயன்ற பொதுமக்களின் மீது கடற்படையினர் தாக்கியதில் கொல்லப் பட்டவர்களில் பன்னிருவரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. கடந்த வியாழக்கிழமை காலை நடைபெற்ற இந்த தாக்குதலில் வள்ளத்தில் இருந்த மற்ற எட்டுப் பேரும் காயங்களுக்குள்ளானார்கள்.

வள்ளத்தின் இயந்திரம் பழுதடைந்து மிதக்கத் தொடங்கிய போதே கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர். வழமையில் புலிகள் வள்ளங்களுக்கு பாதுகாப்பு கொடுத்த போதிலும் அன்று தாக்குதல் நடந்த போது எந்த வித பாதுகாப்பும் வழங்கப்படவில்லை.

# அகதிகள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்ப இந்திய அரசு முடிவு செய்ததை அடுத்து இந்த மாதம் முதல் அகதிகள் திருப்பி அனுப்பப்பட உள்ளார்கள். இந்தியாவில் உள்ள முப்பதாயிரம் அகதிகள் திருப்பி அனுப்பப்பட உள்ளதாகவும் இதில் 1200 பேர் முதலாவது கட்டமாக சென்னையிலிருந்து ஆகஸ்ட் 12ம் திகதி திருகோணமலைக்கு அனுப்பப்பட உள்ளதாகவும் அகதிகள் புனர் வாழ்வுக்கு பொறுப்பான ஆணையாளர் சி.என். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் திருப்பி அனுப்பப்பட இருந்த இந்த அகதிகள் அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் ஐ.நா அகதிகளுக்கான ஸ்தானிகராலயம் இரண்டு கப்பல்களை தனது செலவில் அனுப்ப முன்வந்த போதும் இந்திய அரசு அதற்கு மறுத்திருந்தது.

# வொய்ஸ் ஒஃப் அமெரிக்காவுக்கு எதிர்ப்பு

சிலாபத்தில் அமைக்கப்பட்டு வரும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலயத்தின் நிர்மாணத்தை நிறுத்தும்படி சிலாபம் ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த நிர்மாணம் அப்பகுதியில் மீன்பிடியை பாதிப்பதுடன் சூழலியல் பாதிப்புகளையும் ஏற்படுத்தும் என்று ஆயர் மார்க்கஸ் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இரணவிலப் பகுதியை இந்த திட்டம் சின்ன அமெரிக்கா ஆக்குவதாகவும் வல்லரசின் காலனியாக மாற்றுவதாகவும் ஆயர் குற்றம் சாட்டினார்.

சிலாபம் பகுதியில் வெளிநாட்டார் நடமாட்டத்தை இந்த திட்டம் அதிகரிக்கும், மீன்பிடி உரிமைகளைப் பாதிக்கும், பல தென்னை மரங்களின் அழிவுக்கு காரணமாகும், சொத்துக்களை பாதிக்கும்

5ம் பக்கம் பார்க்க..

# புலிகளின் முகாம் மீது குண்டுவீச்சு

புலிகளின் இரண்டு ஆயுதத் தொழிற சாலைகளைத் தாம் குண்டு வீசித் தகர்த்துள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது. இலங்கையின் விமானப்படை விமானங்கள் சனிக்கிழமை நடத்திய தாக்குதலகளிலேயே இந்த ஆயுதத் தொழிற்சாலைகளைத் தகர்த்ததாக கூறப்படுகிறது.

இந்த முகாம்களில் ஒன்றில் மோட்டார்களும் இன்னொன்றில் மென் பார விமானங்களும் தயாரிக்கப்பட்டதாகவும் இவற்றை அழிக்க தாம் தாக்குதல் நடத்தியதாக சிரேட்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## வார(ம் தவறிய) இதழ்

நான் காண்டுகள் வாரம் தவருது வெளிவந்தது என்று வாசகர்கள் பாராட்டி நான்கு வாரங்களாகவில்லை. தாயகம் ஒரு வார இதழ் தவறி விட்டது. வாசகர்கள் தொலைபேசியினூடாக துளைத்தெடுத்து விட்டார்கள். இதற்கொன்றும் 'வருடாந்த விடுமுறை' காரணமல்ல.

ஏன் வரவில்லை? புதிய இதழ் வடிவ மாற்றம் ஆண்டு மலருடன் வந்திருக்க வேண்டியது. ஆனால் தொழில் நுட்பக் கோளாறுகள் எங்கள் முயற்சியைத் தள்ளிப் போட வைத்தது. இறுதியாக சென்ற வார இதழை சஞ்சிகை உருவத்தில் தயார்படுத்தி அச்சிடத் தயாராக இருந்த நிலையில் இறுதிநேரத் தொழில்நுட்பச் சிக்கல்கள் தவிர்க்க முடியாமல் எங்களை ஒரு வாரம் தே(ஏ)ங்க வைத்தன.

தற்போதைய புதிய அழகான (?) வடிவமைப்பு உங்கள் கோபத்தை தணித்திருக்கும் என நம்புகிறோம்.

இனிமேல் இவ்வாறான தடங்கல்கள் ஏற்படாதிருக்க இறைவனின் உதவியை நம்புகிறோம்.


## பகிரங்க அறிவித்தல்

CITY OF TORONTO

**தீயணைப்பாளர் ஆட்சேர்ப்பு முறை பற்றிய மீளாய்வு நீங்களும் பங்குகொள்ளலாம்**

றொறன்ரோ நகரசபை தீயணைப்பாளர் ஆட்சேர்ப்பு முறை குறித்து ஆராய குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்த குழுவில் றொறன்ரோ நகர தீயணைப்பு திணைக்களம், தொழிலாளர் உறவுகள், ஆளணி மற்றும் சம வேலைவாய்ப்பு பிரிவுகள், தீயணைப்பாளர் சங்கம், ஒன்ராறியோ மனித உரிமைகள் குழு என்பனவற்றின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டிருக்கிறார்கள்.

பின்வரும் விடயங்கள் பற்றியும் வேறு விடயங்கள் பற்றியும் இக்குழு ஆராயும்
-சமூகத் தெரிந்து கொள்ளல்
-ஆட்சேர்ப்பு, தெரிவு நடைமுறைகள்
-தொழில் இடங்களில் ஒன்றிணைப்பு, சமவேலைவாய்ப்பு
இந்த குழுவுக்கு இந்த விடயங்கள் குறித்த உங்கள் கருத்துக்கள் தேவைப்படுகின்றன.

கடிதம் மூலமாகவோ றொறன்ரோ நகர மண்டபத்தில் நடைபெறும் பின்வரும் பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவதன் மூலமாகவோ உங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரிவிக்கலாம்.
புதன்கிழமை, ஆகஸ்ட் 25, 1993 மாலை 2.00-6.00 மணி வரை
வியாழக்கிழமை, ஆகஸ்ட் 26, 1993 மாலை 6.30-9.30 வரை

உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்த நேரடியாகவோ, எழுத்து மூலமாகவோ Janett Butters யுடன் கிழமை நாட்களில் 8.30 மணி முதல் 4.30 மணி வரை தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளுங்கள்.

சைகை மொழி மொழிபெயர்ப்பாளர் வசதியும் உண்டு. விசேட தேவைகள் வேண்டுகோளின் பேரில் கவனிக்கப்படும்.

# பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி வேண்டுகோள்

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசாங்கம், பாராளுமன்றம், மற்றும் சகல அரசியல் கட்சிகளும் இந்தப் பிரச்சனைக்கு இராணுவ ரீதியில் அல்லாமல் அரசியல் தீர்வு காணவே விரும்புகின்றன. ஆனால் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க விரும்பும் முயற்சிக்கு சாதமான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று பலாலி முகாமில் வைத்து துருப்புகளின் மத்தியில் உரையாற்றும் போது பிரதமர் தெரிவித்தார்.

அரசாங்கம் கிழக்கில் நிர்வாகத்தை திட்டமிட்டு அமைத்து வருவதாகவும் அங்கு காட்டுப் பகுதிகளிலேயே வன்செயல்கள் நடைபெறுவதாகவும் தற்போதைய நிலைமைகள் சுமுகமாக இருந்தால், இந்த வருட இறுதிக்குள் கிழக்கில் முழுமையாக அரச நிர்வாகத்தைக் கொண்டு வர முடியும் என்றும் அவர் மேலும் கூறினார்.

புலிகளைத் தவிர்ந்த அனைத்துக் குழுக்களும் அரசியல் செயற்பாட்டில் இணைந்துள்ளன, புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவதற்கான கதவுகள் திறந்துள்ளன என்றும் பிரதமர் கூறினார்.

---

**வொய்ஸ் ...**

என்று ஆட்சேபம் தெரிவித்து அப்பகுதியில் உள்ள மக்கள் ஆர்ப்பாட்டம் செய்த போதும் அரசாங்கம் அதை புறக்கணித்ததாகவும் ஆயர் மேலும் கூறினார்.

சமீப காலங்களில் கிராமத்தவர்களின் எதிர்ப்புணர்வு அதிகரித்துள்ளதாக பொலிசார் அதிகளவில் அப்பகுதியில் நடமாடி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்களை வொய்ஸ் ஒப் அமெரிக்காவின் அதிகாரிகள் மறுத்துள்ளதுடன் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் கூடும் என்றும் கூறியுள்ளனர்.

கடந்த மாதம் வெளிநாட்டமைச்சர் ஹெரத் இந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்றும் இந்த நிலையத்தில் ஏழு பேர் மட்டுமே பணியாற்றுவார்கள் என்று கூறியிருந்தார். அத்துடன் சூழலுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றும் யாரும் இதனால் இடம் பெயர வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் மேலும் கூறியிருந்தார்.

---

# பழிவாங்கும் தாக்குதல்

ஜானகபுரத் தாக்குதலிற்கு பழிவாங்கும் முயற்சியாக இராணுவத்தினர் தமிழ் வர்த்தகர் ஒருவரைத் தாக்கியுள்ளனர். மாத்தறைப் பகுதியில் வர்த்தகம் செய்யும் வர்த்தகர் ஒருவரை சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். கடந்த வாரத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பதினாறு பேர் மாத்தறையைச் சேர்ந்தவர்கள். இத்தாக்குதலில் வெட்டுக்காயங்களுடன் இந்த வர்த்தகர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

# உடுகம்பொலவுக்கு பதவி

உடுகம்பொலவுக்கு கொழும்பு துறைமுக அதிகார சபையில் உதவி தலைவர் பதவி வழங்கப்பட்டதை அடுத்து இதுவரையும் வெளிவந்த உடுகம்பொல சம்பந்தமான ஊகங்களுக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

ஆனாலும் இவர் அரசு மீதான குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெற்றதை அடுத்தே இவருக்கு மன்னிப்பளிக்கப்பட்டு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. இவர் அரசு மீதான குற்றச்சாட்டுக்களை சுமத்திய போது இவருக்கு ஆதரவு வழங்கிய எதிர்க்கட்சிகள் இவர் தனது குற்றச்சாட்டுக்களை வாபஸ் வாங்கியதும் அவரைக் கடுமையாக விமர்சித்திருந்தன.

---

# புத்தளத்தில் தாக்குதல்

புத்தளம் பகுதிக்கு அருகில் புலிகள் நடத்திய தாக்குதலில் பத்துப் பொலிசார் கொல்லப்பட்டனர். கடந்த வாரம் சனிக்கிழமை இந்தத் தாக்குதல் நடைபெற்றது. இலவங்குளத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பத்துப் பொலிசார் கொல்லப்பட்டதுடன் நால்வர் காயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். புத்தளத்திற்கு இருபது மைல் தொலைவில் இலவங்குளம் உள்ளது.

இதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரும் புலிகள் அப்பகுதியில் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

---

# பொலிஸ் நிலையத்தில் ஆயுதங்கள்

பொலிசாரால் பிடித்து வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றில் இரு வருடங்களிற்கு முன்பதாக கைப்பற்றப்பட்ட லொறி ஒன்றில் பொலிசார் றைபிள்கள், கைத்துப்பாக்கிகள், கிரனெட்டுக்கள் என்பவற்றைக் கண்டுபிடித்தனர். தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த லொறியை சோதனையிட்ட போது அதன் கூரைப் பகுதியில் இந்த ஆயுதங்கள் பிடிக்கப்பட்டன.

முன்பு இராணுவ தலைமை முகாம் மீது தாக்குதல் நடத்திய புலி ஒருவரால் இந்த வாகனம் பிடிக்கப்பட்டிருந்ததாக செய்திகள் கூறுகின்றன.

# அரசியலமைப்பை பரிசீலிக்க தெரிவுக்குழு

இலங்கையின் அரசியலமைப்பை. பரிசீலிப்பதற்கு பாராளுமன்றம் விசேட குழு ஒன்றை ஏற்படுத்த உள்ளது. தற்போதைய ஜனாதிபதி முறைமையிலிருந்து பாராளுமன்ற முறைமைக்கு இலங்கையின் அரசியலமைப்பு மாற வேண்டுமா என்பது பற்றி இந்தக் குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும். 18 பேர் கொண்ட இக்குழுவில் இலங்கையின் தேர்தல் முறைமை பற்றி ஆராய்ந்து சீர்திருத்தங்கள் பற்றியும் பரிந்துரை செய்யும்.

இலங்கையின் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பின்படி ஜனாதிபதியே [illegible] அதிகாரங்களும் கொண்டவர். புதிய ஜனாதிபதியின் நியமனத்தின் பின்னர் புதிய ஜனாதிபதி இந்த முறைமையில் மாற்றம் கொண்டு வர ஆர்வம் காட்டியுள்ளார்.

# ஜனாதிபதியின் விஜயம் ரத்து

சென்ற வாரம் ஜூலை 83 கலவரத்தின் பத்து ஆண்டு நிறைவு பெறுவதை அடுத்து புலிகள் தாக்குதல்கள் நடத்தக் கூடும் என்ற அச்சத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான தமது விஜயங்களை ரத்துச் செய்துள்ளனர். மட்டக்களப்பில் நடைபெறும் ஜனாதிபதி செயலக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இருவரும் விமானம் மூலம் பயணம் செய்வதாக இருந்த போதும், பாதுகாப்பு காரணங்களுக்காக இருவரும் செல்லவில்லை.

மட்டக்களப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் 4500 பொலிசார் நிலை கொண்டிருந்தனர். அப்போது அமைச்சர் ஒருவர் விழாவை ஆரம்பித்து வைத்தார். அத்துடன் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் நகரின் சுற்றுப்புறப் பகுதிகளில் காவல் புரிந்தனர்.

மூன்று நாட்களாக நடைபெற்ற இந்த ஜனாதிபதி செயலகத்தில் பொதுமக்கள் தங்கள் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வது போன்ற விடயங்களைப் பெறுவதில் ஆர்வம் காட்டினர்.

# பொலிசாரின் நிலை கவலைக்கிடம்

கடந்த திங்கட்கிழமை புலிகளின் வானொலியின் அறிவிப்பு ஒன்றில் தற்போது உண்ணாவிரதம் இருக்கும் பணயக்கைதிகளான பொலிசாரில் 34 பேரில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் இவர்கள் தங்கள் உண்ணாவிரதத்தை மீண்டும் ஆரம்பித்தனர். தங்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அவர்கள் கோரிக்கை விடுத்தே இவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தனர்.

# ஜனதா தளத்தினர் காங்கிரஸிற்கு தாவினர்

பிரதமர் நரசிம்மராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நரசிம்மராவுக்கு ஆதரவாக வாக்களித்த ஜனதா தளக் கட்சியினர் தற்போது கட்சி மாறி இந்திரா காங்கிரஸில் சேர்ந்துள்ளனர். அஜித் சிங் தலைமையிலான ஜனதா தள அணியின் முடிவை மீறி ஏழு உறுப்பினர்கள் நரசிம்மராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது பிரதமரை ஆதரித்து வாக்களித்தனர். இவர்கள் தற்போது இந்திரா காங்கிரசில் சேர்க்கப் பட்டிருப்பதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் சுக்லா கூறியுள்ளார்.

ராவ் தனக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது தோல்வியடையும் வாய்ப்புகள் இருந்த போதும் கட்சித் தாவுதல்களால் 265-251 வாக்குகளால் வெற்றி பெற்றார்.

தற்போது பாராளுமன்றத்தில் காங்கிரஸிற்கு 257 ஆசனங்கள் உள்ளன.

ஜனதா தள தலைவரான அஜித் சிங் காங்கிரஸில் தனது உறுப்பினர்கள் சேர்ந்ததற்கு சபாநாயகரிடம் ஆட்சேபம தெரிவிக்கப் போவதாகக் கூறியுள்ளார். கட்சியில் மூன்றில் ஒரு பங்கினருக்கு மேல் கட்சி மாறினால் ஒழிய யாரும் சுயமாக கட்சி மாற முடியாதபடி இந்தியாவின் கட்சித் தாவல் தடைச் சட்டம் உள்ளது. இந்த சட்டத்தை தனது உறுப்பினர்கள் மீறியுள்ளதாக அஜித் சிங் குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் கட்சி பணமும் மற்றும் ஆசைகளும் காட்டி இவர்களை விலைக்கு வாங்கிக் கொண்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினர்.

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

பிரதமர் நரசிம்மராவ் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியில் முடிவடைந்தது. இதனால் அரசாங்கம் தனது பொருளாதார சீர்திருத்தங்களை துரிதப்படுத்தக் கூடும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பதினான்கு வாக்குகளால் நரசிம்மராவ் தனது பதவியைக் காப்பாற்றிக் கொண்டுள்ளார். பங்கு ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான ஹர்சத் மேத்தா தான் பிரதமருக்கு ஒரு கோடி ருபா பணம் கொடுத்ததாக குற்றம் சாட்டியிருந்தார். இதையடுத்தே இவர் மீது குற்றம் சாட்டி எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 248 பேரும் எதிராக 262 பேரும் வாக்களித்திருந்தனர்.

# இப்படியும் செய்திகள்-



**ஜனமித்திரன்**

அண்மைக் காலம் வரை ஜனாதிபதி மாளிகையில் வசித்த திருமதி ஹேமா பிரேமதாச அம்மையாரின் உணவுப்பண்டங்கள், பானங்களுக்காக அரசாங்கமே செலவு செய்துள்ளது. 1992ம் ஆண்டில் ஜனாதிபதி மாளிகைக்கு வழங்கப்பட்ட இறைச்சி, மீன், காய்கறி மற்றும் இனிப்புப் பதார்த்தங்களுக்காக மட்டும் இருபது இலட்சத்து எழுபத்தாயிரத்து முன்னூற் நாற்பத்தி எட்டு ரூபாய் இருபத்தைந்து சதம் அரசாங்கத்தால் செலவு செய்யப்பட்டது. இதன்படி ஹேமா பிரேமதாச அம்மையார் வசித்த ஜனாதிபதி மாளிகையின் தினசரி உணவுச் செலவு மட்டும் ரூபா 5696.84 ஆகும்

1992ல் ஜனாதிபதி மாளிகைக்கு வழங்கப்பட்ட பண்டங்களுக்கான கொடுப்பனவுகள் பின்வருமாறு:

ஆட்டிறைச்சி ரூபா 71,886.50,
மீன் ரூபா 24,145.50
காய்கறி ரூபா 2,76,300.55
மளிகைப் பொருட்கள் 13,91,868,75
இனிப்புப் பண்டங்கள் (ஐஸ் கிறீம், கேக் மற்றும் வகைகள்) ரூபா 3,01,578.40
பால் உணவு ரூபா 34,068.75

இதனிடையே உள்நாடு வெளிநாடுகளுக்கான தொலைபேசிப் பாவனையிலும் திருமதி ஹேமா பிரேமதாச இலங்கையில் புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். இல 93 விஜேராம மாவத்தை இல்லத்தில் 7 தொலைபேசிகள், சுசரித்தை மாவத்தை இல்லம் 2 தொலைபேசிகள், கொழும்பு ஜனாதிபதி மாளிகை 15 தொலைபேசிகள், கண்டி ஜனாதிபதி மாளிகை 2 தொலைபேசிகள், மாஹோ பிரதேசத்திலுள்ள கஹம்பிலியாகெட்டிய வத்தை என்னும் இடத்தில் 2 தொலைபேசிகள் ஆகியவாறு 28 தொலைபேசிகள் பாவிக்கப் பட்டுள்ளன. இத் தொலைபேசிகள் மூலமாக 9 மாதகாலத்துள் பெறப்பட்ட அழைப்புகளுக்காக முப்பத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி நாலாயிரத்து நானூற்றி எழுபது ரூபாய் எண்பத்தி ஆறு சதம் அரசாங்கத்துக்கு செலவாகியுள்ளது. ஜனாதிபதி மாளிகையிலுள்ள 448171 இலக்கத்தை கொண்ட தொலைபேசியில் மட்டும் 1992 ஜூலை 01ம் திகதி 1993 ஏப்பிரல் 30ம் திகதி வரை பெறப்பட்ட அழைப்புகளுக்கான செலவு ரூபா 11,37,218. 41 ஆகும். ஜனாதிபதி மாளிகையிலுள்ள இலக்கம் 446336 தொலைபேசியில் பெறப்பட்ட அழைப்புகளுக்கான செலவு ரூபா 10,18,534.90 ஆகும்.

வெளிநாட்டு தொலைபேசி அழைப்பிலும் திருமதி பிரேமதாச புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். 1992 செப்ரம்பர் 1ம் திகதியிலிருந்து 1992 செப்ரம்பர் 30ம் திகதி வரையான ஒரு மாத காலத்துள் மட்டும் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளுக்காக ரூபா 88,271.30 அரசாங்கத்தால் செலவு செய்யப்பட்டது. இம்மாதத்துள் அவர் ஐக்கிய அமெரிக்கா 48, சிங்கப்பூர் 36, பிரித்தானியா 16, ஸ்பெய்ன் 22 அவுஸ்திரேலியா 6, இந்தியா 8, பாகிஸ்தான் 2 என்னும் தொகையில் அழைப்புக்களை பெற்றுள்ளார்- (தகவல் ராவய ஜூலை 04, 1993)

★ ★ ★

ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் ஆடைத் தொழிற்சாலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட புத்தளம் "ஒப்வு" ஆடைத் தொழிற்சாலை ஆனமடு "ஆண்புகம" ஆடைத் தொழிற்சாலை ஆகியவற்றின் தொழிலாளர்களுக்கு ஏப்பிரல் மாதத்துக்கும் மே மாதத்துக்குமான சம்பளம் இன்னமும் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக மேற்குறித்த தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் புத்தளம் மாவட்ட தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(தகவல் ராவய ஜூலை 04,1993)

★ ★ ★

சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் தீ. வி.புஞ்சிநிலமே அவர்கள் அண்மையில் நெஞ்சுவலியால் காலமானார்.

ஆதார சிகிச்சைக்கு அவசியமான மருந்துகள் கூட பலாங்கொடை ஆஸ்பத்திரியில் இல்லாத காரணத்தினாலேயே இவர் இறந்ததாக அறியப்படுகிறது. (ராவய ஜூலை 25,1993)

# தமிழர் சர்வதேச பொலிசாரால் தேடப்படுகிறார்

மொன்றியலில் உலகத்தமிழர் இயக்கத்திற்காக வருமான வரி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வந்தவரும் மொன்றியல் சைவாலய தர்மகர்த்தா சபையில் உறுப்பினருமான தமிழர் ஒருவர் பண மோசடிக் குற்றச்சாட்டில் சர்வதேசப் பொலிசாரால் தேடப்படுகிறார். மொன்றியல் நகரில் உள்ள ஹொங் கொங் வங்கியில் அதிகாரியாகப் பணியாற்றிய பிரேம்குமார் காசிப்பிள்ளை என்ற நாற்பது வயதான தமிழர் நான்கு லட்சம் டொலர்களைக் கையாடியதாக தற்போது தேடப்பட்டு வருகிறார். வங்கியின் சர்வதேச செயற்பாடுகளின் இயக்குனராக செயற்பட்ட இவர் திடீரென்று தனது பதவியிலிருந்து கடந்த வருடம் யூலை மாதம் விலகியுள்ளார்.

பொலிசாரின் சந்தேகப்படி இவர் கனடிய விற்பனை நிலையத் தொடர் ஒன்றின் வைப்பிலிருந்து தனது பெயருக்கு வங்கிக் காசோலைகளை இவர் எழுதியிருக்கிறார். பின்னர் தன்னுடன் பணியாற்றும் அதிகாரி ஒருவர் மூலம் கூட்டுக் கையொப்பம் இட்டிருக்கிறார். இந்தக் காசோலைகள் ஐயாயிரம் டொலர் முதல் 21 ஆயிரம் டொலர் வரை பெறுமதியானவை.

தற்போது இவர் நாட்டை விட்டு வெளியேறி இலங்கைக்கோ, அவுஸ்திரேலியாவுக்கோ சென்றிருக்கலாம் என்று பொலிசார் நம்புகிறார்கள்.

இவர் பணத்தை கையாடியது அந்த விற்பனை நிலையத் தொடருக்குத் தெரியாது. இந்த கையாடல்கள் செப்டம்பர் 89 முதல் இவர் மொன்றியலை விட்டு விலகியது வரை நடைபெற்றிருக்கின்றன.

ஒரு ஏற்றுமதி இறக்குமதி நிறுவனம் இருபதாயிரம் ரூபா காசோலை காசாக்கப்பட்டதை அவதானித்த போது, வங்கி இவரை அது குறித்து விசாரிக்கும்படி கேட்டுக் கொண்டது.

பத்து நாட்களின் பின்னர் இவர் வங்கியின் தொலைபேசி பதிவு இயந்திரத்தில் தான் வேலையை ராஜினாமா செய்வதாக அறிவித்திருந்தார். இவரது வீடு கைவிடப்பட்டு இவரது வங்கிக் கணக்குகள் வெறுமையாக்கப்பட்ட பின்னர் இவர் நாட்டை விட்டுச் சென்றுள்ளார்.



# முனியின் பதில்கள்

ஐக்கிய நாடுகள் சபைமுன் ஊர்வலம் போல இலங்கைத் தமிழர்கள் "எமது தலைவர் பிரபாகரன்" என கோஷம் போட்டாகளாமே! ஈழத் தமிழர் களுக்கெல்லாம் பிரபாகரன் தான் தலைவர் என்பது இப்போது முழு உலகத்துக்குமே தெரிய வந்திருக்குமல்லவா?
முனிதாசன் ரொறன்டோ
அந்த வெட்கக்கேடு நடந்திருக்காது

யாழ்ப்பாணத்தில் சிங்கள பொலிஸாரினை விடுவித்து உணவுத்தடையை புலிகள் நீக்கியதை புலிகளின் ராஜதந்திரம் என கனடாவில் வாழும் ஏனைய பத்திரிகைகள் போற்றிப் புகழ்ந்தபோது சிங்கள அரசு செய்யும் தந்திரம் என முனியே நீ சொன்னாய். நீ சொன்னது போலவே உணவுத்தடை மீண்டும் அமுலாகிவிட்டது. உனக்கு தீர்க்கதரிசி என பட்டம் தரவா?
முனிதாசன் ரொறன்டோ.
அட போங்கப்பா........ எமது மக்களின் துன்பத்தை தீர்க்க தெரியாது அரசியல் நடத்தும் எமது தலைவர்களுக்கு 'தீர்க்கா'தரிசிகள் என பட்டம் கொடும்.

ஜூலைக்கலவரம் முடிந்து பத்து ஆண்டுகளாகி விட்டன. இதனை நினைவுகூர்ந்து தாயகம் என்ன செய்யப்போகிறது?
கருணாநிதி, ஸ்காபரோ
ஜூலைக் கலவரம் ஆரம்பிக்க காரணமாயிருந்த 'பொறி' எது தெரியும் தானே! புலிகள் இராணுவத்தினருக்கு கண்ணி வெடி வைத்ததால் 13 இராணுவம் இறக்க அந்த சம்பவம் ஆரம்பித்து வைத்த காட்டுத்தீயான ஜூலைக்கலவரம் நடந்ததை சொல்லி மறைந்த அப்பாவிகளுக்கு அஞ்சலி செய்கிறோம்.

ரொறன்டோவில் பெண்கள் ஆடை அலங்காரங்கள் நாளுக்கு நாள் மாறுகிறதே ......! எமது பெண்கள் கலாச்சாரத்தைக் காற்றில் பறக்க விடுகிறார்கள். இதையெதிர்த்தும் ஊர்வலம் போனால் என்ன?
வே. சிவசண்முகநாதன்
ஸ்காபரோ
கேள்வியுடன் என்னால் உடன்பட முடியாது. நான் கவனித்த வரையில் ஆண்களைவிட பெண்கள்தான் எமது பாரம்பரிய உடைகளை அணிவதில் அதிகம் நாட்டம் காட்டுகிறார்கள் எந்த ஒரு திருமண வீட்டிற்கோ ஏனைய கொண்டாட்டங்கள் விழாக் களுக்கோ போனால் எமது பெண்கள்தானே பூ வைத்து சேலையுடுத்து மங்களரமாக வருகிறார்கள். ஆண்கள் கோட்டு சூட்டு மாட்டிக் கொண்டு கங்காணிகள் போல அலையும் அவலத்தையும் பார்த்துள்ளேன்.

கனடாவிலுள்ள எதிர்காலச் சந்ததி தனது பெற்றோரையும் மதிக்காமல் தமிழ் பாரம்பரியங்களை மறைத்து தமிழர் என்று தெரியாதவண்ணம் தங்களை மாற்றி வருகின்றன. இதை தடுக்க என்ன வழி முனிவரே?
வே. சிவசண்முகநாதன்
ஸ்காபரோ
இது எதிர்பார்க்கக் கூடியதே! தமிழர்களாக வாழ்ந்து வந்த பெரியவர்களே கனடிய கலாச்சாரத்திற்கு இசைவாக்கம் அடைந்து வரும்போது சிறுவர்கள் மாறமாட்டார்கள் என்று எதிர்பார்ப்பதும், அதற்காக வருத்தப்படுவதும் மடமைத்தனம். நீரிலும் நிலத்திலும் வாழவேண்டிய பிராணிகளே நீரினுள் வாழும் போது, நீரில் பிறந்த பிராணிகள் நீருடன் ஒன்றித்துப் போவது தடுக்கப்பட முடியாதது. ஆனால் எமது கலாச்சார சிறப்புக்களை உணர்த்தி அதன் மூலம் கனடாவின் எதிர்கால தமிழ்ச் சந்ததி எமது கலாசாரத்தை மதிக்க வைக்கலாம். ANY OBJECTION ?

பிரான்ஸில் வாழும் தமிழர்கள் இங்குள்ள அல்ஜீரியர்களை அடையார் என கேலியாக அழைப்பார்கள். ஆனால் தமிழர்களுக்கு இதுபோல வேற்று நாட்டவர்கள் பட்டமளித்து கௌரவிப்பதில்லை. இது ஏன்?
கேதீஸ், பாரிஸ்
'பட்டம் பெறுவதற்கு தகுதி வேண்டும்' என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும் (நம்ம தமிழர்களுக்கு 'பொல்'லாதவன், 'துப்பாக் கி'யன், 'மட்டை'யன், வீரகத்தி' என பெயர் வராதவரை மகிழ்ச்சிதான்)

தாயகத்தில் நீர் ஏன் எழுதுகிறீர் முனிவரே!
சம்பந்தன், மிஸிஸாகா
தாயகம் உலகளாவிய சிறுகதைப்போட்டி வைத்து விட்டு முடிவுகளை அறிவிக்காமல் விடுவதில்லை. கருத்துக்கணிப்பு செய்து விமான டிக்கட் பரிசு என்று விட்டு அதைப்பற்றி பேசாமலிருப்பதில்லை. கிட்டு வுக்கு அறக்கட்டளை ஆரம்பித்து அனுதைகளுக்கு உதவி என்று விட்டு மௌனம் சாதிப்பதில்லை. பத்திரிகையை வாரம் இருமுறையாக்கப் போவதாக டோஸ் விடுவதில்லை. இதனால் தாயகத்தில் எழுதுகிறேன் என நான் சொன்னால் உமக்கு

மகிழ்ச்சிதானே....!

வியாபாரப் போட்டியில் 'நாடு' பத்திரிகை 'மரை' பத்திரிகையை வென்றுவிட்டதாமே!
சம்பந்தன்- மிஸிஸாகா
அதைப்பற்றி எமக்கு அக்கறையில்லை.. இருப்பினும் 'சரி' யை இணையாக 'மரை' வெளியிடுவதனால் அதற்கும் போட்டியாக வேறெதாவது 'ஈ' நாட்டிலிருந்து வெளிவரக் கூடும்.

ஒரு பாடலை ரசிக்கும் போது இசையமைப்பாளரை பாராட்டுவீரா? அல்லது பாடகரை பாராட்டுவீரா?
கிறிஸ்டீனா, ரொறன்ரோ
இசையமைப்பாளன் சப்தத்தை படமாக வரைந்து தருகிறான். பாடகன் அதற்கு வண்ணம் தீட்டிக் காட்டுகிறான். நாம் அந்த சித்திரத்தை ரசிக்கிறோம்.

"எழுத்தாளன் நான் இப்படித்தான் எழுதுவேன். அதை படித்துப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக நான் எனது எழுத்துப் பாணியை மாற்றிக்கொள்ள மாட்டேன்" என அடம்பிடிக்கும் எழுத்தாளர்களைப் பற்றி....
திருமதி ஞானம்பிள்ளை, மொன்றியால்
எழுதும் வல்லமை எல்லோருக்கும் இலகுவில் வாய்த்து விடுவதில்லை. வாய்க்கும் அந்த வல்லமை சிலருக்கு மட்டும் அதீதமாகி விடுகிறது. இவ்வகையில் தன் பலம் உணர்ந்தவன் எவனும் அதனை குறைத்துக் காட்டி மகிழ்வதில்லை. எழுத்துக்காகவும், முரண்படுபவர்களையிட்டு மகிழ்ச்சியே. ஆனால், அவர்கள் முயற்சி விழலுக்கிறைத்த நீராகிவிடக்கூடாது.

நடுநிலையான பத்திரிகை இருப்பது சாத்தியமா?
கமல், ரொறன்டோ
நேர்மையான 'வியாபாரம்' 'நடுநிலை'யான பத்திரிகை இரண்டும் ஒன்றுதான். நேர்மையான வியாபாரம் என்றதும் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு லட்சாதிபதி வைர மாலை ஒன்றை வாங்க கடைக்காரரிடம் ஓடர் செய்தார். கடைக்காரர் வைரமாலையை நகைப் பெட்டியுள் வைத்து பத்தாயிரம் டொலருக்கு பில் அனுப்பியிருந்தார். லட்சாதிபதிக்கு அந்த விலை அதிகம் போல தோன்றவே செக்ரட்டரியிடம் நகைப் பெட்டியையும் ஒரு கடிதத்தையும் கடைக்காரருக்கு கொடுத்தனுப்பினார். கடிதத்துடன் எட்டாயிரம் டொலருக்கு செக் ஒன்றை இணைத்து "சம்மதமென்றால் செக்கை வைத்துக்கொண்டு நகைப் பெட்டியை அனுப்பி வைக்கவும்" என குறிப்பிட்டார். கடைக்காரருக்கு நகையை எட்டாயிரத்துக்கு விற்க மனமில்லை. எனவே பெட்டியை வைத்துக் கொண்டு செக்கை அனுப்பிவிட்டார். பிறகு நகைப் பெட்டியை திறந்து பார்த்தபோது பெட்டியுள் பத்தாயிரம் டொலருக்கான செக் இருந்தது. 'வியாபாரத்தில்' நேர்மை இப்படியாக இருந்தாலே போதுமானது. அதுபோலத்தான் பத்திரிகையில் நடுநிலையும் (ஏதாவது புரிகிறதா?)

ஸ்ரீலங்கா அரசு மீண்டும் இந்தியப் படையை அழைக்கும் சாத்தியம் உண்டா?
கிருஷ்ணா ரொரன்டோ
சாத்தியம் உண்டாகலாம். ஆனால் தேவை உண்டாகாது காரணம் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள பொது மக்களும் தமது நிலைப்பாட்டை உணர ஆரம்பித்து வருகிறார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு உடைந்து போனதுதான், ரஷ்யா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளுக்கு இன்று ஏற்பட்டுள்ள துன்பத்துக்கு காரணம் என்பது எந்த அளவில் உண்மை?
கிருஷ்ணா ரொறன்டோ
கம்யூனிஸ்ட் கட்சி திடீரென இல்லாமல் போனது முன்னாள் கம்யூனிச நாடுகளுக்கு மட்டுமல்ல இன்னாள் முதலாளித்துவ நாடுகளுக்கும் பெரும் இக்கட்டை கொண்டு வந்து சேர்த்திருக்கிறது என்பது உலகத்தின் போக்கைப் பார்க்கும் போது தெரிகிறது.


எமது புலிகளுக்கு ஆதரவு தரத்தக்க நாடுகள் உலகின் இன்று எதுவுமுண்டா?
ச. கணேசானந்தன் ரொறன்டோ
இன்றைய நிலையில் எதுவுமில்லை. ஒருவேளை பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சிக்கு வந்தால் புலிகளுக்கு மீண்டும் இந்தியா உதவக் கூடும். புலிகளும் தாங்கள் "இந்து ராஜ்யம்" அமைக்கப் பாடுபடுவதாக கூறி அந்த ஆதரவை வாங்க முயற்சிக்கக்கூடும்.

ரொறன்டோவில் தமிழ் பெண்களின் அழகிலா? சயானுப் பெண்களின் அழகிலா? முனிவரே நீர் மயங்குவதுண்டு?
ராஜ் ரொறன்டோ
கயல் விழி கொண்ட பெண்களின் அழகில் கிறுங்காதவர் உண்டோ? (ரொறன்டோவில் தற்போது நீக்கமற நிறைந்து காணப்படும் எதியோப்பிய பெண்களின் அழகான கண்களை முனிவர் பார்க்காமலே போவாரா?)

தேடல் சஞ்சிகை பற்றி செந்தாமரை எழுத அதற்கு தேடல் பதிலடி கொடுக்க மீண்டும் செந்தாமரை தேடகத்தினரின் கோமாளித்தனம் என்று எழுதியிருக்கிறதே! இதுபற்றி உமது அபிப்பிராயம்?
நேசன் ரொறன்டோ
சின்ன ராசாவே... 'ஷிட்'டெறும்பு உன்னைக் கடிக்குதா? (சீ.....)

மாத்தயா மறைந்து விட்டாரா முனிவா?
நேசன், ரொறன்டோ
மாத்தையாவைப் பற்றிய பேச்சு மறைந்து விட்டது! அதுமட்டுமா யோகி என்ன ஆனார்?

சிவதாசனின்



# சனப்பிரச்சனை

83 ஜூலைக் கலவரம் நினைவு கூரப்பட வேண்டியது என்பது மறுப்பதற்கில்லை. இதற்கு முன் பல கலவரங்கள் நடைபெற்றிருந்தாலும் 83 கலவரம் விட்டுப் போன தொடர் தாக்கங்கள் இன்னும் முடிந்தபாடில்லை. அதனால் இது நினைவு கூரப்பட வேண்டியது.

எந்தக் கலவரங்களின் போதும் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர். கலவரங்களுக்கு இடம், பொருள், ஏவல், நிறம், மணம், குணம் எதுவுமே இல்லை. அதனால் இக்கலவரங்களினால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் அத்தனை பேரும் நினைவு கூரப்பட வேண்டியவர்களே. அவர்கள் தமிழர்கள் அல்லாதிருந்தாலும் கூட அவர்களும் மனிதர்களே!

கலவரத்தின் போது பாதிக்கப்பட்டவர்களை விடவும் கலவரத்தை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்ற போராட்டத்தினின்றும் விடுதலை பெற்றுக் கொடுக்கப்பட்டு வரும் உயிரினங்கள் நினைவு கூரப்பட வேண்டியவை. எண்ணிக்கையிலும் இவர்கள் தான் அதிகம். ஆனால் ஜூலை 83 க்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் அதைத் தொடர்ந்த ஆண்டுகளுக்கு கொடுக்கப்படுவதில்லை.

ஜூலை 83 ஐ அண்டிய சம்பவங்கள் ஈழத்தமிழர் வரலாற்றில் பல திருப்பங்களை ஏற்படுத்தின என்ற காரணத்துக்காக அது நினைவு கூரப்படுதல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. இலங்கையின் இனப்பிரச்சனையை உலகளாவிய அளவில் தெரியப்பண்ணியதும் இளந்தமிழர்களை ஆயுதப் போராட்டத்தின்பால் ஈடுபட வைத்ததும் ஈழத்தில் இந்தியத் தலையீட்டுக்கு வழிகோல் பண்ணியதும் உலகம் முழுவதும் தமிழர்கள் அகதிகளாக புலம் பெயர்ந்து கொள்ள வழிவகுத்ததும் இந்த ஜூலை 83 தான் என்பதனால் அது பலவகையில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் இவ்வளவு சம்பவங்களும் எந்த வகையிலும் கூட ஈழத்தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவுமில்லை, செய்யவும் மாட்டாது என்பதனால் இந்த ஜூலை 83 உயிர், உடமை இழப்புகளை விட எதையுமே சாதித்து விடவில்லை. அதனால் இதன் பொருட்டு எந்தக் கண்ணீரையும் சிந்துவதில் அர்த்தமில்லை.

83க்கு முன் நடந்த கலவரங்களுக்கும் 83 இன் கலவரத்துக்கும் சிங்களவர்களைப் பொறுத்தவரை எதுவித வித்தியாசமுமில்லை. வழக்கம் போல கப்பலில் போய் ரயிலில் வந்த பயணமாகவே 83ம் ஒரு வார சலனமாக முடிந்திருக்கும் என்று தான் அரசும் மக்களும் எதிர்பார்த்திருப்பர். தமிழர் தலைமை கைமாறி விட்டது. கணக்கும் தப்பி விட்டது.

ஈழநாடு பத்திரிகையில் முருங்கைக்காய் பார்சலுடன் கொழும்பில் எத்தனை மணிக்கும் தமிழர் ஒருவர் நடமாட முடியும் என்று தலைநிமிர்த்தும் அதே வேளையில் யாழ்ப்பாணத் தெருக்களில் E.A.பாய், ஏக்கநாயக்கவும் எப்போதுமே திரிய முடியாது என்கின்ற நிலைமைக்கு இந்த ஜூலை 83 வழிவகுத்திருப்பதால் இதுபற்றி புல்லரித்துக் கொள்வதிலும் அர்த்தம் எதுவும் இல்லை.

இனப்பிரச்சனை என்றிருந்த எங்கள் பிரச்சனை இன்று வெறும் சனப்பிரச்சனை என்ற அளவில் முதிர்ந்திருக்கிறது. எதிரிகள் தமிழர், சிங்களவர் என்றிருந்து எதிரிகள் எந்த இனமாக இருக்க வேண்டும் என்பதல்ல, எந்த சனமாக இருந்தாலும் சரி, தேவையின் நிமித்தம் எதிரிகள் அமைவர் என்ற கோட்பாடு உருவாகும் அளவுக்கு கூர்ப்படைந்திருக்கிறது எங்கள் பிரச்சனை. எந்த தமிழரின் சுபீட்சத்திற்காக இந்த ஜூலை வித்திட்டது என்று எம்மவர் எதிர்பார்ப்பார்களோ அங்கே சுபீட்சம் வர முதல் தமிழர் இல்லாமல் போய் விடும் நிலை ஒன்று உருவாகும் போது சுபீட்சம் சிங்கள மக்களுக்கே ஆகும்.

தமிழர் நிலங்களெல்லாம் தரிசு நிலங்களாகி தாரை வார்த்துக் கொடுத்தபின் ஈழ மண்ணில் இருந்து ஈழம் விடுதலை பெற்றுக் கொள்ளும்.

இறந்தும் பெயர்ந்தும் தமிழர் குறைந்து இலங்கையை ஒரு தனிச்சிங்கள பௌத்த நாடாக்கும் போராட்டத்தில் கைகளைத் தூக்காமலேயே வெற்றியைத் தரும் பணிக்கு வித்திட்ட இந்த ஜூலை 83 நினைவு கூரப்பட வேண்டியதே.

சூனியமாகி விட்ட ஒரு தசாப்தத்தின் விளைவுகளிலிருந்து நாம் விடுபட இன்னும் பல தசாப்தங்கள் தேவை. அது மட்டும் இந்த ஜூலை 83 நினைவில் இருத்தப்பட வேண்டியது தான். மறுப்பதற்கில்லை.

*சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடீ கிளியே செம்மை மறந்தாரடீ*

# 1983 யூலை 23,25ம் திகதிகளில் அழிக்கப்பட்டவர்கள்....

## கோபி

1983ம் ஆண்டு யூலை 23,25ம் திகதிகளில் வெலிக்கடையில் அநியாயமாகக் கொல்லப்பட்ட தங்கண்ணா, குட்டிமணிக்கும் ஏனையோருக்கும் அமெரிக்காவில் செலுத்திய அஞ்சலியின் உள்நோக்கம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று!

தங்கண்ணா, குட்டிமணி அவர்களுடன் சில மாதங்கள் சிறையில் இருந்தவன் என்ற வகையிலும், அவர்கள் இறப்பதற்கு சில நாட்களிற்கு முன் இறுதியாகச் சந்தித்தவன் என்ற வகையிலும் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய சில உண்மைகளைச் சொல்வது இறந்தவர்களிற்கு செய்யும் உண்மையான அஞ்சலி என்று நம்புகின்றேன்.

பனாகொடை இராணுவ முகாமில் சில தடவைகள் தங்கண்ணாவுடன் நீண்ட நேரம் உரையாடும் வாய்ப்புகள் கிடைத்ததுண்டு. அப்போது தங்கண்ணா என்னிடம் இருந்து (நான் அவரின் கைதுக்குப் பின் பல மாதங்களின் பின் கைதானவன்) வெளியில் நடந்து விபரங்கள் ஆவலாகக் கேட்பார்.

தங்கண்ணா தனது கைது பற்றிய விபரங்களைக் கூறியபோது தமது இந்தியாவிற்கான படகுப் பயணத்தை ஏற்பாடு செய்தவர் மீதே தான் சந்தேகப்படுவதாகக் கூறினார். ஏனெனில் தமது பயணத்தை ஒழுங்கு செய்தவரை தவிர படகு ஓட்டுபவருக்குக் கூட யார், யார் படகில் செல்ல இருப்பது போன்ற விபரங்கள் தெரியாது என்றும் கூறினார். மேலும் படகு வரும் என்று குறிப்பிட்ட நேரத்திற்கு படகு வரவில்லை என்றும், தாம் (தங்கண்ணா, குட்டிமணி, வெள்ளை மாமா) கடற்கரையில் படகுக்காக காத்திருந்த போது 6 பொலிஸ்காரர்கள் தங்களின் பின்னால் வந்து துப்பாக்கியை நீட்டியபடி சரணடையும்படி கூறினர் என்றும் கூறினார். அதாவது யாரோ கொடுத்து தகவலின் பேரில் அந்தப் பொலீஸ்காரர்கள் ஜீப்பை தூர நிறுத்திவிட்டு நடந்து வந்திருக்கின்றார்கள்.

யார் அந்த நபர்? நான் இது பற்றி தங்கண்ணாவிடம் கேட்டபோது அவர் சிரித்தபடியே தாங்கள் வெளியே போகும்போது தெரியும் என்றார். மேலும் நீர்வேலி வங்கிக் கொள்ளைப் பணம், இயக்கத் தலைமை என்பவற்றை சிறீ ஏற்றதையிட்டு தான் திருப்தி அடைவதாகவும் கூறினார். ஏனெனில் தான் பிரபாகரனை நம்பவில்லை என்று கூறினார்.

அதன்பின் தங்கண்ணாவுடன் கைதுசெய்யப்பட்ட வெள்ளை மாமா என்று செல்லமாக அழைக்கப்படும் சிவசுப்பிரமணியம் என்பவர் தமது படகு பயணத்தை ஏற்பாடு செய்தவர் பிரபாகரன் என்று கூறினார். இவர்கள் கைது செய்யப்பட்டு ஜீப்பில் அழைத்துச் செல்லும்போது கூடத் தங்களைக் காப்பாற்றி இருக்க முடியும் என்றும் ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை என்பது அவர்களிற்கு இருந்த கேள்வி?

மேலும் முக்கியமான விடயம் 1983ம் ஆண்டு வைகாசி மாதம வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்குரிய கைதிகளை வெலிக்கடைச் சிறைக்கு அரசு மாற்றியது. இதில் கெட்ட நோக்கம் இருந்தது பின்பு தெரிந்தது. வெலிக்கடையில் தண்டனை விதிக்கப்பட்டு ஏற்கனவே இருந்த தங்கண்ணா, குட்டிமணி ஏனையோர் ஒரு BLOCK இலும் தண்டனை விதிக்கப்படாத ஏனையோர் அதே கூட்டத்தில் வெவ்வேறு BLOCK இலும் அடைக்கப்பட்டனர் அப்போது மிகுந்த சிரமங்களிற்கு மத்தியில் வெவ்வேறு BLOCK இல் இருந்தவர்களிடையே தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டது. இத் தொடர்பின் மூலம்

11ம் பக்கம் பார்க்க..



81 ஏப்ரல் 5ம் திகதி ஸ்கந்தாளி பலத்த பாதுகாப்புடன் கொழும்பு செல்லப்படும் போது..: குட்டிமணி, தங்கத்துரை, சிவசுப்பிரமணியம் தேவன்

# ஆழமாகும் நம்பிக்கையீனத்தின் மத்தியில் நம்பிக்கைக் கீற்றுக்கள்

## மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்

வன்னியில் நடந்த மரணதண்டனைகள்: ஜூலை 6, 1992 கண்கண்ட சாட்சி

'வவுனியாவுக்கு காலை ஆறு மணியளவில் சென்று கொண்டிருந்த பயணிகள் பேய்க்குளத்தில் வரிசையாக நின்றனர். 7.30 மணி வரை யாரும் அனுமதிக்கப்படவில்லை. 'எங்களை இன்று போக விட மாட்டார்கள்' என்று ஒருவர் சொன்னார். 8.15 மணியளவில் இரண்டு புலிகள் சாதாரண உடையில் வந்து ஆயிரக்கணக்கில் நின்ற மக்களை வடக்கு நோக்கி செல்லுமாறு கட்டளையிட்டனர். சிறிது தூரம் தள்ளி பாதையின் வலப்புறத்தில் உள்ள வெளியொன்றில் இருக்குமாறு அமர்த்தப்பட்டது. யாருக்கும் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. 9.30 மணிக்கு புலிகளில் ஒருவர் வந்து மக்களை அமைதியாக்கி விட்டு பேசத் தொடங்கினார். 'இன்று எங்கள் விடுதலைப் போராட்டம் உச்சத்தை அடைந்த வேளையில் சில துரோகிகளும் சமூக விரோத சக்திகளும் எங்கள் போராட்டத்தை பலமிழக்க செய்ய முயற்சிக்கின்றன. எங்கள் மண்ணில் வாழ்ந்து இரகசியமாக எங்கள் மக்களுக்கு எதிராக செயற்படுகின்ற பல துரோகிகளை இன்று பிடித்துள்ளோம். கடந்த இரு வாரங்களாக, பயணிகள் கொண்டு செல்லும் கடிதங்களை சோதனையிட்ட போது, பல இரகசிய தகவல்கள் வெளியில் வசிக்கும் துரோகிகளுக்கு செல்வதைக் கண்டுபிடித்தோம். கடந்த காலங்களில் போராட்டமானது துரோகிகளாலும் சமூக விரோத சக்திகளாலும் பெரும் இழப்புகளை சந்தித்தது. எனவே துரோகிகளை அடையாளம் காண நீங்கள் உதவ வேண்டும்'

பேசிக் கொண்டிருக்கும் போது மூடப்பட்ட எல்ப் வான் ஒன்று வந்தது. முதலில் இரண்டு பெண்கள், கண்களும் கைகளும் கட்டப்பட்டு இறக்கப்பட்டனர். பின்னர் அதே போல எட்டு ஆண்கள் இறக்கப்பட்டனர். பெண்கள் சுமார் 35 வயதுடையவர்கள். ஆண்களில் மூவரைத் தவிர மற்றவர்கள் இளைஞர்கள். இவர்கள் தான் துரோகிகள், எங்களுக்கு காட்டப்படுகின்றார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டோம். அவர்களின் முகங்களைப் பார்க்க நாம் ஆவலாய் இருந்தோம். எங்களிடமிருந்து பத்துப் பதினைந்து யார் தூரத்தில் அவர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். அப்போது பஜேரோ ஜீப் ஒன்று வந்தது. சாதாரண உடையில் ஒருவரும் மேலும் ஐந்து பேரும் இறங்கினர். மக்கள் கூட்டம் 'மாத்தயா, மாத்தயா' என்று கிசுகிசுத்தது. துரோகிகளுடன் எல்ப் வானில் வந்த ஆறு பேரும் பயங்கரமான முகங்களைக் கொண்டிருந்தனர். அவர்களின் கையில் கறுப்புபட்டி காணப்பட்டது. முகத்தில் எந்த சிரிப்பும் இல்லை. துரோகிகளுக்கு பதினைந்து யார் தூரத்தில் ஆயுதங்களுடன் அவர்கள் தயாராக நின்றனர்.

முதலில் பேசியவர் தனது பேச்சைத் தொடர்ந்தார். 'எமது போராட்டத்துக்கு எதிராக செயற்பட்ட இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஒரு போத்தல் சாராயத்துக்காகவும் ஆயிரம் ருபாவுக்காகவும் இவர்கள் எதிரிகளுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் தங்கள் குற்றங்களை பகிரங்கப்படுத்துவார்கள்' என்றார். எல்லோரும் தாங்கள் அரசாங்கத்துக்கு தகவல் கொடுத்ததாகவும் நியாயமான தண்டனையை ஏற்றுக் கொள்வதாகவும் கூறினர். இருவர் மட்டும் 'நாங்கள் அப்பாவிகள், சித்திரவதையைத் தாங்க முடியாமல் தான் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டோம். எங்களை மன்னியுங்கள்' என்று கத்தினர். உடனடியாக சுடும்படி உத்தரவிடப்பட்டது. கூட்டத்தில் இருந்த பெண்கள் ஐயோ, கடவுளே என்று கத்தினர். பலர் தலையைத் தாழ்த்திக் கொண்டனர். என் உடம்பெல்லாம் குளிர் பரவியது. அவர்கள் நிலத்தில் விழுந்து கத்திக் கொண்டே உயிரை விட்டார்கள். சுட்டவர்களில் இருவர் இறந்தவர்களுக்கு அருகில் சென்று அவர்களைச் சோதித்தனர். ஒருவர் பெரிய கத்தியை எடுத்து இறந்தவர்களில் ஒருவரின் தலையை வெட்டினார். பின்னர் மயிரில் பிடித்து தலையை மக்களுக்கு காட்டினார். 'இராணுவம் இவனை உளவு பார்க்க அனுப்பியது. இப்போது அவனது தலையை இராணுவத்துக்கு அனுப்புவோம்' பெண்களும் வயதான

பயணிகளும் நடுங்கினர். எனது கைகளும் கால்களும் செயலிழந்தன.

முதலில் பேசியவர் 'இப்போது நீங்கள் வவுனியாவுக்கு போக முடியாது. நாளை வாருங்கள். எல்லாரும் போகலாம்' என்றார். பலர் எழுந்து இறந்தவர்களைப் பார்க்க சென்றனர். என்னால் நடக்க முடியவில்லை. நான் பின்னர் கிளிநொச்சிக்குத் திரும்பினேன். சாப்பிட முடியாமல் நித்திரை கொள்ள முடியாமல், ஒரு போத்தல் சாராயத்தைக் குடித்து விட்டுப் படுத்தேன். ஒன்பதாம் திகதி மீண்டும் பயணம் செய்த போது கியூவில் நின்றவர்கள் சம்பவம் பற்றி பேசுவதைக் கேட்டேன்.

புலிகள் தலையை பார்சலில் வைத்து ஒரு பெண் பயணியிடம் கொடுத்து அனுப்பி விட்டனர். இராணுவம் அந்தப் பெண்ணை அவரது பைகளை வைத்து விட்டு பார்சலை மீண்டும் புலிகளிடம் கொடுத்து விட்டு வரும்படி கட்டளையிட்டனர். (இது குறித்த சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கை முன்னர் தாயகத்தில் வெளிவந்தது.. ஆ-ர்)

ஆறும் திகதி யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று பெண் மருத்துவ மாணவிகள் கூட்டத்தில் இருந்தனர். என்ன நடக்கப் போகிறது என்பது பற்றி உணர்ந்த அவர்கள் அவ்விடத்தை விட்டு நகர முயன்றனர். பின்பகுதியில் நின்ற புலி அவர்களை நிறுத்தி எங்கே போகிறார்கள் என்று கேட்டு அவர்களின் அடையாள அட்டைகளைக் கேட்டார். அவர்களைப் பற்றி அறிந்ததும், 'நீங்கள் டாக்டராகப் படித்து மக்களை வெட்ட வேண்டும். எனவே உங்களுக்கு இரத்தம் பற்றி பயம் இருக்கிறதா? நீங்கள் தான் இதைப் பார்க்க வேண்டும்' என்று கூறி மறித்து விட்டார். கண்ணீர் மல்க அந்தப் பெண்கள் 'எங்களுக்கு பயமாயிருக்கிறது, நாங்கள் போக வேண்டும்' என்று கூறினர். அவர்கள் போக அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் போய் 300 யார் தூரத்திற்குள் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் வவுனியா ஐ. தே.க அமைப்பாளர் புலேந்திரனின் சாரதியாவர் எனக் கேள்விப்பட்டேன். அவர் லொறி சாரதியாக வேலை செய்து பின்னர் விசுவமடுவில் வைத்து புலிகளால் பிடிக்கப்பட்டார்.

மாத்தயாவின் நிலைமை இயக்கத்தில் கேள்விக்குறியாய் இருந்த நிலையிலேயே இந்த சம்பவம் நடந்ததாக அவதானிகள் கூறுகிறார்கள். இதற்கு புலிகளின் உள்சச்சரவு காரணமாயிருக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். இப்போது நம்பத்தகுந்த வட்டாரங்களின் தகவல்படி மாத்தயா புனர்வாழ்வு; அகதிகள் விவகாரங்களில் செயற்படுகிறார். இவர் உளவுப்பிரிவின் செயற்பாடுகளில் தலையிடுகிறார் என்று முறைப்பாடே இவரது பதவியிறக்கத்திற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

பத்திநாதர் சந்தியாப்பிள்ளை என்ற 36 வயதானவர் (நாவாந்துறை சென். மேரிஸ் வீதி) புலிகளால் 1990 இல் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். 19 டிசம்பர் 1992 இரவு இவரது மனைவிக்கு இவர் கொல்லப்பட்டதாக செய்தி கூறப்பட்டது. இவர் மற்ற அமைப்பு ஒன்றுக்கு உதவியதே இதற்கு காரணம் என கூறப்பட்டது. இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

1986 மட்டில், புலிகள் நாவாந்துறையில் பிரச்சனைகளை எதிர்நோக்கினர். அப்போது பத்திநாதர் விசயன் என்பவரைப் புலிகள் கொன்றனர். சந்தியாப்பிள்ளை அவரது சகோதரன் ஆவார். பல சந்தர்ப்பங்களில் புலிகள் ஆண்டுக்கணக்காக காத்திருந்து குறிவைத்தவர் மீது நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பம் பார்த்திருப்பார்கள்.

---

## யூலை 83....

சிறையில் இருந்து தப்பும் திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி 83 மார்கழி நத்தார் கொண்டாட்டத்தின் போது சிறையுடைத்துத் தப்புவது என்றும் அதுவரையிலும் வெளியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அனைத்து இயக்கங்களையும் கேட்டுக் கொள்வது என்று முடிவானது. வெளியில் இராணுவ நடவடிக்கை நடக்காவிட்டால் அரசின் பாதுகாப்பில் தேக்கம் ஏற்படும் அந்த நேரத்தில் சிறையுடைத்து தப்புவது இலகுவாக இருக்கும் என்ற நம்பிக்கை.

பிரபாகரனுக்கும் இது தெரிவிக்கப்பட்டது. ஆனால் செய்தி தெரிவிக்கப்பட்ட சில தினங்களில் பிரபாகரனால் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தமிழர் போராட்டம் திசை மாறியது! சிதைக்கப்பட்டது! யூலை 23 ம் திகதி தண்டனை பெற்ற கைதிகள் உள்ள BLOCK இலும் தங்கத்துரை, குட்டிமணியும் இன்னும் ஓர் BLOCK லும் உள்ளவர்கள் வெறியூட்டப்பட்ட சிங்களக் கைதிகளால் கொல்லப்பட்டனர். 25ம் திகதி நடந்த தாக்குதலில் மற்றைய இரண்டு BLOCK இல் இருந்தவர்களில் சிலர் கொல்லப்பட்ட ஏனையோர் தப்பினர்.

தங்கத்துரை, குட்டிமணி இறந்து 10 வருடங்களாகி விட்டன. பல தடவைகள் இந்தியா உட்பட ஏனைய இடங்களில் இவர்களிற்காக அஞ்சலி செலுத்தப்பட்டது. எல்லா இயக்கங்கள் சார்பிலும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர் புலிகளைத்தவிர!

இப்போது தங்கத்துரை மீது புலிகளிற்கு பாசம் வரக் காரணம்? யாரெல்லாம் இவர்களை மன்னிக்கிறார்களோ தெரியாது ஆனால் தங்கத்துரை, குட்டிமணியின் ஆன்மாக்கள் நிச்சயம் இவர்கள் மன்னிக்காது

நாடு காப்பதற்கே உனக்கு ஞானம் சிறிது முண்டோ

# மன்னர்கள் தமிழ் வாலிபர்களைப் பலியிட்டனர்

## புறநானூறு காட்டும் சங்க மறவர் போர்வெறி

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை
(தமிழ்த்துறைத் தலைவர். யாழ். பல்கலைக்கழகம்)

(தமிழ் இலக்கிய வரலாற்றை ஐந்து காலங்களாகப் பகுத்து பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை எழுதிய "தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்" வரலாற்று ஆய்வாளர்களுக்கு உதவும் மிகச் சிறந்த உசாத்துணை நூல் மட்டுமல்ல, சாதாரண வாசிப்பிற்கும் இலகுவானது. பேராசிரியரின் வரலாற்றுப் பார்வை ஆழமானது, அகலமானது மட்டுமல்ல துணிச்சலானதும் கூட. பிரஸ்தாப ஆய்வு நூலில், தமிழர்களினது இயற்கை நெறிக்கால வாழ்வியலிலே போரினது யதார்த்தம் பற்றிப் பேராசிரியர் எழுதியவைகளே இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகின்றன. எமது சமகால போர் யதார்த்தத்தை விளங்க உதவுமெனலாம். மறுபிரசுரத்திற்கான தலைப்பு பேராசிரியருடையதல்ல! தொகுப்பாளருடையது.

– எஸ். கௌந்தி)

சங்க காலத் தமிழ்நாட்டில் மன்னர் பலர் இருந்து பல போர்களில் ஈடுபட்டனர். சங்க காலத்திய வள்ளல்களுட் பெரும்பாலோர் மன்னராக இருந்திருக்கின்றனர். அக்காலத் தமிழகத்திலே சேர, சோழ, பாண்டிய மன்னர் குலங்கள் மேம்பட்டிருந்தன. சேர சோழ குலங்களில், ஒரே காலத்திற் பல்வேறு மன்னர் பல்வேறு பகுதிகளிலிருந்தாண்டனர். வெவ்வேறு பகுதிகளிலிருந்தாண்ட சோழ குலத்து மன்னர் இடையிடையே ஒருவரோடொருவர் பகைத்துப் பொருதினர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிற்றரசர் பலர் ஆங்காங்கிருந்து பணிந்து வாழ்ந்தனர் எனக் கருதுவதற்குப் புறநானூற்றுச் செய்யுட்கள் இடமளிக்கவில்லை. மன்னர் பலர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆண்டமையால் புறநானூற்றுக்காலத் தமிழகத்தை ஆண்டவர்கள் பெரும்பாலும் குறுநில மன்னர்களெனலாம்.

புறநானூற்றுச் செய்யுட்களுட் பெரும்பாலான போரைப் பற்றிய செய்திகளைக் கூறுவன. சிறு சிறு நிலப்பரப்புகளை ஆண்ட மன்னர்களுக்கு உலகம் முழுவதிலும் தம் ஆணையைச் செலுத்த வேண்டும் என்ற ஆசை மட்டும் மிதமிஞ்சி இருந்திருக்கிறது. அதனாலேயே அக்காலத் தமிழகமெங்கும் போர்கள் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன. வென்று மேம்படும் ஆசையால் உந்தப்பட்டு மன்னர் மோத, அவராட்சியில் அடங்கிய மக்களும் மோதினர். புறநானூற்றுக் காலத்திற் புகழும் பெருமையும் வீரத்தின் வழிவந்தன. 'வெற்றி அல்லது வீர மரணம்' என்ற நிலைக்கு ஒரு தனிக் கவர்ச்சி இருந்ததாகத் தெரிகிறது. மன்னர் தலைமையில் ஒன்று கூடி ஒற்றுமையாக நின்று போராடுவதிலும் மன்னுக்குத் தம் சேவை தேவையென்றுணர்திலும் புறநானூற்றுக்கால மக்கள் மகிழ்ந்தனர். தம்முடைய நாட்டை ஆபத்துச் சூழ்ந்துள்ள நிலையிலே தமது தனிப்பட்ட துன்பங்களையும் கோபதாபங்களையும் மறந்து, நாட்டின் நன்மை கருதி ஒன்றுபட்டு உழைக்க ஏற்பட்ட சந்தர்ப்பம், போரால் ஏற்படுகிற நன்மைகளுள் ஒன்று. தம்முடைய மனத்திலிருந்து தீய இயல்புகள் யாவும் பொருந்தியவராக எதிரிகளைப் பாவித்து அவரை அழிக்க முயலும்போது, வீரருக்குச் சுயதிருப்தியும் தம்மவர் மேல் பற்றும் ஏற்படுத்துகின்றன. எனவே மன்னருக்கிடையில் ஏற்பட்ட போரில் மக்களும் முழுமனத்தோடு ஈடுபட்டனர்.

போரால் நாடு அடைந்த சீர்கேட்டை வெளிப்படையாகக் கூறும் செய்யுட்கள் சில: மறைமுகமாகச் சுட்டுவன வேறு சில. 'பகைவருடைய நாட்டைச் சுடும் நெருப்பினுல் உன்னுடைய தலைமாலை வாடுவதாக' என்று மன்னன் வாழ்த்தப்பட்டான். பகைவர் ஊரைத் தீயிலிட்டு அவ்வெளிச்சத்தில், ஊர்மக்கள் அழுது ஒலமிடக் கொள்ளையடித்துப் பகைவர் நாட்டைச் சிதைத்தான் மன்னன். யமன் உயிர்களைக் கவர்வது போல, பகைவரை அழித்தவன் நெடுஞ்செழியன். பகைவருடைய அரணை முற்றுகையிட்டு நீரில்லாமல் மக்கள் வாடவும் பாலில்லாமற் குழந்தையலறவும் கொடுமை செய்யப்பட்டது. போர்கள் நடைபெற்ற போது, பகைவர் ஊர்களுக்கு தீ வைக்கப்பட்டது. கொள்ளையடிக்கத்தக்க செல்வங்கள் கொள்ளையிடப்பட்டன: எடுத்துச் செல்ல முடியாத பொருள்கள் அழிக்கப்பட்டன; அல்லது வெளியில் வீசப்பட்டன. தோற்ற பகைவர் அவமானப்படுத்தப்பட்டதைப் பல செய்யுட்கள் எடுத்து மொழிகின்றன. பகைவருடைய அரணகத்தேயுள்ள தெருக்களிலே கழுதையை ஏர்பூட்டி உழுது பாழ்படுத்திய பெருமை, பகைவருடைய நீர் நிலைகளில் யானையை விட்டு அவற்றைச் சிதைத்த வீரம்,

விளைந்த பயிர்களைக் குதிரை பூட்டிய தேரால் உழக்கிக் கெடுத்த சிறப்பு என்பன போற்றப்பட்டது. புறநானூற்றுப் பாடல் ஒன்று வருணிக்கும் கள வேள்வி குரூரமானதாகக் காணப்படுகிறது. வெட்டப்பட்ட பகைவர் தலைகளையே அடுப்பாகக் கொண்டு உத்திரமே உலைநீராகத் தசை, மூளை முதலாயினவற்றை இட்டுத் தோள்களைத் துடுப்பாகக் கொண்டு துழாவி அடப்பட்ட உணவால் அடுகளத்தின் கண்ணே பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அத்தகைய வேள்வியைச் செய்தான். போர் நிகழுங்காலத்தில் அப்போரில் பங்குபற்றுவோரின் உணர்ச்சி மரத்துவிடுகிறது என்ற உண்மைக்குச் சங்க காலம் விதிவிலக்கல்ல என்பது தெரிகிறது.

போரால் ஏற்பட்ட அழிவுகளை எடுத்துக் கூறும் புறநானூற்றுச் செய்யுட்கள் இன்னும் பல. புறநானூற்றிற் காணப்படும் போர்களுட் பெரும்பாலான, தமிழ் மன்னர்களுக்கிடையே நடைபெற்றவை. கொலையையும் கொள்ளையையும் உள்ளடக்கியதே போர். போரிற் கொலையையும் கொள்ளையையும் நிறையச் செய்பவனே வீரன் எனப் போற்றப் படக்கூடிய சூழ்நிலை நிலவியது. மன்னராற் போற்றிப் பரிசில் வழங்கப்பட்ட வீரரும் நடு கல்லமைத்து வணங்கப்பட்ட வீரரும் இத்தகையோரே, பிறரெல்லாம் தமக்கு அடி பணிய வேண்டும் என்ற அவாவால் உந்தப்பெற்று அக்கால மன்னர், தமிழ் வாலிபர்களைப் பலியிட்ட கதையே புறநானூற்றிற் பெரும்பான்மையாகக் கூறப்படுகின்றது. வெற்றி தோல்வி எவரையடைந்த போதிலும் இரு கட்சியிலும் சிந்தியது தமிழ் இரத்தமே. போர் என்றால் கொலையும் கொள்ளையும் ஒரு புறம், கண்ணீரும் இரத்தமும் மறுபுறம். பகைவருந் தமிழரே என்ற ஈவு இரக்கங்காட்டி நடந்ததற்குப் புறநானூற்றிற் சான்றரிது. தமிழரில் ஒரு சாரார் இரத்தஞ் சிந்த, மற்றொரு சாரார் வெற்றி விழாக் கொண்டாடினர். போர்களங்களில் வீரர் கொல்லப்பட்டு இறந்து கிடப்பதைப் பாடும் செய்யுட்கள் பல.

போர்வெறி காரணமாக மன்னரும் படை வீரரும் மாள,

கொலையையும் கொள்ளையையும் உள்ளடக்கியதே போர். போரிற் கொலையையும் கொள்ளையையும் நிறையச் செய்பவனே வீரன் எனப் போற்றப் படக்கூடிய சூழ்நிலை நிலவியது. பிறரெல்லாம் தமக்கு அடி பணிய வேண்டும் என்ற அவாவால் உந்தப்பெற்று அக்கால மன்னர், தமிழ் வாலிபர்களைப் பலியிட்ட கதையே புறநானூற்றிற் பெரும்பான்மையாகக் கூறப்படுகின்றது. வெற்றி தோல்வி எவரையடைந்த போதிலும் இரு கட்சியிலும் சிந்தியது தமிழ் இரத்தமே. போர் என்றால் கொலையும் கொள்ளையும் ஒரு புறம், கண்ணீரும் இரத்தமும் மறுபுறம். பகைவருந் தமிழரே என்ற ஈவு இரக்கங்காட்டி நடந்ததற்குப் புறநானூற்றிற் சான்றரிது. தமிழரில் ஒரு சாரார் இரத்தஞ் சிந்த, மற்றொரு சாரார் வெற்றி விழாக் கொண்டாடினர்.

அவர்களுடைய பெண்டிர் அக்களத்தே சென்று மாண்ட கணவரைத் தழுவித் தம்முயிர் நீக்குதலைப் புறநானூற்றுச் செய்யுளொன்று குறித்துள்ளது. மன்னரும் படைவீரரும் மாண்டு விட்டதனால், நாட்டின் கதி என்னவாகுமோ என்று அங்கலாய்க்கிறது அடுத்த செய்யுள். காதலர் இறந்த துயரம் பொறாது கனையெரி மூழ்கினர் மங்கையர் என்கின்றது மற்றொரு செய்யுள். இயற்கை நெறிக் காலத்திலேயே கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பு நோற்றுத் தம்மைத் துன்புறுத்தியவாற்றைப் புறநானூற்றுச் செய்யுட்கள் தெளிவாகக் குறிக்கின்றன. கணவனையிழந்த பெண்டிர் அறிவு மயங்கி, அழகை மிக்குக் கூந்தலைக் கொய்து கைம்மை நோன்பு தொடங்கினர். வீர வாலிபர்களைப் பெருந்தொகையாகப் பலிகொடுக்கும் சமுதாயம் அப்பலியால் இளம் பெண்களைப் பெருந்தொகையாகக் கைம்மை நோன்பிற் புகச்செய்தல் இயல்பாகும். அத்தகைய சமுதாயத்திலுள்ள மக்கள் தம் வாழ்க்கையில் சலிப்படைதல் உண்டு. வாலிபர்களும் இளம் பெண்களும் சமுதாயத்தில் முதியோரையும், குழந்தைகளையும் காப்பாற்றிச் சமுதாய ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள். அவர்கள், போரின் காரணமாக அழிவுப் பாதையிற் செல்வது தெரியவருகிறது.

போரால் சமுதாயத்திற்கு ஏற்படக் கூடிய கேடுகள் பற்றி அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் நன்கு உணர்ந்திருக்கவில்லை என்பது புறநானூற்றுக்கா... வீரர்கள் கூற்றுக்கள் சிலவற்றிலும் வீரத்தாய்மார்கள் கூற்றுக்கள் சிலவற்றிலும் புலப்படுகிறது. சமுதாயம் இடம் கொடுத்திராவிட்டால் மன்னர் போர் செய்தலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்திருக்க முடியாது. ஆனால், மன்னர் ஏவியதனாலேயே போர்கள் பெரும்பாலும் நடைபெற்றன. போரால் ஏற்படும் அழிவு, அதனால் ஏற்படும் நன்மையிலும் அதிகம் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. போர் ஒரு கோணத்தில் இருந்து பார்க்கும் போது, பயனுள்ளதாகத் தெரிவதாற்றான், அது இன்னும் உலக வாழ்க்கையிலிருந்து அற்றுப்போகவில்லை. ஆனால் போர் நடக்கும் காலத்திலும் போர் முடிந்த அண்மைக்காலத்திலும் மக்கள் மனம் அமைதியை நாடுகிறது. போரால் ஏற்படும் அழிவு உலகிற் போரேற்படுவதையே இல்லாமற் செய்துவிட வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றது.

# கறை படிந்த ஜூலையின் மறைந்த புகைமண்டலம்

## விக்டர் ஐவன் (ராவய ஆசிரியர்)

இன்னும் சில தினங்களில் 83 ன் கறை படிந்த ஜூலைக்கு பத்து வருடங்கள் பூர்த்தியாகின்றன. 1983ம் ஆண்டில் கறை படிந்த ஜூலை சம்பவங்கள் இடம் பெற்றிருக்காவிடின் இலங்கையின் இனப்பிரச்சனையானது கடுமையான யுத்தமாக மாறியிருக்க மாட்டாது எனக் கூறமுடியும். அதுவரை காலமும் தமிழ் மக்கள் மத்தியிலே அதிருப்தி நிலவவில்லை என்பது இதன் அர்த்தம் அல்ல. அவர்கள் மத்தியில் பிரதிச் செயலாற்றும் நிலைமைக்கு அவர்கள் தள்ளுப்பட்டிருக்கவில்லை. தமிழ் இளைஞர் சமுதாயத்தின் ஒரு சிறு பகுதியினர் மத்தியிலே வன்முறைப் போராட்டத்தை நோக்கிய போக்கு காணப்பட்டது என்பதும் உண்மையே. ஆயினும் வன்முறைப் பாதையை நோக்கிய இவ் இளைஞர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறுபகுதியினராக இருந்ததோடு இச்சிறு பகுதியினருக்கு தமிழ்ச் சமுதாயத்தில் அரசியல் ரீதியாக அங்கீகாரம் இருந்தது என்பதையும் காண முடியவில்லை.

ஆனால் குதிரைப்படையின் திடீர் தாக்குதல்கள் போல் ஏற்பட்ட 83 ஜூலைச் சம்பவங்கள் அந்நிலைமையை முற்றுமுழுதாக மறுபக்கத்துக்கு புரட்டின என்பது தெளிவானதே. இதற்கு முன்னரும் இடையிடையே தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறாக இடையிடையே பல தசாப்தங்களுக்கு நடாத்தப்படும் தாக்குதல்கள் அனைத்தும் ஒன்றாக திரண்டு ஒரு சில தினங்களில் நடாத்தப்பட்டதற்குச் சமமானதே 83 ஜூலைச் சம்பவங்களாகும். அச் சந்தர்ப்பத்தில் இடம்பெற்ற கொடுமைகளின் அளவும் தன்மையும் மீண்டும் ஒரு தடவை எண்ணிப் பார்க்க முடியாத அளவு மிலேச்சத் தன்மை கொண்டவையாகும். பொலீசாரின் உத்தியோகபூர்வ தகவல்களின்படி முதல் 7 நாட்களுக்குள் கொல்லப்பட்டோர் 471, காயமடைந்தோர் 3769. கொள்ளைச் சம்பவங்கள் 3835, தீவைப்பு 8077 ஆகும். கொழும்பு நகருக்குள் மட்டும் 64,000 பேர் அகதிகளாக்கப்பட்டனர். ஏனைய சிங்களப் பிரதேசங்களில் வசித்த ஒவ்வொரு தமிழ் மனிதனும் அகதி நிலைக்கு இழுத்துத் தள்ளப்பட்டான். சிறை வைக்கப்பட்டிருந்த குட்டிமணி உட்பட 51 தமிழ் சந்தேக கைதிகள் இரு சந்தர்ப்பங்களில் படுகொலை செய்யப்பட்டது இடம் பெற்ற மிகவும் மனித தன்மை அற்ற சம்பவங்களில் ஒன்றாகும்.

தமது பாதுகாப்புக்காக தமது அரசை உருவாக்கவேண்டும், தமக்கு நிகழ்ந்த இன்னல்களுக்கு பழிவாங்குவதானாலும் தமது கையில்

### தமிழாக்கம்;செ.லோகநாதன் (ராவய ஜூலை 18, 1993)

ஆட்சிப் பொறுப்பை எடுக்க வேண்டும் என்பதைத் தவிர தமக்கு முன்னால் வேறு எந்தப் பாதையும் கிடையாது என்னும் நிலமைக்கு தமிழ் மக்கள் தள்ளுப்பட்டது 83 கறைபடிந்த ஜூலை சம்பவங்களுக்குப் பின்னரேயாகும். ஜனநாயக அரசியல் ஓட்டத்தில் செயல்பட்ட தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி போன்ற கட்சிகளுக்கு இருந்த அங்கீகாரம் உடைந்ததோடு வன்முறைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட தமிழ் விடுதலைப் புலி இயக்கம் போன்ற கொடுமையான அரசியல் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் மத்தியில் பரந்த வரவேற்பு கிடைக்கத் தொடங்கியது இக்காலகட்டத் திலிருந்தேயாகும்.

இனரீதியான பிரச்சனைகளை கடுமையான யுத்த நிலமைக்கு மாற்றிய இச் சம்பவங்களுக்கு பொறுப்பாளிகள் யார்.? ஜனதா விமுக்தி பெரமுன (ஜேவிபி) நவ சமசமாஜக் கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளுமே இச் சம்பவங்களுக்கு பொறுப்பாளிகள் எனக் கூறிய அரசாங்கம் ஜூலை 30 ம் திகதி இம் மூன்று கட்சிகள் மீது தடை விதித்தது. ஆனால் இக்கட்சிகள் எவற்றுக்கும் இச் சம்பவங்களுடன் எவ்வித தொடர்பும் இல்லை என்பது மிகவும் தெளிவான விடயம் ஆகும். பூரணமாக தமது மன விருப்புடன் அல்லாவிடினும் ஜனநாயக ஓட்டத்தில் இணைந்திருந்த ஜே.வி.பி. மீண்டும் ஆயுதங்களை கையில் ஏந்தும் செயல் முறைகளை நோக்கித் தள்ளப்படுவதற்கு அரசு இச்சந்தர்ப்பத்தில் கடைப்பிடித்த தவறான, கேடுகெட்ட கொள்கைகளே காரணமாகும். 83 ன் கறைபடிந்த ஜூலைச் சம்பவங்கள் வெறுமனே தமது சகோதர ஆயுதப்படையினர் மீது தொடுக்கப்பட்டு வந்த தாக்குதல்கள் காரணமாக வளர்ந்து வந்த கோபம் வெடித்ததனால் ஏற்பட்ட குறியற்ற சமாந்தரமான விளைவா? அல்லாவிட்டால் அமைப்பு படுத்தப்பட்ட சதி நடவடிக்கையா?

இவை பற்றி ஏற்கனவே பலதரப்பட்ட கருத்துக்கள் வெளிவந்துள்ளன. ஆட்சிப் பொறுப்பிலிருந்த சில தலைவர்களுக்கும் இச்சம்பவங்களுக்கும் தொடர்புண்டு என்பது ஒரு சில தமிழ் தலைவர்களின் அபிப்பிராயமாகும். 83ன் ஜூலை சம்பவங்கள் பற்றி ஆய்வு செய்த ஜோனதன் ஸ்பென்ஸர், கனநாத்த ஒபேசேகர, ஜேம்ஸ் மெனன் போன்ற அறிவாளிகளும் இதற்குச் சமாந்தரமான கருத்துக்களையே வெளியிட்டுள்ளனர். ஆனால் அவ் விபரங்கள் அனைத்திலும் அரசாங்கத்துக்குள் இருந்த ஒரு சில இனவாத தலைவர்களுக்கு தொடர்புகள் இருந்ததாக மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அவ்வாறான ஒன்றுக்கு மேலாக மிகவும் நன்றாக திட்டமிடப்பட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இயக்கத்தின் விளைவே இச்சம்பவங்கள் என்பது இதனை எழுதுபவரது கருத்தாகும்.

இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரசாங்கக் கட்சியைச் சார்ந்த தமிழ் தலைவர் ஒருவரால் கூறப்பட்ட விடயங்களை, இவற்றைக் கூறவேண்டாம் என அவரால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளைப் பற்றியும் சிரத்தை கொள்ளாமல், அத்துர்ப்பாக்கிய சம்பவங்களுக்கு பத்து வருடம் பூர்த்தியாகும் இவ் விசேட சந்தர்ப்பத்தில் அதனை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

எனக்குக் கூறப்பட்ட விடயங்கள் சுருக்கமாக பின்வருமாறு: ஒரு நாள் மாலைப் பொழுதை சந்தோச சம்பாஷணை மூலம் கழிப்பதற்காக நானும் எனது தமிழ் நண்பர் ஒருவரும் நாம் ஏற்கனவே ஒத்துக் கொண்டவாறு தலைநகரில் வாழும் வெளிநாட்டு தூதுவராலய உத்தியோகத்தர் ஒருவரது வீட்டிற்குச் சென்றோம். நாம் அவ்வீட்டிற்குச் செல்லும் போது அங்கு இலங்கையர் இருவர் காணப்பட்டனர். இவ் இருவரும் எனது நண்பனுக்கு

புதியவர்கள் அல்லாத போதிலும் அவர்களில் ஒருவரான ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளரும் கொழும்பு மாநகரசபை பிரதி முதல்வருமான கே. கணேசலிங்கம் அவர்கள் எனக்கு புதியவரே.

நான் திரு.கணேசலிங்கத்தைச் சந்தித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகும். அவர் காலஞ்சென்ற சிறில் மத்தியூ அவர்களின் நெருக்கமான நண்பன் என்பதை நான் அறிவேன். கணேசலிங்கம் போன்ற தமிழர் ஒருவர் சிறில் மத்தியூ போன்ற உக்கிரமான தமிழ் விரோதியுடன் நெருக்கமான நண்பனாக இருப்பது எவ்வாறு என்பதை அறியும் தேவையும் எனக்கிருந்தது. நாம் ஒருவரை அறிமுகம் செய்து கொண்ட பின்னர் அவ்விடயம் பற்றி கணேசலிங்கம் அவர்களிடம் வினவுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.

**திரு கணேசலிங்கம் அச்சம்பவங்களுடன் சிறில் மத்தியூ அவர்களுக்கு மட்டுமன்றி அக்காலத்தில் அரசாங்கத்திலிருந்து பிரதான தலைவர்கள் அனைவருக்கும் தொடர்பு இருந்தது எனவும் 83 ஜூலை சம்பவங்கள் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் பட்டவை என்பது தனக்கு மிக நன்றாகத் தெரியும் எனவும் பதிலளித்தார்.**

அது மிகவும் ஆர்வமான அரசியல் உரையாடலாக மாறியதோடு, வெளிநாட்டு தூதுவராலய உத்தியோகத்தர் வழங்கிய மதுபானம் உதட்டை நனைத்த பின்னர் கணேசலிங்கம் அவர்கள் மிகவும் மனதைக் கவரும் விதத்தில் தனக்கும் சிறில் மத்தியூ அவர்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்புகளைப் பற்றி விபரிக்கத் தொடங்கினார்.

கணேசலிங்கம் அவர்கள் தமிழனாக இருந்த போதிலும், தமிழ் விரோத சிங்கள இனவாத தலைவனாக நான் அறிந்திருந்த திரு சிறில் மத்தியூ குறித்து அவர் கொண்டுள்ள நேர்மையான கௌரவத்தையே அவரது பேச்சின் மூலம் காண முடிந்தது.

சிறில் மத்தியூ தமிழ் விரோத இனவாதி அல்ல என அவர் வலியுறுத்திக் கூறியதோடு சிங்கள சமுதாயத்தில் உள்ள குலவேறுபாடுகள் காரணமாக சிறில் மத்தியூ அவர்களுக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்காத நிலைமைகளின் கீழ் தமது சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவே தன்னை தமிழ் விரோத சிங்கள இனவாதியாக வெளிப்படுத்தினாரே தவிர அவருக்கு தமிழ் விரோத இதயம் இருக்கவில்லை என திரு கணேசலிங்கம் கூறினார். திரு.சிறில் மத்தியூவினால் எழுதப்பட்ட தமிழ் விரோத நூல்கள் சில என்னிடம் இருப்பதாக நான் கூறியபோது தான் அறிந்த வரையில் கடிதம் ஒன்றை நன்றாக எழுதும் ஆற்றல் கூட சிறில் மத்தியூ அவர்களுக்கு இல்லை எனவும் வேறு எவராவது எழுதியவற்றை தனது பெயரில் வெளியிட்டிருக்கலாம் எனவும் திரு கணேசலிங்கம் கூறினார்.

அதன் பின்னர் 1981ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலின் போது இடம் பெற்ற கேடுகெட்ட செயல்களில் சிறில் மத்தியூ அவர்களின் பாத்திரம் பற்றி கேள்வி கேட்டேன். தேர்தல் வேலைகளுக்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற குழுவில் தானும் அங்கம் வகித்ததாகவும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தலின் போது இக்குழுவும் தவறுகளை இழைத்தது என்பது உண்மையாயினும் யாழ் நூல் நிலையத்திற்கு தீமூட்டிய குற்றச் செயலுடன் காமினி திசாநாயக, சிறில் மத்தியூ அவர்களுக்கோ கொழும்பில் இருந்து சென்ற குழுவின் எவருக்குமோ தொடர்பு இருக்கவில்லை எனவும் அச்சம்பவம் அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பொலீஸ் அதிபராக செயலாற்றிய எட்வேட் குணவர்த்தன அவர்களால் செய்விக்கபட்டதெனவும் நூலகம் எரிக்கப்பட்ட செய்தியை கேள்விப்பட்டவுடன் காமினி திசாநாயக, சிறில் மத்தியூ போன்றவர்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியதாகவும் திரு. கணேசலிங்கம் கூறினார்.

அதன் பின்னர் 83 ஜூலை சம்பவங்களுக்கு சிறில் மத்தியூ அவர்களுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றி அறிவதற்காக அதுபற்றி கேள்வி கேட்டேன். அதற்கு திரு கணேசலிங்கம் அச்சம்பவங்களுடன் சிறில் மத்தியூ அவர்களுக்கு மட்டுமன்றி அக்காலத்தில் அரசாங்கத்திலிருந்து பிரதான தலைவர்கள் அனைவருக்கும் தொடர்பு இருந்தது எனவும் 83 ஜூலை சம்பவங்கள் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் பட்டவை என்பது தனக்கு மிக நன்றாகத் தெரியும் எனவும் பதிலளித்தார்.

அரசாங்கத்தால் அவ்வாறான ஒன்று செய்விக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்ற எனது கேள்விக்கு திரு. கணேசலிங்கம் அளித்த பதில், அதுவரை காலமும் வடக்கில் இடம் பெற்று வந்த சம்பவங்கள் குறித்து சிங்கள மக்கள் மத்தியிலே விருத்தி பெற்று நிலவிய கோபம் அரசாங்க விரோத கிளர்ச்சியாக திரும்பலாம் என்னும் பீதி அரசாங்க தலைவர்கள் மத்தியிலே காணப்பட்டது எனவும் அதனை திசை திருப்பும் நோக்குடனேயே அவ்வாறு செயல்படுத்தப்பட்டது எனினும் அது இவ்வளவு தூரத்திற்குச் செல்லும் என்பதை அரசாங்க தலைவர்கள் அச்சந்தர்ப்பத்தில் எண்ணவில்லை என்பதாகும்.

ஜூலை சம்பவங்கள் தொடர்பாக திரு. கணேசலிங்கம் கூறிய விபரங்களை கேட்டவுடன் நான் அமைதியை இழந்து பதட்டமடைந்தேன். ஓரளவு ஆத்திர சுபாவத்துடன் "நீர் தமிழனாக இருந்தும், உமது இனத்திற்கு எதிராக செய்யப்பட்ட சதியில் பங்கு கொண்டது எவ்வாறு" என நான் திரு. கணேசலிங்கத்திடம் கேள்வி கேட்டதனால் மேலும் விபரங்களை கேட்டறிந்து கொள்ள இருந்த வாய்ப்பினை நானாகவே இழந்தேன். அது வரையும் திரு. கணேசலிங்கம் ஓரளவு போதையில் இருந்த போதிலும் மேலே கூறப்பட்ட எனது கேள்விக்குப் பின்னர் அவருடைய வெறி முறிந்ததைக் காண முடிந்தது. எனக்கு விபரங்களைக் கூறுவதை நிறுத்திய திரு. கணேசலிங்கம் அவ்விடத்தில் தான் கூறிய எதனையும் வெளிப்படுத்த வேண்டாம் என மீண்டும் மீண்டும் வேண்டினார். அவருடைய வேண்டுகோளுக்கு செவிசாய்க்கும் வகையிலேயே இரண்டு வருட காலமாக நான் அதுபற்றி எதுவும் எழுதவில்லை. நான் அவற்றை இப்போது அம்பலப்படுத்தியதால் அவருக்கு ஏதாவது அசௌகரியங்கள் ஏற்படுமாயின் அதற்காக வருந்துகிறேன். ஆயினும் அவருக்கு இவ் அம்பலப்படுத்தலால் ஏற்படப்போகும் அசௌகரியங்களை விட நாட்டின் பயணத்தையே முற்றாக மாற்றிய இவ் சம்பவங்களின் உண்மைகளை நாடு அறிய வழி சமைப்பது முக்கியமானதாகும்.

எமது ஆட்சியாளர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய அழிவுகள் கொஞ்சம் நஞ்சமல்ல, அவர்களுக்கு அதிகாரம்தான் அவசியமானது. நாட்டு மக்களின் வாழ்க்கை முக்கியமானதல்ல இப் போலி ஆட்சியாளர்களின் ஆளும் திறமையின் புண்ணியத்தால் இதுவரையும் இரு பக்கத்திலும் பல்லாயிரக்கணக்கானோர் உயிர் இழந்ததோடு பல இலட்சக்கணக்கானோர் அகதிகளாக மாறியுள்ளார். இவ் மிருகத்தனமான யுத்தத்தின் முடிவை இவர்களிடம் இருந்து எதிர்பார்த்தால் எமது நாட்டு மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்

## ஜெயந்தீஸன் குட்டிக்க(வி)தைகள்

# அனீஷாவின் புரட்சிக் கவிதைகள்

சில தினங்களின் முன்னர் எனது T.V. க்குப் பின்னர் கசங்கிய நிலையில் இந்தக் கவிதைகளைக் கண்டுபிடித்தேன். இவை அனீஷாவின் கவிதைகளாக இருக்கவேண்டும் எனத்தான் கருதுகின்றேன். கையெழுத்து மட்டும் அவளுடையதைப் போல இல்லை. காதல் கவிதைகளை எழுத ஒரு எழுத்தையும், புரட்சிக் கவிதைகளை எழுத வேறொரு விதமான எழுத்தையும் பயன்படுத்துகிறாளோ தெரியவில்லை. என்னை விட்டுப் பிரிய முன்னர், அடிக்கடி மிகவும் பெண்ணிலைவாதம் பற்றி ஆவேசமாகக் கதைத்தாலும் "பெண்கள் யுகம்" என்ற சஞ்சிகைக்கு தற்போது ஆசிரியராக இருப்பதாலும் இவை அவளுடைய கவிதைகள் என நாம் மனதார நம்புகின்றேன். இந்தக் கவிதைகள் தன்னுடையதல்லவாயின், அனீஷா "தாயகத்"துக்கு ஒரு மறுப்புக் கடிதத்தைக் கட்டாயம் எழுதிவிடுவார் என்பது எனக்குத் தெரியும்.

### எங்கள் அணி

ஜன்னல் வழியாக
கொடிகள் என் கண் முன்
தெரிந்தன
கொடிகளின் பின்னே பெண்கள்
பெண்களின் பின்னே ஆண்கள்
ஆண்களின் பின்னே இராணுவம்
இராணுவத்தின் பின்னே பொலீஸ்

நான் இறங்கினேன்
பெண்களோடு என்னை
அணிவகுத்தேன்
எங்களின் பின்னே உள்ள அணி
எங்களது அணி அல்ல
எங்களை அடக்க நினைப்பவை...
நாம் போராடத் துணிந்து
விட்டோம்...
கொடிகளை உயர்த்துகின்றோம்...
வெடிச் சத்தம் கேட்கின்றது
வானத்தை நோக்கி வெடித்ததால்
எவருமே சாகவில்லை.

எங்கள் கொடி இப்போது
வானத்தை நோக்கி எழுந்தது...
"ஆணாதிக்கமே ஒழி!"
எனக் கத்தினோம்
வானம் நடுங்கியது
எங்களை அடக்க நினைத்த அணி
ஓடித் தப்பிக் கொண்டது...

### பொய்க்காதல்

.........
என் அழகுமட்டும் தானா
உன் விழிகளுக்கு
எப்போதுமே தெரிகின்றது?
என் ஆத்மாவை நீ
மறந்து விடுவது ஏனோ?

காதல் கடிதங்களை எழுதி
என்து உடலைச் சுரண்ட
நினைப்பதை
இனியாவது நிறுத்து...
ஆண்களே நீங்கள் எங்களைக்
காதலிக்காதீர்கள்...
எங்களிடம் நீங்கள் ரசிக்கும்
வேல்விழிகள்...
நாளை வேல்களாகி.....
உங்களை அழிக்க வரும்....

நாங்கள் விழிக்கத் தொடங்கி
விட்டோம்...
எங்களுக்கு நீங்கள்
சூரியனைக் காட்டத் தேவையில்லை
அதை நாங்களே பார்த்துக்
கொள்வோம்.

### தூங்காத இரவுகள்

........
தூக்கம் எப்படி வரும்?
எனது கூந்தலில் வெள்ளிகள்
வேகமாக முளைத்துக்
கொண்டிருக்கும் போது...

நாங்கள் சபிக்கப்பட்டவர்களோ?
நான் கன்னி கழியாமலேயே
செத்துப் போகலாம்...

இன்னொரு நாளையிலாவது
நாம் தூங்குவதற்கான இரவுகள்
காத்திருக்கின்றன என்ற
நம்பிக்கையில்
வாழும் நான் அழுவதில்லை..
என்னிடம் இருந்த கண்ணீர்க்கடல்
வற்றிப் போய் விட்டது.

### தேசங்களும் வேஷங்களும்

...........................
கூந்தல் வழித்து
வெண்சேலை பிணைத்துடன்
உடன் கட்டை ஏறிச்
சிவலோகம் செல்லென
எங்களை அனுப்பிய
காலங்கள் செத்துவிட்டனவா?

தேசங்களை நோக்கிச்
செல்லும் போதாவது
எமது வேஷங்களைக்
கலைக்கின்றோமா?

வீட்டிலும் பூட்டு
வெளிநாட்டிலும் பூட்டு
சமத்துவம் வாழ
எமக்கோ உரிமையில்லை.

எங்களது ஆத்மாக்களுள்
நாங்கள் அடைகாத்து வைத்துள்ள
அக்கினிக் குஞ்சுகள்
ஒரு நாள் செட்டை விரித்து
பறக்கும்....

வேஷங்கள் அனைத்தும் கருகி
நாம் வாழுவதற்கான புதிய யுகம்
அன்று கட்டப்படும்.

# என் நினைவில்

நானும் என் அக்காள் தங்கையும்
கூடி என் தம்பி மாரும்
வீரை பாலை மரங்களில் ஏறி
பழங்கள் பறித்துண்ட பின்பும்
குரங்குகள் போலே துள்ளித்திரிந்து
குதூகலம் அடைந்த
அந்த இனிய நாட்கள்

குரும்பட்டித் தேர்செய்தும்
கடதாசிக் காசெடுத்து கடைவைத்தும்
வீடு கட்டி கள்ளன் பொலிஸ் விளையாடி
நம் சிறுவர் களித்திருந்த
அந்த நாட் பொழுதுகள்

நாடு முழுக்க பார்க்க எண்ணி
என் பள்ளித் தோழர் ஒன்றாய் கூடி
சுற்றுலா போன சுதந்திரம் மிக்க
அந்தக் கால நாட்கள்

என் தீவகத்தில்..
பாட்டியொரு கூடியிருந்து
பனம்பாத்தி போட்டே
பழங்கதை கேட்ட
அந்தக் கால பௌர்ணமி நாட்கள்
பாட்டனாரோடு சூள் பிடிக்க
கடலுக்கு போன சுதந்திரம் கொண்ட
அந்தக்கால அமாவாசை நாட்கள்

முல்லைப் பசுங்காடுகளில்
இடுப்பில் சேலை இழுத்துச் செருகி
பழந்துணி சுருட்டி சும்மாடும் வைத்து
விறகுக்கட்டுடன் பண்ணாய் நடக்கும்
பெண்டிர் பார்த்த
அந்தக்கால அந்திமப் பொழுதுகள்

இன்று தொலை தூரத்தில் இருக்கும்
என் காதலியுடன்
அன்று கை கோர்த்துத் திரிந்த
அந்த யாழ்நகர் தெருக்கள்
இருவரும் சேர்ந்து மகரந்த செயற்கையின்
சில வரிகளை மட்டும் மனப்பாடம்
செய்து கொண்ட
அந்த நாட் பொழுதுகள்

காலியாய் கிடந்த வயல்களை நிரப்ப
வன்முறைக் காதலில் விடுபட்டுக் கொள்ள
என்னருந் தோழர்களோடு
வனவாசம் செய்த
வன்னிக் காடுகள்

இன்று நம்மோர் கொண்ட
ஆயுதக் காதலில் தப்பித்துக் கொள்ள
தனிமனிதனாய் என் தேசம் தாண்டிய
அந்த இராக்கால பொழுதுகள்

இன்னும் இப்படி
எத்தனை நினைவுகள்
நெஞ்சத்தில் படச்சுருளாய்
சுருட்டி வைத்துள்ளேன்
நெஞ்சை வருடும் இந்த நினைவுகள்
இன்னும் மனதில் மறையா வருவாய்

தேவிகணேசன்

# நீ எங்கே

இருள் மூடிக்கிடக்கும் கனங்கள்
நீ நெருங்கி வந்தாய்
உனக்குள் நான் நானாய்
எனக்குள் நீ நீயாய்
கரைந்தபோது..
உன் கரங்கள் என் ஈரக்கூந்தலை
வருடிய வண்ணம்
உன் மார்பில் முகம் புதைத்து
கண்ணீர் கசிய உன் விழிகளும்
ஈரமானதேன்..
எல்லைகளை கடந்து எப்படி
வந்தாய் என அழுதேன்..
என் சுவாசம் உன் சுவாசத்தினுள்
உரசிய அந்த உஷ்ணமான
கனங்களில் திடுக்கிட்டு
விழித்தேன்.....
நீ
என்னருகிலில்லை
கனவை நிஜமென
எண்ணினேனா?
விம்முகின்ற
இரவுகள் அழுகையின்
ஆரம்பமா?
தூரதேசத்தில் உன்னை
தொலைத்துவிட்டேன்....
என் இனிய நிலவே



கருமுகில்களுக்கிடையில்
தொலைத்துவிட்ட உன்னை
எங்கே தேடுவேன்......
சிறகில்லை பறந்துவர
காவியம் வரைய
சிந்தை தெளிவில்லை
வரி பார்த்து அழகுசேர்த்து
கிரிதரன் மாதிரி
மரபைக் கலந்து
எழுதிட ஆசைதான்
சிந்தையிலே தெளிவில்லை
மனக்குமுறலை எழுதினால்
தாயகம் பிரசுரிக்கும்
என்றார்கள்
நிராகரிக்கும் சில கவிதைகளை
கூட கியூறியல் பிரசுரம்
செய்வாராம்....
தாயகத்தினூடாவது
என் இதயக் குமுறலை
அறிய மாட்டாயா?
அன்பே!
உண்மை பெயரைப் போட்டால்
முதுகு வீங்கிவிடும் வீட்டில்
அதனால் நீ என்னை அடிக்கடி
அழைப்பாயே அந்த இரகசிய
பெயரையே எழுதுகின்றேன்...



நிவேதிகா

# நாளைய விடியலிலாவது?

அதிகாரத்தின் பேரில்
அடக்கு முறை கூடி
அநியாயச் சாவுகள் -கட்டுக்
அடங்காமல்
அதிகரிக்கிறது இன்று....

காய்ந்து போன
குருதி நார்களில்
உணவை தேட முயன்று
முடியாது போன குழந்தைகளின்
முடிவில்லா விம்மல்கள்.......

பள்ளிப் படிப்பினிலும்
முக்கிய பாடமாக
அடக்கு முறையை
முன் வைத்தாலும்
முரண்பாடு தெரிவித்தும் பயனில்லை.
...
ஐந்தறிவுகளை பலி கொடுத்து-தம்
தேவைகளைப் பூர்த்தி செய்த
பின்னோடிகளை எதிர்த்த
முன்னோடிகள்.....

இன்று
ஆறறிவுகளையே பலி கொடுத்து -தம்
தேவைகளை பூர்த்தி செய்கிறார்கள்....
தட்டிக் கேட்டால் நெற்றியில் சூடு
பார்த்து விட்டால்
படு குழியில் பதவி உயர்வு
பார்க்காவிட்டால்
பரிசும் பட்டமும்
புத்தி ஜீவிகளெல்லாம்
அன்னிய மண் சென்றவுடன்....
பெண் சிங்கங்களே உங்கள் கைகள்
அகப் பை பிடித்து அடங்கி
நடக்கவல்ல
ஆயுதமேந்தி -உங்கள்
ஆதிக்கத்தை நிலைநாட்டுங்கள்" என்று
பெண்களின் புத்தியில்
வைரமாலை இடுகின்றார்கள் இன்று....

இன்னும் சில காலங்களில்
மனித நேயங்கள் கூட
கண் காட்சியில்
வைக்கப்பட்டாலும்
ஆச்சரியப்படுவதற்கில்லை....

சுயநல மனிதர்களிடம்
சுதந்திர அடிமைகளாக
அப்பாவி சனங்களின்
சலனமற்ற சாபங்கள்....
நாளைய விடியலிலாவது
உண்மை தெரியுமென
எதிர்பார்ப்புகளுடன்
வாழ்ந்து சாகிறவர்களுடன்
செத்து வாழ்கிறார்கள்



கணேஸ்ராஜ் பாரிஸ்

புதுக்க விதை

# ஆபிரிக்காவில் ஜனநாயகத்துக்கு ஆபத்தா?....

## சுழலும் உலகம்



**தி. உமாகரந்தன்**

இனவாத ஒடுக்குமுறைகளிலிருந்து தென்னாபிரிக்கா ஜனநாயகத்தை நோக்கி நகர்த்தப்படும் அதே வேளையில் ஆபிரிக்காவிலுள்ள பல நாடுகளில் ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகியுள்ளது. இதற்கான சமீபத்திய உதாரணம் நைஜீரியா! ஆபிரிக்காவின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகிய நைஜீரியாவில் கடந்த யூன் மாதம் 12ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவை வெளியிடுவதற்கு இப்ராகிம் பபாங்கிடாவின் தலைமையிலான இராணுவ அரசாங்கம் மறுத்து வருவதுடன் புதிய தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்துள்ளமை ஜனநாயகத்துக்கு எதிரான செயலாக கருதப்படுகிறது.

இராணுவ அரசின் இந்த முடிவை எதிர்த்து மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் அரசின் இரும்புக் கரங்களால் ஒடுக்கப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்றவர் எனக் கருதப்படும் சமூக ஜனநாயகக் கட்சியை சேர்ந்த மொசூட் அபியோலா இராணுவ அரசின் செயலைக் கண்டித்துள்ளதுடன் புதிய தேர்தலை ஏற்கவும் மறுத்துள்ளார்.

இந்நிலை குறித்து நோபல் பரிசு பெற்ற நைஜீரிய இலக்கியவாதியான வோல் சொயிங்கா கருத்துக் கூறுகையில் தேசம் சர்வாதிகாரிகளால் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது என்றும் இராணுவ ஆட்சியாளர்களது இந்த முடிவை பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிடுவதடுடன் இராணுவ சர்வாதிகாரியாகிய பபாங்கிடா நைஜீரிய மக்களை நசுக்கி வருவதுடன் மாத்திரமல்ல அவர்களது உரிமைகளை மிக மோசமாக அவமதித்துமுள்ளார் என்றும் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இன்று தோன்றியிருக்கும் நிலை முழு ஆபிரிக்காவுக்குமே ஒரு தீய செய்தியாகும் எனக் குறிப்பிட்டதுடன் தாம் இதர ஆபிரிக்க நாடுகளின் முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொண்டபோது நைஜீரியாவின் நிலை அவர்களையும் ஏமாற்றமும் விரக்தியும் அடைய வைத்திருக்கிறது என்கிறார். ஜனநாயகம் தொடர்பான நைஜீரிய மக்களின் கனவுகள் நசுக்கப்படுகின்றன என்று குறிப்பிடும் அவர் இதில் இழப்பாளிகள் நைஜீரிய மக்களே எனவும் கூறுகிறார்.

எதிர்வரும் நாட்களில் இராணுவ அரசின் சர்வாதிகாரத்தனமும் மக்களின் மீதான அடக்குமுறையும் அதிகரிக்கும் என்று சொயிங்கா தெரிவித்திருந்தது. உண்மையாகியிருக்கிறது. மனித உரிமைகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 15 பேர் அரச படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த பத்துவருடங்களாக நைஜீரிய இராணுவ ஆட்சியாளரின் பலமான எதிர்ப்புச் சக்தியாக விளங்கி வருபவர் சொயிங்கா. இவரது பிரச்சாரங்களினாலேயே பல வெளிநாடுகள் தேர்தலை நடத்துமாறு நைஜீரிய ஆட்சியாளர் மீது அழுக்கத்தை பிரயோகித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த ஜனநாயக விரோதச் செயல்கள் ஆபிரிக்காவிற்கு புதியதல்ல. சமீபத்தில் அங்கோலாவில் நடைபெற்ற தேர்தல் முடிவை ஏற்க மறுத்த சுவாம்பி மீண்டும் உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்தபோது இனவாதத்தின் மீது நேசம் கொண்ட தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சர் பிக் பொதா பெருமிதத்துடன் 'என்னுடைய ஆபிரிக்க சகோதரர்கள் யாருமே தேர்தலை ஏற்றுக் கொள்ள தயாரானவர்கள் என நான் நினைக்கவில்லை' என்று கூறியதுடன் 'தேர்தலை விளங்கிக் கொள்ளும் வலு இல்லாதவர்கள்' என்றும் கேலி செய்தார். அதை உறுதிப்படுத்தும் வகையில் அங்கோலாவை அடுத்து இப்போது நைஜீரியாவிலும் ஜனநாயகத்துக்கு அடி விழுந்திருக்கிறது.

நைஜீரியாவிலிருந்து கென்யா வரை, அல்ஜீரியாவிலிருந்து ஸெயர் வரை, ரோகோவிலிருந்து கம்ரூன் வரை ஜனநாயகத்துக்கு சாட்டை அடி விழுந்து கொண்டுதானிருக்கிறது. கேள்விக்குறியாக்கப்பட்டுத்தான் இருக்கிறது. இதனால் ஆபிரிக்க மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை அற்றவர்கள் என்பது

## என் நினைவில்

நாளும் என் அக்காள் தங்கையும்
கூடி என் தம்பி மாரும்
வீரை பாலை மரங்களில் ஏறி
பழங்கள் பறித்துண்ட பின்பும்
குரங்குகள் போலே துள்ளித்திரிந்து
குதூகலம் அடைத்த
அந்த இளம் நாட்கள்

குரும்பட்டித் தேர்செய்தும்
கடதாசிக் காசெடுத்து கடைவைத்தும்
வீடு கட்டி கள்ளன் பொலிஸ் விளையாடி
நம் சிறுவர் களித்திருந்த
அந்த நாட் பொழுதுகள்

நாடு முழுக்க பார்க்க எண்ணி
என் பள்ளித் தோழர் ஒன்றாய் கூடி
சுற்றுலா போன சுதந்திரம் மிக்க
அந்தக் கால நாட்கள்

என் தீவகத்தில்..
பாட்டியொரு கூடியிருந்து
பனம்பாத்தி போட்டே
பழங்கதை கேட்ட
அந்தக் கால பௌர்ணமி நாட்கள்
பாட்டனாரோடு சூள் பிடிக்க
கடலுக்கு போன சுதந்திரம் கொண்ட
அந்தக்கால அமாவாசை நாட்கள்

முல்லைப் பசுங்காடுகளில்
இடுப்பில் சேலை இழுத்துச் செருகி
பழந்துணி சுருட்டி சும்மாடும் வைத்து
விறகுக்கட்டுடன் பண்ணாய் நடக்கும்
பெண்டிர் பார்த்த
அந்தக்கால அந்திமப் பொழுதுகள்

இன்று தொலை தூரத்தில் இருக்கும்
என் காதலியுடன்
அன்று கை கோர்த்துத் திரிந்த
அந்த யாழ்நகர் தெருக்கள்
இருவரும் சேர்ந்து மகரந்த செயற்கையின்
சில வரிகளை மட்டும் மனப்பாடம்
செய்து கொண்ட
அந்த நாட் பொழுதுகள்

காலியாய் கிடந்த வயல்களை நிரப்ப
வன்முறைக் காதலில் விடுபட்டுக் கொள்ள
என்னருந் தோழர்களோடு
வனவாசம் செய்த
வன்னிக் காடுகள்

இன்று நம்மோர் கொண்ட
ஆயுதக் காதலில் தப்பித்துக் கொள்ள
தனிமனிதனாய் என் தேசம் தாண்டிய
அந்த இராக்கால பொழுதுகள்

இன்னும் இப்படி
எத்தனை நினைவுகள்
நெஞ்சத்தில் படச்சுருளாய்
சுருட்டி வைத்துள்ளேன்
நெஞ்சை வருடும் இந்த நினைவுகள்
இன்னும் மனதில் மறையா வருவாய்

**தேவிகணேசன்**

## நீ எங்கே

இருள் மூடிக்கிடக்கும் கணங்கள்
நீ நெருங்கி வந்தாய்
உனக்குள் நான் நானாய்
எனக்குள் நீ நீயாய்
கரைந்தபோது..
உன் கரங்கள் என் ஈரக்கூந்தலை
வருடிய வண்ணம்
உன் மார்பில் முகம் புதைத்து
கண்ணீர் கசிய உன் விழிகளும்
ஈரமானதேன்..
எல்லைகளை கடந்து எப்படி
வந்தாய் என அழுதேன்..
என் சுவாசம் உன் சுவாசத்தினுள்
உரசிய அந்த உஷ்ணமான
கணங்களில் திடுக்கிட்டு
விழித்தேன்.....
நீ
என்னருகிலில்லை
கனவை நிஜமென
எண்ணினேனா?
விம்முகின்ற
இரவுகள் அழுகையின்
ஆரம்பமா?
தூரதேசத்தில் உன்னை
தொலைத்துவிட்டேன்....
என் இனிய நிலவே



கருமுகில்களுக்கிடையில்
தொலைத்துவிட்ட உன்னை
எங்கே தேடுவேன்......
சிறகில்லை பறந்துவர
காவியம் வரைய
சிந்தை தெளிவில்லை
வரி பார்த்து அழகுசேர்த்து
கிரிதரன் மாதிரி
மரபைக் கலந்து
எழுதிட ஆசைதான்
சிந்தையிலே தெளிவில்லை
மனக்குமுறலை எழுதினால்
தாயகம் பிரசுரிக்கும்
என்றார்கள்
நிராகரிக்கும் சில கவிதைகளை
கூட கியூறியஸ் பிரசுரம்
செய்வாராம்....
தாயகத்தினூடாவது
என் இதயக் குமுறலை
அறிய மாட்டாயா?
அன்பே!
உண்மை பெயரைப் போட்டால்
முதுகு வீங்கிவிடும் வீட்டில்
அதனால் நீ என்னை அடிக்கடி
அழைப்பாயே அந்த இரகசிய
பெயரையே எழுதுகின்றேன்...



**நிவேதிகா**

## நாளைய விடியலிலாவது?

அதிகாரத்தின் பேரில்
அடக்கு முறை கூடி
அநியாயச் சாவுகள் -கட்டுக்
அடங்காமல்
அதிகரிக்கிறது இன்று....

காய்ந்து போன
குருதி நார்களில்
உணவை தேட முயன்று
முடியாது போன குழந்தைகளின்
முடிவில்லா விம்மல்கள்.......

பள்ளிப் படிப்பினிலும்
முக்கிய பாடமாக
அடக்கு முறையை
முன் வைத்தாலும்
முரண்பாடு தெரிவித்தும் பயனில்லை.
...
ஐந்தறிவுகளை பலி கொடுத்து-தம்
தேவைகளைப் பூர்த்தி செய்த
பின்னோடிகளை எதிர்த்த
முன்னோடிகள்.....

இன்று
ஆறறிவுகளையே பலி கொடுத்து -தம்
தேவைகளை பூர்த்தி செய்கிறார்கள்....
தட்டிக் கேட்டால் நெற்றியில் சூடு
பார்த்து விட்டால்
படு குழியில் பதவி உயர்வு
பார்க்காவிட்டால்
பரிசும் பட்டமும்
புத்தி ஜீவிகளெல்லாம்
அன்னிய மண் சென்றவுடன்....
பெண் சிங்கங்களே உங்கள் கைகள்
அகப் பை பிடித்து அடங்கி
நடக்கவல்ல
ஆயுதமேந்தி -உங்கள்
ஆதிக்கத்தை நிலைநாட்டுங்கள்" என்று
பெண்களின் புத்தியில்
வைரமாலை இடுகின்றார்கள் இன்று....

இன்னும் சில காலங்களில்
மனித நேயங்கள் கூட
கண் காட்சியில்
வைக்கப்பட்டாலும்
ஆச்சரியப்படுவதற்கில்லை....

சுயநல மனிதர்களிடம்
சுதந்திர அடிமைகளாக
அப்பாவி சனங்களின்
சலனமற்ற சாபங்கள்....
நாளைய விடியலிலாவது
உண்மை தெரியுமென
எதிர்பார்ப்புகளுடன்
வாழ்ந்து சாகிறவர்களுடன்
செத்து வாழ்கிறார்கள்



**கணேஸ்ராஜ் பாரிஸ்**

# புதுக்க விதை

சுழலும் உலகம்



# ஆபிரிக்காவில் ஜனநாயகத்துக்கு ஆபத்தா?....

## தி. உமாகரந்தன்

இனவாத ஒடுக்குமுறைகளிலிருந்து தென்னாபிரிக்கா ஜனநாயகத்தை நோக்கி நகர்த்தப்படும் அதே வேளையில் ஆபிரிக்காவிலுள்ள பல நாடுகளில் ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகியுள்ளது. இதற்கான சமீபத்திய உதாரணம் நைஜீரியா! ஆபிரிக்காவின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகிய நைஜீரியாவில் கடந்த யூன் மாதம் 12ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவை வெளியிடுவதற்கு இப்ராகிம் பபாங்கிடாவின் தலைமையிலான இராணுவ அரசாங்கம் மறுத்து வருவதுடன் புதிய தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்துள்ளமை ஜனநாயகத்துக்கு எதிரான செயலாக கருதப்படுகிறது.

இராணுவ அரசின் இந்த முடிவை எதிர்த்து மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் அரசின் இரும்புக் கரங்களால் ஒடுக்கப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுமுள்ளனர். நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்றவர் எனக் கருதப்படும் சமூக ஜனநாயகக் கட்சியை சேர்ந்த மொசூட் அபியோலா இராணுவ அரசின் செயலைக் கண்டித்துள்ளதுடன் புதிய தேர்தலை ஏற்கவும் மறுத்துள்ளார்.

இந்நிலை குறித்து நோபல் பரிசு பெற்ற நைஜீரிய இலக்கியவாதியான வோல் சொயிங்கா கருத்துக் கூறுகையில் தேசம் சர்வாதிகாரிகளால் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது என்றும் இராணுவ ஆட்சியாளர்களது இந்த முடிவை பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் குறிப்பிடுவதுடன் இராணுவ சர்வாதிகாரியாகிய பபாங்கிடா நைஜீரிய மக்களை நசுக்கி வருவதுடன் மாத்திரமல்ல அவர்களது உரிமைகளை மிக மோசமாக அவமதித்துமுள்ளார் என்றும் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இன்று தோன்றியிருக்கும் நிலை முழு ஆபிரிக்காவுக்குமே ஒரு தீய செய்தியாகும் எனக் குறிப்பிட்டதுடன் தாம் இதர ஆபிரிக்க நாடுகளின் முக்கிய ஸ்தர்களுடன் தொடர்பு கொண்டபோது நைஜீரியாவின் நிலை அவர்களையும் ஏமாற்றமும் விரக்தியும் அடைய வைத்திருக்கிறது என்கிறார். ஜனநாயகம் தொடர்பான நைஜீரிய மக்களின் கனவுகள் நசுக்கப்படுகின்றன என்று குறிப்பிடும் அவர் இதில் இழப்பாளிகள் நைஜீரிய மக்களே எனவும் கூறுகிறார்.

எதிர்வரும் நாட்களில் இராணுவ அரசின் சர்வாதிகாரத்தனமும் மக்களின் மீதான அடக்குமுறையும் அதிகரிக்கும் என்று சொயிங்கா தெரிவித்திருந்தது. உண்மையாகியிருக்கிறது. மனித உரிமைகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 15 பேர் அரச படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கடந்த பத்துவருடங்களாக நைஜீரிய இராணுவ ஆட்சியாளரின் பலமான எதிர்ப்புச் சக்தியாக விளங்கி வருபவர் சொயிங்கா. இவரது பிரச்சாரங்களினாலேயே பல வெளிநாடுகள் தேர்தலை நடத்துமாறு நைஜீரிய ஆட்சியாளர் மீது அழுக்கத்தை பிரயோகித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த ஜனநாயக விரோதச் செயல்கள் ஆபிரிக்காவிற்கு புதியதல்ல. சமீபத்தில் அங்கோலாவில் நடைபெற்ற தேர்தல் முடிவை ஏற்க மறுத்த சுவாம்பி மீண்டும் உள்நாட்டு யுத்தத்தை தொடர்ந்தபோது இனவாதத்தின் மீது நேசம் கொண்ட தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சர் பிக் பொதா பெருமிதத்துடன் 'என்னுடைய ஆபிரிக்க சகோதரர்கள் யாருமே தேர்தலை ஏற்றுக் கொள்ள தயாரானவர்கள் என நான் நினைக்கவில்லை' என்று கூறியதுடன் 'தேர்தலை விளங்கிக் கொள்ளும் வலு இல்லாதவர்கள்' என்றும் கேலி செய்தார். அதை உறுதிப்படுத்தும் வகையில் அங்கோலாவை அடுத்து இப்போது நைஜீரியாவிலும் ஜனநாயகத்துக்கு அடி விழுந்திருக்கிறது.

நைஜீரியாவிலிருந்து கென்யா வரை, அல்ஜீரியாவிலிருந்து ஸெயர் வரை, ரோகோவிலிருந்து கம்ரூன் வரை ஜனநாயகத்துக்கு சாட்டை அடி விழுந்து கொண்டுதானிருக்கிறது. கேள்விக்குறியாக்கப்பட்டுத்தான் இருக்கிறது. இதனால் ஆபிரிக்க மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை அற்றவர்கள் என்பது

அர்த்தமல்ல. கடந்த வருடம் செப்டம்பர் மாதம் தொடர்ந்து மூன்று நாட்கள் கொதிக்கும் வெயிலில் அங்கோலா மக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நின்றனர். கடந்த மாதம் மலாவியில் பல மைல் நீளமுள்ள வரிசையில் பல்கட்சி ஜனநாயக முறையை ஆதரித்து வாக்களிக்க மலாவி மக்கள் காத்து நின்றனர். கென்யாவிலும். ஸாம்பியாவிலும். பெனினிலும் நடந்த தேர்தல்களில் பெருந்தொகையான மக்கள் அமைதியாக பங்கு கொண்டனர்.

ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்கள் ஜனநாயகம் என்ற பெயரில் அதிகாரத்தை இழக்கத் தயாராக இல்லை. ஜனநாயகத்தையோ தேர்தல்களையோ இவர்கள் தாமாக தேடிச் செல்லவில்லை. சர்வதேச அழுத்தங்களே இவர்களை தேர்தல்களை நடத்த வைக்கிறது. பின்னர் அதிகார ஆசை தேர்தல் முடிவுகளை நிராகரிக்க வைக்கிறது. இதிலே கூட வித்தியாசமான ஆபிரிக்கத் தலைவர்கள் இருக்கிறார்கள். சர்வதேச அழுத்தங்களையும் மீறி தேர்தல் என்ற பெயரில் ஏமாற்றுவித்தை காட்டும் ஸெயரின் சர்வாதிகாரி மொபுட்டோ செஸ் செக்கோ, தேர்தல் நடத்த விருப்பமிருந்தும் அதிகார வர்க்கத்தை மீறி விரல் அசைக்க முடியாமலிருக்கும் கென்யாவின் டானியல் முவா இப்படி பலவிதம்.

மொஸாம்பிக். அங்கோலா, ருவண்டா போன்ற நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தங்களே இந்த நாடுகளின் ஆட்சியாளர்களை பலகட்சி முறையை அறிமுகப்படுத்தத் துண்டியது. மேற்கு நாடுகளின் நிதி உதவி வெட்டப்பட்டவுடன்தான் கென்யாவிலும், ஸாம்பியாவிலும் தேர்தல்களும் மலாவியில் சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. எனவேதான் இந்த நாடுகளில் ஜனநாயகம் அர்த்தமிழந்து போனது. பல கட்சி முறையை பேணுதல், ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் என்பதை விட நிதி உதவி செய்யும் வெளிநாடுகளை தேர்தல் மூலம் திருப்தியடையச் செய்து பதவி அதிகாரங்களை தம்மிடம் வைத்துக் கொள்ளும் தந்திரத்தையே பல ஆபிரிக்க அரச தலைவர்கள் செய்கிறார்கள்.

இதற்கு உதாரணமாக கானாவில் நடந்த ஜனாதிபதித் தேர்தலை நைஜீரியாவின் பேராசிரியர் ஏ.ஓ.உலுக்கோஷி குறிப்பிடுகிறார். நீண்டகாலமாக கானாவை ஆட்சி புரிந்துவரும் இராணுவ ஆட்சியாளனாகிய ஜெரி ரோலிங்ஸ் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக ஒரு தேர்தலை நடத்தினார். தானே மூன்று கட்சிகளை உருவாக்கி இதை பல்கட்சிமுறை என அறிமுகப்படுத்தி அந்தக்கட்சிகளின் சார்பில் தன்னையே ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளனாகவும் நிறுத்திக் கொண்டார்.

இதைப் போலவே ஜனநாயகத்தின் மீதான மிக மோசமான அவமதிப்பு ஸெயர் நாட்டில் ஜனாதிபதி மொபுட்டோவினால் நடாத்தப்படுகிறது. ஒடுக்குமுறைகளுக்கு பெயர் போன மொபுட்டோ அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகள் கொடுத்த அழுத்தத்தினால் பல கட்சி ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினார். இதற்காக மொபுட்டோ 18 கட்சிகளை தானே நிதி கொடுத்து உருவாக்கினார்.

ஆனால் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கூட இதில் இரட்டை வேடம்தான் புனைகின்றன. உகண்டாவின் ஜனாதிபதியான யொவெரி முஸாவினி பலகட்சி முறை ஆட்சிமுறையை ஏற்க மறுத்தபோதும் மேற்கு நாடுகளுக்கு இசைவான கடுமையான பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதால் பிரிட்டனுக்கு விரும்பப்படுவராகிறார். அல்ஜீரியாத் தேர்தல்களில் இஸ்லாமிய தீவிரவாதிகள் வெற்றி பெற்றனர். ஆனால் இந்த வெற்றி ஆட்சியாளர்களால் மறுக்கப்பட்டது. இதனை மேற்கு நாடுகள் கண்டிக்கவில்லை. ஆபிரிக்காவின் பொருளாதாரக் குளறுபடிகளும் அங்கு ஏற்பட்டிருக்கும் ஜனநாயக வீழ்ச்சிக்கு காரணமாகின்றன. புதிய உலக பொருளாதாரப் பிரச்சனைகள் காரணமாக ஆபிரிக்காவின் புதிய தலைவர்கள் முன்னுள் சர்வாதிகாரிகளைப் போல் மக்களுக்கு வாழ்க்கை வசதிகளை வழங்க முடியவில்லை. அத்துடன் முன்னர் போலன்றி இப்போது மாற்றங்களைக் கோரும் குரல்கள் பாரிய அளவில் எழுகின்றன. இதனை அடக்கும் அவசியமும் அவர்களை சூழ்கிறது.

உலகின் ஒரு மூலையில் நடக்கும் நிகழ்வு என அலட்சியப்படுத்தப்பட முடியாத சம்பவங்கள் இவை. ஏனெனில் ஆபிரிக்காவில் ஜனநாயகத்துக்கு ஏற்படும் பாதிப்பு அனைத்துலகுக்கும் பரவுவதற்கு வாய்ப்புக்கள் நிறையவே இருக்கிறது. அது மட்டுமல்ல ஜனநாயகக் கனவுகளில் மூழ்கியுள்ள தென்னாபிரிக்க கறுப்பு இன மக்களின் எதிர்காலமும் இருள் படிந்து விடும்.

உங்கள் குடிவரவு விசாரணைக்கான
சேவைக்கு..
609 8116
மார்க்

# கலாநிதி சி. சிவசேகரத்தின் உடன்பாடின்மைகள்

## எஸ். கௌந்தி

புகலிட வெளியீடுகள் பலவற்றிலும் தனது மறுப்புக் கடிதங்களிலும், கட்டுரைகளிலும் கலாநிதி சிவசேகரம் வெளிக்காட்டிவரும் "உடன்பாடின்மைகள்" அநேகமானவற்றுடன் எனக்கு உடன்பாடில்லை. இதனை ஒரு பிரகடனமாகவே வாசகர் கவனத்தின் முன் வைக்கின்றேன். இதனைக் கவனத்திற்கு எடுத்தே "தாயகம்" இதழில் பல வாரங்களாகப் பிரசுரமான எஸ். பொ. பாரிஸ் பகிர்வுகள் எனும் ஆவண இலக்கியம் -அது தொடர்பான கலாநிதியின் ANTI-ES.PO ஆக்ரோஷம்.. இவைகள் மீது, "தாயகம்" பத்திரிகையின் மீது எனக்குள்ள நாட்டத்தின் அடிப்படையில் சில கருத்துக்களைச் சொல்லுதல் அவசியமெனப்படுகின்றது.

கௌந்தியின் நோக்கு க. கலாமோகனது இலக்கிய இயக்கம் சரியெனச் சொல்வதோ அல்லது அக்கினிக் குஞ்சுரது (ஜூலை 93 அக்கினிக்குஞ்சு தமிழிற்கு புலிஞர் எனும் சொல்லைக் கண்டுபிடித்துத் தந்துள்ளது) நற்போக்கிற்கு ஆமாப் போட்டு கலாநிதி காட்டும் இடது ஜாதித்தனமே கோஷம் போட்டுக் கொடிபிடிக்கப் பொருத்தமான தனம் என்று விட்டுப் போவதல்ல. "கௌந்தி கல்விக்குத் துதிபாடுவதையிட்டு" ஜனவரி மாதம் கலாநிதி வருந்தியவர் (பார்க்க: 1.1. 93 தாயகம், "இன்னொருக்காற் சிவத்தம்பி", எழுதியவர் சி. சிவசேகரம்).

நான் என்ன தம்பியா, ஏட்டுக் கல்வியின் அவசியத்தைத் தூக்கி எறிந்து விட்டு, "கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்று சொல்லி, மங்கிக் கொண்டு போகும், இளம் தமிழர் சமூகத்தின் கல்வித்தரத்தை பங்கர் வெட்டி ஒழிக்க? கௌந்திக்கு கல்வியைத் துதிபாடுவதில் எந்த நெருக்கடியுமேயில்லை. ஆனால், பேராசிரியர்கள் என்ற போர்வைக்குள் ஒழிந்திருந்து, கல்வியின் சமூகப் பெறுமானத்தை தமது சுயலாபங்களுக்காக ஒழிப்போரைச் சாடுவார். தமிழர் அறிவியக்கம் மீதான எனது விமர்சனங்கள் "அறிவியக்கம்" மீதான விமர்சனம் அல்ல.

எஸ்.பொ. விற்காக வாதாடுதல் எனும் போக்கு பாரிஸ் பகிர்வுகளினது தொகுப்பாளரிடம் இருப்பதை அவதானிக்க முடியினும், இலங்கைத் தமிழ் இலக்கியத்தினது சமகால வரலாற்றில், இத்தகைய ஒரு ஆவணத்தை- இலக்கிய ரசிப்புக்கும், விழிப்புக்குமேற்ற விதத்தில் இவர் வழங்கியுள்ளமையைப் பாராட்டாமலிருக்க முடியாது. இவர் பத்திரிகையாளராக இருந்ததாக எங்கோ வாசித்த நினைவு. இவரால் வழங்கப்பட்ட இலக்கிய ஆவணம் தமிழிற்குப் புதிது போலப் பட்டாலும், முதலாளித்துவ கலாசாரத்தை அவதி அவதியாக விழுங்கிவிட்டு எப்படி வெளியே துப்புவதெனத் தெரியாமல் தடுமாறும் நாடுகளிற்குப் புதிதல்ல. ஆண்டி வோரேல், த்ருமன் கப்போத், ஜோன்-போல் சார்த்திர் போன்றோருடன் மேற்கொள்ளப்பட்ட பேட்டிகளும், உரையாடல்களும் ஆவணமாக்கப்பட்டும் இலக்கியமாக்கப்பட்டும் உள்ளன. இத்தகைய ஒரு ஆவணத்தை, புகலிடத்தில் உள்ள ஒருவர், எந்த விதமான இருட்டடிப்புமில்லாமல் (அப்படித்தான் நான் நினைக்கின்றேன்) வாசிப்பிற்கு விட்டுள்ளார்... கலாநிதிக்கோ தொகுத்தவருடனும் உடன்பாடில்லை, தொகுக்கப்பட்டவருடனும் உடன்பாடில்லை.. அது சரி, இவருக்கு ஆகக் குறைந்தபட்சம் எவருடனாவது உடன்பாடுண்டா? நானல்ல, எனது இலக்கிய நண்பர்கள் சிலர் கேட்கின்றனர்.

விவாதத்துக்கு எடுக்கப்பட்ட மூலக் கருத்தை விட்டு விலகாதிருத்தலே விவாத ஒழுங்கிற்கு நல்லது. இதனை விடுத்து எஸ்.பொ. விளம்பரம் என்றால் விட்டுவிடுவாரா என எழுதுவதால் சமூகம் எதனையுமே கற்று விடாது.... எஸ். பொ. வைக் காட்டிலும் கலாநிதியே புகலிடத்தில் வரும் அனைத்து வெளியீடுகளிலும் எல்லாப் பொருள் பற்றியும் அதிகம் எழுதுபவர். (இதற்குள் இவர் எழுதியவற்றின் மறுபிரசுரங்களையும் சேர்க்க வேண்டும்) இந்த வேகம், விளம்பர நோக்குக் கொண்டதே எனப் பலர் என்னிடம் சொன்னபோதும், கலாநிதியின் "உடன்பாடின்மைகள்" தவிர்ந்த ஏனைய எழுத்துகள் பலவற்றிலே பிரயோசனம் உண்டு என எனக்குப் பட்டதால், இவர் விளம்பரம் தேடுவதையிட்டு நாம் பெரிதாக் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என அவர்களுக்குச் சொன்னேன். கலாநிதியின் பேனாவுக்குள்ள அதே வேகம் எனது பேனாவுக்கும் உள்ளது. அதற்காக, நான் வாசிப்பன அனைத்துக்குள்ளும் "உடன்பாடின்மை" உண்டா என்று தேடாமல் உடன்பாடுகளைத் தேடுவதை எனது வழக்கமாகக் கொண்டுள்ளேன்.

கைலாசபதி சாதி பார்த்தாரா? நானறிந்த எவ்வளவோ முற்போக்கு வாதியினர் சாதி பார்க்கின்றனர். கைலாசபதியும் முற்போக்குத்தானே! இவர் சாதி பார்த்தால் பெரிதாக என்னவாம் குறைந்து விடப்போகின்றது? எஸ்.பொ. விற்குத்தான் சாதி பிரச்சனையென்றால் கலாநிதிக்கும் அது ஏன் பிரச்சனையாக வேண்டும்? கைலாசபதி அமரராகிவிட்டார். அமரரான ஒருவரை வைத்து, ஆவணங்கள் எதுவுமே இல்லாமல் "கண்டபோது சொன்னார்", "உயிரோடிருந்தால் அவர் இப்படித்தான் சொல்லியிருப்பார்" என்ற போக்கில் நாம் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிவிடலாம். ஆனால், அவை ஆவணமாகா.. ஆனால் ஒன்று செய்யலாம்... உயிரோடு கொஞ்சம் இடதுசாதிகள் உள்ளனர்... இவர்கள் சாதி பார்க்கின்றனரா? இல்லையா என்பதைக் கண்டறிந்து ஆவணமாக்கினால் நல்லது.... இடது சாதிகள் அனைத்தும் சி.சி. போல பத்தரைமாற்றுத் தங்கமாக இருக்க முடியுமா?

தாயகம் 16.07.1993 இதழில் சி.சி. எஸ்.பொ.வுடன் மல்லுக் கட்டும் தனது கட்டுரையின் தொடக்கத்தை ஒரு விளம்பரமாக்கியுள்ளார். இதோ! இன்னொரு விளம்பரம். கவனமாக வாசியுங்கள்.

மாணவர்களே! நீங்கள் கலாநிதிகளாக வரவிரும்புகின்றீர்களா? இதோ! ஒரு அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்! புகலிட வெளியீடுகளில் கலாநிதி சி. சிவசேகரத்தின் உடன்பாடின்மைகள் என்ற தலைப்பைப் பொருளாக வைத்து ஆய்வு செய்யுங்கள்... கலாநிதிப்பட்டம் உங்கள் வீடு தேடி விரைவாக வரும்."

ஓம் ஸ்ரீசாயிராம்

# Sai Sihicha Mandir

(Registered)

## இயற்கை முறை வைத்தியசேவை

நாட்பட்டதும் *சிகிச்சைகளுக்கு* வசப்படாததுமான
*கைகால் நரம்பு மூட்டு வலிகள் *பீனிசம், மூக்கடைப்பு, நீர்வடிதல் *ஒற்றைத் தலைவலி *வயிற்றுக்கோளாறுகள் *சரும ரோகங்கள், அலர்ஜி *தேகமெலிவு, பசியின்மை *ஆஸ்த்துமா, தொய்வு இழுப்பு *வாதரோகங்கள் *மூல நோய், மலச்சிக்கல் *தலை அரிப்பு, பொடுகு, சொட்டை *நீரிழிவு, மதுமேகம் *மதுவருந்துதல், புகை பிடித்தல் போன்ற பலவிதமான தீராத பிரச்சனைகளுக்கு

ஆலோசகர் வைத்தியக்கலாநிதி
பேராசிரியர் A. கணேசாள்
(முன்னாள் குடும்ப நல வைத்திய அதிகாரி, இலங்கை)

**467 6393**

12 St.Dennis Dr #627, Don Mills

### எண் கணித ஜோதிட சாஸ்திர சேவை

பிறந்த திகதி, மாதம், வருடம், நேரம் நட்சத்திரத்திற்கு ஏற்ப
*எதிர்காலம் பற்றி அறியவும் *பெயரிடுதல் *பெயர் மாற்றம் *கல்வி *தொழில் *திருமணப் பொருத்தம் மற்றும் சகலவிதமான குடும்பப் பிரச்சனைகளுக்கும் எண் கணித ஜோதிட முறையிலும் கைரேகை பார்த்தல், மற்றும் 'பெண்டுல' சுழற்சி மூலம் துல்லியமான அச்சொட்டான பலாபலன்கள் கணித்து ஆராய்ந்து கூறப்படும்

*சீனதேசத்து அக்குபஞ்சர் *ரிப்ளெக்ஸாலஜி (மசாஜ்) *நவீன மின்சாரக் கருவிகள் மூலம் அக்குபிரசர் *மக்னெட் என்னும் காந்த லேசர்களை உடலில் பாய்ச்சுதல் *ஹோமியோபதி மருத்துவம் *சித்த ஆயுர்வேத மருத்துவம்
ஆகிய இயற்கைமருத்துவ உதவியுடன் சிறந்த முறையில் நிரந்தரமான நோய் நிவாரணத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கப்படும்.

# சங்கமம் 93

இயல்
இசை
நாடகம்

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சங்கமத்தின் இரண்டாவது ஆண்டுவிழா

*ஸ்காபரோவில் செப் 11 சனிக்கிழமை*
*மிசிசாகாவில் செப் 18 சனிக்கிழமை*

ஏமாற்றத்தை தவிர்க்க, உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள அண்மையில் உள்ள தமிழ் வர்த்தகரை அணுகுங்கள்

மேலதிக விபரங்களுக்கு
**ASIAAN FINE ARTS**
748 8656
748 2362
200 3566

பதின்மூன்று இராணுவ வீரர்களைப் புலிகள் கொன்றதனால் தான் கொந்தளித்த சிங்கள மக்கள், அரசபடைகள் உணர்விழந்து கலவரத்தில் இறங்கினர் என்பது ஜே.ஆராலும் அரசினாலும் வைக்கப்பட்ட காரணங்களான போதும் யாழ் பல்கலைக்கழக மாணவியர் இராணுவத்தினால் கற்பழிக்கப்பட்டதும் இரு மாணவியர் தற்கொலை செய்தததுவும் இது பற்றி நீதிவிசாரணைகளின்றி அரசு பாராமுகமாக விருந்ததனால் தான் தமிழ்ப் போராளிகள் அத்தகையதொரு நடவடிக்கையில் இறங்கினார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

"த ரைம்ஸ்" லண்டன் (8 ஆவணி 83) இதும் பின்வருமாறு கொழும்பில் நடந்த கலவரம் பற்றிக் குறிப்பிட்டது. முன்னைய இனக்கலவரங்களை விட மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் குண்டர்களுடன், அரச படைகளும் உற்சாகமாகப் பங்கு கொண்டதாக இது காணப்பட்டது. காடையர்கள் தேர்தல் வாக்காளர் அட்டவணைகளை வைத்துக் கொண்டு தமிழர் வதியும் வீடுகளின் முகவரிகள், கடைகள், ஏனைய ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகளைத் தேடி கண்டு பிடித்துக் கொள்ளையடித்தும், பொருட்களைச் சூறையாடியும், கைகளிலிருந்த எரிபொருளை ஊற்றித் தீயிட்டும் வன்முறையில் ஈடுபட்டனர். அவர்கள் கைகளில் இரும்புப் பொல்லுகள், தடிகள், வாள் போன்ற ஆயுதங்களை வைத்திருந்து கண்ட தமிழர்களையெல்லாம் ஒரு வித மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கொலை செய்தனர்.

பல காடையர் குழுக்கள் தெற்கிலிருந்து வரும் கரையோரப் புகையிரதங்களில் வந்து அணி அணியாகக் தெஹிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி போன்ற இடங்களில் இறங்கி வன்செயலில் ஈடுபட்டனர், இச் செய்தியை இந்தியா ருடே (புதுடெல்லி, 31 ஆகஸ்ட் 83) உறுதி செய்தது.

கொழும்பு அடங்கிலும் நடைபெற்ற கலவரங்களில் இலங்கை அரசபடைகளும் நேரடியாக சில இடங்களிலும்,

# 73

## சின்னத்தம்பி வேலாயுதம்

கலகக்காரக் காடையருக்கு உதவியாகப் பல இடங்களிலும் செயற்பட்டது. "த ரைம்ஸ்" லண்டன் (5.8.83) பின்வருமாறு குறிப்பிடுகிறது. இராணுவத்தினர் சுறுசுறுப்பாக சூறையாடலுக்கும், தீவைத்தலுக்கும் உற்சாகம் கொடுத்தனர். அவர்கள் கலகக்காரரை அடக்குவதிலும் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் அக்கறை செலுத்தவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் கடைகளைக் கொள்ளையடித்ததில் தாங்களே முன்னின்றனர்.

இது சம்பந்தமாக ஜே.ஆர் பி.பீ.சீ நிருபரின் பேட்டிக்கு (4.8.83) ப் பதிலளித்தபோது பின்வருமாறு தெரிவித்தார். "அரச துருப்புக் களும் பொலிஸாரும் தமிழருக் கெதிரான கலவரங்களில் சில வேளைகளில் தூண்டப்பட்டு ள்ளார்கள். தமிழர் எதிர்ப்புணர்வு அலை ஒன்று இராணுவத்துள் இருப்பதாகக் கருதுகிறேன். அத்தோடு கலகக்காரரைச் சுடுவது சிங்களவருக்கு எதிரானது எனவும் இராணுவம் கருதுகிறது. உண்மையாகவே சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினர் கலகக்காரரை ஊக்குவிப்பதைக் கண்டோம். (த ரைம்ஸ் லண்டன் 9 ஆகஸ்ட் 83) மேற்கூறிய ஜே. ஆரின் கூற்று "த காடியன் " 9,8,83 ஆல் உறுதிப்படுத்தப்பட்டது.

கலவரம் பற்றிய மேலும் பல விபரங்களைத் தொடரமுன் இவ்விடத்தில் ஜே.ஆரும் தமிழர் அரசியலும் எனும் விடயத்தை நாம் விரிவாக ஆராய்வது இன்றைய அரசியலுக்கும் கூட மிக மிக அவசியமானதாகும். 1930 களிலிருந்து (சட்டசபைகாலம்) 1988 ம் ஆண்டுவரை (நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி) கிட்டத்தட்ட அறுபது வருட அரசியலில் இலங்கையின் வரலாற்றுச் சக்கரத்தை இனவாத சகதிக்குள் புதைத்த வண்டியை நகரமுடியாமல் ஸ்தம்பிக்கச் செய்த மிக முக்கிய நபர் ஜே. ஆர் தான் என்பதும் தன்னை ஒரு கம்யூனிஸ எதிர்ப்பாளனாகக் கருதிக் கொண்டு ஜனநாயகத்தினதும் புத்த மதத்தினதும் சிங்கள மக்களினதும் பாதுகாவலனாகவும் வரலாற்றில் இடம் பெறவேண்டுமென்ற எண்ணப் பாட்டினால் முழு தேசத்தையும் அழிவுக்கு இட்டுச் சென்றார் என்பதும் மறுக்க முடியாத உண்மை. தனிச்சிங்களத்தைச் சட்டசபைகாலத்தில் பிரேரித்தும், களனி மகாநாட்டில் பிரேரித்தும் பின் கண்டி யாத்திரை சென்றும் 1977 லிருந்து ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் மேலும் இனவெறியை வளர்த்தும், வரலாற்றில் அழியாத பொறுப்பற்ற இனத்துவேஷப் பேட்டிகள் கொடுத்தும் முழு அழிவில் முதலாளித்துவத்தைப் பாதுகாத்துச் சென்றவர்.

இந்த நபர் 1956 ல் ஆர்.ஜீ. சேனநாயக்காவினால் களனித் தொகுதியில் சவால் விடப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டு மெதுவாகத் தமிழர் வாழும் கொழும்பு தெற்குக்குச் சென்று அங்கிருந்து எமது தமிழ் பெருங்குடி மக்களால் மீண்டும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டவர். (ஜனாதிபதியாகும் வரை) இங்கு நான் விமர்சனத்துக்கெடுப்பது இந்த ஜே.ஆரை மீண்டும் மீண்டும் தெரிவு செய்த தமிழர் பற்றியே. இதிலே தெளிவேற்படுமாயின் ஈழப் போராட்டத்தின் அடிப படைகள் பற்றிய தெளிவும் ஏற்படலாம்.

முதலில் ஜே.ஆர் ஒரு நம்பிக்கைத் துரோகியாக நடந்ததையும் அதை தமிழர்கள் மிகவும் பெருந்தன்மை யுடன் எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பது பற்றியும் பார்ப்போம். 1983 கலவரத்தில் வெள்ளவத்தை பம்பலப்பிட்டித் தமிழர்கள் கொலை

செய்யப்பட்ட போதிலும்,கடைகள் தீ வைக்கப்பட்டபோதிலும், இராணுவமே கலவரத்தை நடத்திக் கொண்டிருந்த போது அதி உயர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியென்ற முறையிலும், (கொழும்பு தெற்கு) தனது தொகுதி வாக்காளப் பெருமக்களாகவிருந்து கண்ணை மூடிக்கொண்டு தன்னை ஆதரித்த அந்த தமிழர்களின் மரண ஓலத்தின் போது ஜே. ஆர் பி.பி சீக்கு எத்தனைய பேட்டியைக் கொடுத்தார் என்றால் குறைந்த பட்சம் தனது தொகுதித் தமிழர்களைப் பாதுகாக்க முடியாமற் போயிற்று. ஜே.ஆர் உண்மையாகவே ஒரு இன வெறியன் என வைத்துக் கொள்வோம். அப்படியாயின் எப்படி இந்தக் கொழும்புத் தமிழர்கள் ஜே.ஆரை மீண்டும் மீண்டும் தெரிவு செய்தார்கள். 1983ம ஆண்டு ஆடிக் கலவரத்துக்குப் பின் நடைபெற்ற தேர்தல்களில் கூட தமிழர்கள் ஐ.தே.கவுக்கே வாக்களித்துள்ளார்கள். இதன் மர்மம் என்ன? 1983 கலவரத்தின் பின் கூட தமிழ்த்தலைவர்கள் ஜே.ஆருடன் நல்லுறவு வைத்திருந்திருக்கிறார்களோ? அது எந்த அடிப்படையிலானது. "சீ" இணைப்புப் பற்றிய ஜே ஆரின் பேச்சுக்களை எவ்விதம் நம்பினார்கள்.

ஒரு தலைமை என்பது எப்பொழுதும் *(PERSONALITY + POLICY)* தனிமனித ஆளுமை + கொள்கை என்பதைப் பொறுத்தே அமைகிறது. இந்த இரண்டும் ஜே. ஆரைப் பொறுத்தவரை தமிழர்களுக்குப் பாதகமாகவே இருந்துள்ளது. 1957ல் கண்டியாத்திரை சென்ற பின்னர்தான் ஜே.ஆர். தமிழ் மக்களின் ஆதரவில் கொழும்பு தெற்குக்கு தெரியப்பட்டாரென்றால் இதே தமிழர்கள் அவரால் 1983ல் அடித்து விரட்டப்பட்டார்கள். இத்தமிழர்கள் இயல்பாகவே தமிழ் அறிவு குறைந்தவர்களாகவே காணப்பட்டதனாலும் கிணற்றில் தண்ணீர் அள்ளிப் பழக்கமில்லாதவர்களாக இருந்ததனாலும் 1983க்குப் பின் யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்குப் பதிலாக வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள். இவர்கள் இப்போதும் ஐ.தே. கட்சியையும் பழக்கதோஷத்தினால் கூட்டணி இல்லாதபடியால் புலிகளையும் ஆதரித்துத் தமது விடுதலைப் பங்களிப்பைச் செய்து கொண்டிருப்பார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. ஏனென்றால் 1983 க்கு முன்பு தமிழர் விடுதலை பற்றிய பல முக்கிய கூட்டங்கள் இதே ஜே. ஆரைத் தெரிந்தனுப்பிய தமிழர்களால் இராமகிருஷ்ண மண்டத்திலும் சரஸ்வதி மண்டபத்திலுமே நடத்தப்பட்டன.

தொடரும்

## ஒரு சிறுகதை

இலங்கையில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த எத்தனையோ முயற்சி எடுக்கப்படுகிறது. எல்லாமே வீண். இதோ என்னாலியன்ற சிறு ஆலோசனை தெற்கிலே ஐ.தே. கட்சியையும் வடக்கே புலிகளையும் எந்த தனி நபரோ, அமைப்புக்களோ வரப்போகும் 20 வருடங்களுக்கு எதிர்ப்பதில்லை என சத்தியம் செய்யுங்கள். யுத்தத்தினின்று அமைதியும் விடுதலையும் பிறக்கும்.


## சிவாஸ் ரேடிங் கோ
## மாபெரும் மலிவு விற்பனை

| | |
|---|---|
| சம்பா அரிசி 5 கிலோ | 4.99 |
| பஸ்மதி அரிசி (பரட் பிராண்ட்) 5 கிலோ | 7.99 |
| பஸ்மதி அரிசி 20 கி | 28.99 |
| மரக்கறி எண்ணெய் 3ட | 2.99 |
| மாங்காய் கோடியல் | 1.59 |
| மிஸ்டர் குடாஸ் பார்பொயில்ட் அரிசி 10கிலோ | 4.99 |
| மிஸ்டர் குடாஸ் All purpose மாவு 10 கிலோ | 4.99 |
| கோழிக்கால் ரூத் (பத்து ரூபாவுக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு) | .69 |
| உடன் கோழி (ஒருவருக்கு ஐந்து மட்டும்) | 1.99 |
| ஆட்டுக்கால் ரூத் | 1.99 |
| வறுத்த மிளகாய்த் தூள் 900 கி | 4.99 |
| எல்லா இலங்கை சவர்க்கார வகைகளும் | .48 சதம் |
| முட்டை (Tray of 30) (ஒருவருக்கு இரண்டு மட்டும்) | .99 சதம் |
| Fresh frozen King Fish | 2.99Lb |

மேலதிக விபரங்களுக்கு பின் அட்டையைப்பார்க்க..

குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

இரவு முழுக்க வெஸ்டன், செப்பாட் வெண்டில் உள்ள வூல்கோ வெயர் ஹவுஸில் செக்கியூரிட்டி காட்டாக வேலை செய்து விட்டு பஸ்ஸிற்காக காத்து நின்ற பொழுது தான் தற்செயலாக அவனை, என் பால்யகாலத்து நண்பன் நகுலேஸ வரனைச் சந்தித்தேன். எதிர்பாராத சந்திப்பு! இரவு முழுக்க, கிரேவ்யார்ட் சிப்ட் என்று கூறப்படும் மிட்நைட் சிப்ட் செய்துவிட்டு வீடு செல்வதற்காகக் காத்து நிற்கின்றேன். இவனோ வேலைக்குப் போவதற்காக நாளை ஆரம்பித்திருக்கின்றான்.

எத்தனை வருடங்களிற்குப் பின்னால் இவனைச் சந்தித்திருக்கிறேன். குறைந்தது இருபத்தி ஐந்து வருடங்களாவதிருக்கும். நகுலேஸ் வரனின் சந்திப்பு எனக்கு வன்னி ஞாபகங்களை ஏற்படுத்தி விட்டது. மழைக்காலமென்றால் குளங்கள் பொங்கி பாயும் வன்னி மண். மூலைக்கு மூலை குளங்களும் காடுகளும், பட்சிகளும் மலிந்த செழித்த மண். பால்ய காலத்து நினைவுகள் எப்பொழுதுமே அழியாத கோலங்கள் தான் இனிமையானவை. நெஞ்சில் பூரிப்பை ஏற்படுத்தி விடுவன.

என் பால்ய காலம், வன்னியிலேயே கழிந்து விட்டதால் என் நெஞ்சில் வன்னி வாழ்வும் மண்ணும் பசுமையாகப் பதிந்து போய்விட்டன. அதுவும் குறிப்பாக மாரி வந்து விட்டாலோ, வன்னி மண்ணின் அழகைச் சொல்லவே வேண்டாம்.

மழைக்காலம் என்றாலே வன்னி மண்ணின் பூரிப்பே தனிதான். வைரம் பாய்ந்த பாலைகள், கருங்காலிகள், முதிரைகள், மரந்தாவும் மந்திகள் மரஅணில்கள் மணிப்புறாக்கள், குக்குறுபான்கள், தேன் சிட்டுக்கள், மாம்பழத்திகள், காடைகள் கவுதாரிகள், காட்டுக் கோழிகள், மயில்கள், கொக்குகள் நாரைகள், நீர்க் காகங்கள், ஆலாக்கள், ஊர்லாத்திகள்.... அப்பப்பா பறவைகள் தான் எத்தனை எத்தனை வகைகள்!.

மாரியென்றால் பொங்கி வழியும் குளங்களில் வெங்கணாந்திப் பாம்புகளுடன் போட்டி போடும் மீனவர்கள், உண்மைதான் மாரி என்றாலே வன்னி மண்ணின் பூரிப்பே ஒரு தனிதான். 'சொத' 'சொத'வென்று சகதியும் இலைகளுமாகக் கிடக்கும் காட்டுப் பிரதேசங்களில் மெல்லப் பதுக்கிப் பாயும் முயல்கள், அசைவற்று நிற்கும் உடும்புகள், கொப்புக்களோடு கொப்புகளாக ஆகும் கண்ணாடி விரியன்கள்.

நகுலேஸ்வரனின் சந்திப்பு எனக்கு வன்னியின் ஞாபகத்தை ஏற்படுத்தி விட்டது.

"என்னடா நகுலேஸ் எப்ப நீ வந்தனி"

"நான் வந்து மூன்று வருஷமாச்சு... நீ "

"நான் போன வருஷம் தான் வந்தனான். நீயென்ன தனியவே"

"ஓமடா அந்தா தெரியுது பார் செப்பர்ட் வெஸ்டன் சந்தியிலிருக்கிற அபார்ட்மெண்ட் அங்கைதான் இருக்கிறன்.. மனுஷி பிள்ளைகள் ஊரிலை தான்! உன்ர பாடு எப்பிடி குழந்தை குட்டிகள் ஏதாவது"

"நானின்னும் கலியாணமே செய்யேலை .... குழந்தை குடும்பமென்று எனக்கு அந்தப் பிரச்சனை இதுவரை இல்லை.."

எனக்கு மனோரஞ்சிதத்தின் ஞாபகம் வந்தது. இவளும் பெயரிற்கேற்ற ஒரு பூ தான்! ஒரு காலத்தில் என்னைத் தான் கட்டுவேன் என்று ஒற்றைக் காலில் நின்றாள். இன்று புருஷன் பிள்ளையென்று ஸ்கார்பரோவில் தான் வசிக்கிறாள். தற்செயலாக ஒரு நாள் நொப்ஹில் பார்மிலை சந்தித்திருந்தேன்.

பஸ் வந்தது செப்பார்ட் சப்வே மட்டும் இருவரும் ஒன்றாகவே சென்றோம். அங்கிருந்து நகுலேஸ் ஸ்டீல்ஸிற்குப் போகவேண்டும். நான் சென்கிளையர் வந்து, ஈஸ்ட்டிற்கு பஸ் எடுக்க வேண்டும்.

"சர்ட்டடே, சண்டே பிரீயாயிருப்பேன் வாவென்"

எனக்கும் 'சண்டே' வேலையில்லை. "சண்டே எனக்கும் வேலையில்லை சந்திக்கலாம்."

எனக்கு ஞாபகம் வரும் இன்னுமொரு விடயம் சுமண தாஸ பாஸ்! உயரமும், கம்பீரமும் வாய்ந்த சுமணதாஸ பாஸின் அகன்ற பெல்ட்டும் சறமும் கூடிய தோற்றமும் உடனே ஞாபகத்திற்கு வந்தது. நாங்களிருந்த பகுதியில் அருகிலிருந்த ஒரேயொரு சிங்களக் குடும்பம் சுமண தாஸ பாஸின்ர குடும்பம் தான்! சுமண தாஸ பாஸ் மரவேலை செய்பவர் நல்ல மனுசன்.

"அது சரி நகுலேஸ்... சுமணதாஸ பாஸ் குடும்பம் எப்படி?.. இன்னமும் அங்கை தானோ..."

நகுலேஸ்வரன் என்னை ஒரு வித வியப்புடன் பார்த்தான்.

"என்னடா உனக்கு விஷயமே தெரியாதே"

"என்ன விஷயம்"

"சுமணதாஸ பாஸின்ற குடும்பத்தையே ஆமிக்கு உளவு சொன்னதென்று சுட்டுப் போட்டாங்கள்"...

என்ன... எனக்கு உண்மையிலேயே அதிர்ச்சியாகத் தானிருந்தது. நான் எதிர்பாராத கனவில் கூட கற்பனை செய்திருக்க முடியாத தகவல்

"என்ன நகுலேஸ் நீ சொல்றது உண்மையே ...எப்ப இது நடந்தது?"

"இது நடந்து இப்ப எட்டு வருஷமாச்சுது.. எண்பத்தி ஐந்திலை என்று நினைக்கிறன்..."

மீண்டும் நெஞ்சில் சுமணதாச பாஸின்ற நினைப்பு அவரின்ற குடும்ப நினைவும் எழுகின்றன. இன்றைக்கு நான் உயிரோடு இருப்பதற்குக் காரணமே அந்த சுமணதாஸ பாஸ் தான். நினைவுகள் பின்னோக்கி ஓடுகின்றன. வன்னி மண்ணும், அந்த மண்ணில் ஒன்றிக் கலந்து விட்ட என் பால்யகாலத்து நாட்களும் மறக்கக் கூடிய விடயங்களா என்ன? வன்னி மண்ணின் மேல் எனக்கு எப்பொழுதுமே ஒரு வித அன்பும், பரிவும் மதிப்பும் உண்டு ஒரு விதத்தில் வீரம் விளைந்த மண் என்றுகூடச் சொல்லலாம். வடக்கில் சங்கிலியன் போல், ஒரு காலத்தில் அந்நியர்களிற்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய பண்டாரவன்னியன், கைலைவன்னியன் போன்ற வீரர்களையும், நல்லநாச்சியார் போன்ற வீராங்கனைகளையும் தந்த மண்ணல்லவா. அந்த வன்னி மண்ணில் கலந்து விட்ட என் பால்ய காலத்து நினைவுகளில் மனது மூழ்கி விடுகின்றது.

தொடரும்

## வீமா றெஸ்ரோறன்ட்

ராஜா தியேட்டருக்கு முன்னால் ௨வது மாடியில்

**1430 A, Gerrard St E,**

**(2nd Floor) Toronto, Ont**

**(416) 406 4611**

உங்கள் இல்லங்களில்
நிகழும் திருமண
வைபவங்களையும் பிறந்த நாள்
கொண்டாட்டங்களையும்
சிறந்த முறையில்
மெருகூட்டுவதற்கு
தேவையான உணவுவகைகளை
எம்மிடம் தரமாகவும்
மலிவாகவும் பெற்றுக்
கொள்ளலாம்

ரொறன்ரோ மாநகரில் இலங்கை முறையில்
தயாரிக்கப்பட்ட
*Sherbet. Ice Cream, Fruit Salad* மற்றும்
உணவுவகைகளையும் குளிர்பானங்களையும்
அருந்தி மகிழ விஜயம் செய்யுங்கள்.

நீங்கள்
விரும்பும் வகையில்
உறவினர்களுக்கோ
நண்பர்களுக்கோ எமது
ஸ்தாபனத்தில் விருந்துபசாரம்
அளிக்க ஒழுங்குகள்
செய்யப்படும்.

பரிமாறும் சேவையும் ஒழுங்கு
செய்து தரப்படும்

மாலை நேரங்களில் *Downtown* பகுதியில்
ஐம்பது டொலர்களுக்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு
இலவச வினியோகம்

## ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil





# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ஞன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

### விஜேவீர தான் சார்த்திருந்த பக்கத்தை மாற்றுகிறார்;

கிளர்ச்சி இடம் பெற்று அவ்வளவு காலம் செல்லு முன்னரேயே ஏப்பிரல் கிளர்ச்சி அரசியல் ரீதியாக தவருனது என்பதை விஜேவீர விளங்கிக் கொள்கிருர். ஆனல் அவ் அரசியல் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவரின் தேவைகள் இடமளிக்கவில்லை. மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோர் மட்டத்து மார்க்சிஸ்ட் என தன்னைப்பற்றி எண்ணியிருந்த விஜேவீர அவர்களுக்கு சிறு பிள்ளைத்தனமான தவறுகள் நிகழ முடியுமா? அத்தகைய தவறுகள் நிகழ முடியாது என்பதைக் காண்பிக்கவே கிளர்ச்சியின் பொறுப்புகளிலிருந்து தான் நழுவிக் கொண்டதோடு அப்பொறுப்புகளை லொக்கு அத்துல மீது சுமத்திஞர். இத்தகைய உபாயங்கள் மூலம் கிளர்ச்சியின் பொறுப்புகளிலிருந்து தப்பித்துக்கொள்வது கஷ்டமான காரியமாகும். விஜேவீர சரியான சுயவிமர்சனம் ஒன்றைச் செய்வார், முதலாளித்துவ நீதிமன்றத்தின் முன்னல் உண்மையைக் கூறக்கூடாது என்பதனுலேயே விஜேவீர அவ்வாறு சாட்சியம் வழங்கிஞர் என பலர் எண்ணியது மட்டுமல்ல அவரது சகாக்களும் காட்டினர். ஆதலால் வழக்கு விசாரணைகள் முடிவுற்ற பின்னர் விஜேவீர சுயவிமர்சனம் செய்வார் என பலரும் எண்ணினர்.

இந் நிலமைகளின் கீழ் விஜேவீர தனது தத்துவத்தினதும் அரசியலினதும் தூய்மையைப் பாதுகாப்பதற்காக வழி தேடிஞர். பிரதான வழக்கின் ஊடாக அதற்கான பாதையை தேடிக்கொண்டார். ஜே.வி.பி.யின் அரசியல் 71 ஏப்பிரல் கிளர்ச்சி பற்றி சரியான சுயவிமர்சனம் ஒன்றைச் செய்வதையும் ஜே.வி.பி.யின் கடந்த கால அரசியலைப் பற்றிப் பேசுவதையும் தவிர்த்து பாலா தம்பு அவர்களின் உதவியுடன் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தவறுகளைப் பற்றி பேசத் தொடங்கிஞர். லெனின் அவர்களது மரணத்தின் பின்னர் உலக கம்யூனிஸ்ட் இயக்கம் சீரழிந்து விட்டது எனவும் ஸ்டாலின் முன்வைத்த தனி ஒரு நாட்டில் சோஷலிசம் ஐக்கிய முன்னணி ஆகிய கோட்பாடுகள் மார்க்சிஸத்திலிருந்து தடம் புரண்டவை மட்டுமல்ல முதலாளித்துவத்துடன் இணைந்து கொள்பவை எனவும் விஜேவீர கூறிஞர். இது வலது சாரி சீரழிவு சர்வதேசிய வாதத்தைக் காட்டிக் கொடுத்த ஸ்டாலின் குட்டி முதலாளித்துவ கருத்தமைவான தேச பக்தியை அணைத்துக் கொண்டதனுல் சந்தர்ப்ப வாதச் சேற்றுக்குள் வீழ்ந்தாரெனவும் ஸ்டாலின்வாத-மாவோ வாத சீரழிவுகளால் உலக கம்யூனிஸ்ட் இயக்கமும் உலகப் புரட்சியும் அழிக்கப்பட்டது எனவும் கூறிய விஜேவீர தான் கண்டுபிடித்த புதிய தத்துவத்தைக் கூறுவதுபோல் ட்ரொஸ்கிஸ கருத்துக்களை முன் வைத்தார். ஆனுலும் தான் முன்வைப்பது ட்ரொட்ஸ்கிஸ கருத்துக்களையே எனக் கூறும் அளவுக்கு கூட விஜேவீரவிடம் நேர்மை இருக்கவில்லை.

இவ்வாறு ஸ்டாலின் மீதும் மா ஓ மீதும் கடுமையான தாக்குதல்களைத் தொடுத்த விஜேவீர தனது அங்கத்தவர்கள் ஜே.வி.பி.யின் அரசியல் தவறுகள் தொடர்பாக பேச முன்வருவதை தடுத்ததோடு அவை பற்றிப்பேசுவதை ஒதுக்கி தள்ளி உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தவறுகள் குறைபாடுகள் பற்றி ஆய்வு செய்வதை நோக்கி அவர்கள் தள்ளப்பட்டனர். உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தவறுகள் குறைபாடுகள் பற்றி பேசுவதும் அவசியமானதுதான். ஆனல் தமது தவறுகளைப் பற்றிப் பேசுவதை முற்ருக தவிர்த்துக் கொண்டு உலக கம்யூனிஸ இயக்கத்தைப் பற்றி பேசுவதுடன் மட்டுப்படுத்திக் கொள்ளல் தமது தவறுகளி லிருந்து தப்பித்து ஒடுவது மாத்திரமல்ல அது ஒரு ஏமாற்றுமாகும்.

இவ்வாருக சோவியத் யூனியன் சரியா? சீஞ சரியா? ஸ்டாலின் சரியா? மாஓ சரியா ஆதிய பற்றிய விவாதங்கள் இடம் பெற்றதால், ஜே.வி.பி.யின் அரசியல் தவறுகள் என்ன? அவற்றில் விஜேவீரவின் பொறுப்புக்கள் யாவை? ஆகிய பிரச்சனை பற்றி பேசுவதற்கான வழிகள் முடப்பட்டன. இதன் பின்னர் விஜேவீர தான் அதுவரை காலமும் அரை ஸ்டாலின் வாத, அரை மாவோ வாத அடிப்படையின் கீழ் செயல்பட்டதாகவும், நாம் தோன்றியது மென்ஷிவிக் கருப்பையிலிருந்தே எனவும் இதனுலேயே ஸ்டாலின் வாத, மாஓவாத மென்ஷ்விக் கருத்துக்கள் ஜே.வி.பி.க்குள்

நிலவியதாகவும் இத்தவறுன அடிப்படையின் கீழ் செயல் பட்டதாலேயே ஜே.வி.பி.க்குள் தவறுகள் நிலவின எனவும் படிப்படியாகக் கூறி தாம் இழைத்த தவறுகளின் பொறுப்புகள் அனைத்தையும் ஸ்டாலின் மாஓ மீது சுமத்தி தனது "தவறற்ற தன்மையை" காண்பித்தார்.

## நவீன போல்ஷவிக் வாதிகள்

1970 களின் இறுதி அரைப் பகுதியில், விஜேவீரவின் வாக்கியங்களிலேயே கூறுவதாயின், அவர் அரை-ஸ்டாலின் வாத அரை-மாஓ வாதத்திலிருந்து உடைந்து விடுபட்டு போல்ஷிவிக் வாதத்தைச் சென்றடைந்தார். இதன்படி அவர் நவீன போல்ஷவிக் வாதியானுர். "நவீன போல்ஷவிக் வாதத்தை" அணைத்துக் கொள்ளாத ஜே.வி.பி. யினர் ஒன்றில் அனைவரும் விலக்கப் பட்டனர் அல்லது விலகிக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகள் அமைந்தன. 1976 அளவில் அரை-ஸ்டாலின் வாதத்திலிருந்தும் அரை-மாஓ வாதத்திலிருந்தும் முற்ருக தூய்மைப்படுத்தப்பட்ட "நவ போல்ஷ்விக்வாத" ஜே.வி.பி. சிறைச்சாலைக்குள்- மகசின் சிறைச்சாலைக்குள் உருவாக்கப் பட்டது. அது வரை காலமும் ஜே.வி.பி. அங்கீகரித்த தேசபக்தி, ஐக்கிய முன்னணி போன்ற கோட்பாடுகள் பூரணமாக நிராகரிக்கப்பட்டன. ஜே.வி.பி.யின் கட்டுரைகள், கவிதைகள் பாடல்களிலிருந்த தேசபக்த வாக்கியங்கள் அகற்றப்பட்டன. இவை அனைத்துக்கும் பின்னர் ஜே.வி.பி. தலைமை "சுயவிமர்சனத்தில்" ஈடுபட்டது. லயனல் போபகே அவர்களால் கட்சித் தலைமையின் சார்பில் எழுதப்பட்ட சுயவிமர்சனம் "71 ஏப்பிரலை நோக்கி சுயவிமர்சன ரீதியாக திரும்பிப் பார்ப்போம்" என்னும் பெயரில் பின்னர் அச்சிடப்பட்டது. இச் சுயவிமர்சனம் முற்ருகவே ஒரு ஏமாற்ருகும். ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளராகவும் நீண்ட காலம் விஜேவீரவின் நெருங்கிய சகபாடியாகவும் இருந்த லயனல் போபகே பிற்காலத்தில் ஜே.வி.பி.யிலிருந்து இராஜினுமாச் செய்யும் போதுதான் எழுதிய இராஜினுமாக் கடிதத்தில்- அக்கடிதம் பூரணமாக திறந்த சுபாவத்துடன் எழுதப்பட்டது எனக் கூற முடியாவிட்டாலும்- அக்கடிதத்தில், ஜே.வி.பி.யில் நிலவிய சில தவறுகளும் குறைபாடுகளும் ஜே.வி.பி.க்குள் இருக்கவில்லை எனக் கூறவேண்டிய சூழ்நிலையே சிறைச்சாலைக்குள் நிலவியது எனவும் ஜேவிபிக்காக தான் தயாரித்த சுயவிமர்சனத்திலும் கூட அந்நிலைமையே உள்ளது எனவும் ஏற்றுக் கொண்டுள்ளார். அவரின் கூற்றுப்படி நிலவிய அத்தவறுகள் திருத்திக் கொள்வதற்குப் பதிலாக தவறுகள் மென்மேலும் அதிகரித்தன என்பதாகும். ஆனுல் தவறுகள் என்னவென லயனல் போபகே கூறவில்லை.

அனைத்து "சந்தர்ப்ப வாதிகளையும்" "துரோகிகளையும்" துரத்திய பின்னர் சிறைச்சாலைக்குள் இருந்த ஜேவிபியினர் போல்ஷவிக் வாதிகளாக்கப்பட்டனர். இதன் பின்னர் ஜே.வி.பி.யின் கண்ஞேட்டம் செயல்முறைகளைப் பொறுத்த வரையில் பூரணமான ட்றொஸ்க்கிஸவாத ஸ்தாபனமாக மாறியது. ஆனுல் தாம் ட்றொஸ்கிவாதிகளாக மாறிவிட்டதாக ஜே.வி.பி. ஒரு போதும் கூறவில்லை.

## ஜே.வி.பி. சட்ட பூர்வமான அரசியலுக்குள் பிரவேசிக்கிறது.

நாட்டில் விருத்தி பெற்றுவந்த நிலமைகளின் கீழ் 1977ன் ஆரம்பப் பகுதியில் அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்படுகிறது. இது ஜே.வி.பி. யினரின் நடவடிக்கைகளுக்கு பெரும் துணையாக அமைந்தது. அவசர காலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெரும் தொகையினர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் மத்தியில் கமநாயக போன்ற ஜே.வி.பி. இயக்குனர்களும் அடங்குவர். இக் காலத்திலிருந்து தான், 1971 கிளர்ச்சிக்குப் பின்னர் முதற்தடவையாக சட்டபூர்வ ஸ்தாபனமாக ஜே.வி.பி இயங்க ஆரம்பித்தது. பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட கமநாயக அவர்களின் தலைமையின் கீழ் ஜே.வி.பி யின் அரசியல் நடவடிக்கைகள் நாட்டில் மீண்டும் ஆரம்பமாகின. 1971ல் இருந்த தொடர்புகளை மீண்டும் நெறிப்படுத்தவே ஆரம்பத்தில் அவர்கள் கவனம் செலுத்தினர்.

1977ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ம் திகதி பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டிய கமநாயக தமது எதிர்கால வேலைத் திட்டத்தை பிரகடனப்படுத்தினுர். 1971 பெப்ரவரி 27 ம் திகதி ஹைட்பாக் பொதுக் கூட்டத்திற்குப் பின்னர் முதலாவது பொதுக் கூட்டம் 1977 மார்ச் 11ம் திகதி நடாத்தப்பெற்றது. அக் கூட்டத்தில் ஜே.வி.பி.யின் எதிர்கால பயணத்தையும் புதிய கொள்கைகளையும் விளக்கிய கமநாயக ஜே.வி.பி.யானது ஆயுதப் போராட்ட மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் வேலைத் திட்டத்திலிருந்து பாராளுமன்ற போராட்டத்திற்கு அடி எடுத்து வைப்பதாகவும் தாம் இனிமேலும் இரகசிய நபர்களோ, ஸ்தாபனமோ அல்ல எனவும் கூறினுர்.

இதற்கேற்ப 1977 பொதுத் தேர்தலில் ஹொரவப்பொத்தானை, ஹக்மனை, அநுராதபுரம் மேற்கு, தங்காலை ஆகிய தேர்தல் தொகுதிகளில் ஜே.வி.பி. வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்தனர். அக்கால கட்டத்தில் தேர்தல் ஆணையாளரால் ஜே.வி.பி. அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக இருக்கவில்லை. இதனுல் இவ் வேட்பாளர்கள் சுயேச்சையாகவே போட்டியிட்டனர். நான்கு தொகுதிகளிலும் இவர்கள் 3371 வாக்குகளைப் பெற்றனர்

தொடரும்

**தான் முன்வைப்பது ட்றொட்ஸ்கிஸ கருத்துக்களையே எனக் கூறும் அளவுக்கு கூட விஜேவீரவிடம் நேர்மை இருக்கவில்லை.**

# அறு(சு)வை



## அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

மைக்கேல் ஜாக்ஸனின் பிளாக் அண்ட் வைட் வீடியோ பார்த்திருப்பீர்கள். கலியாண வீட்டு ஆட்டங்களில் நம்ம சிறிசுகள் அதைப் போல ஆடுவதைப் பார்த்து 'பிரமித்தும்' இருப்பீர்கள். மைக்கேல் பற்றி ஒரு கிசுகிசு.. இவர்களின் குடும்பத்தினர் அனைவரும் கலந்து கொள்கின்ற ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை தயாரிக்கும் அண்ணன் ஜெர்மெயின் ஜாக்ஸன் இப்போது வீட்டிலிருந்து வெளியேறியிருக்கும் லா ரோயா ஜாக்ஸனையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதற்காக, நேரடியாக அழைப்பிதழைக் கையளிக்க பாரிஸ் போகிறாராம். ஒரு குடும்பத்திற்குள் இத்தனை குத்து வெட்டு.. நம்ம நாடு மேல்.. இந்த அழைப்பிதழ் எல்லாம் கிடையாது. டுமீல்.. டுமீல்.

*Supermarket Tabloids* அதிகம் செய்தி வெளியிட்டது ஜாக்ஸனுகத் தான் இருக்கும். இவர் நீண்ட ஆயுள் பெற ஓட்சிசன் தாங்கியில் உறங்குகிறார் என்று படம் கூட வெளியிட்டார்கள். முகமெல்லாம் கோரமான 'யானை மனிதனின்' எலும்புக்கூட்டை வாங்குகிறார் என்றெல்லாம் செய்தி வந்தது. ஒரு தடவை இவர் கடை ஒன்றுக்கு போன சமயம் பிளாஸ்டிக் சர்ஜரி செய்த இவரது மூக்கு கழன்று விட்டது. முகத்தை மூடிக் கொண்டு ஓடி மறைந்து விட்டார்.

மைக்கேல் ஜாக்ஸனின் வீடியோவில் தமிழ் பெண் பரத நாட்டியம் ஆடுகிறார். அதைப் பற்றி தாயகமும் செய்தி வெளியிட்டிருந்தது. நான் சொல்ல வந்தது என்னவோ!

★ ★ ★

ஜாக்சனின் வீடியோவில் முகங்கள் திரும்ப திரும்ப வெவ்வேறு உருவங்கள் வந்து கொண்டிருக்கும். இது கம்பியூட்டர் அனிமேஷன் மூலமாக செய்யப்பட்டது. இதை ஆங்கிலத்தில் *Morphing* என்று குறிப்பிடுவார்கள். இந்த சொல் ஆங்கிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 'கலைச்சொல்'. *Morphine* என்று இன்னொன்று இருக்கிறது. கஞ்சா போன்ற போதை வஸ்துவிலிருந்து தயாரிக்கப்படுகின்ற ஒரு மருந்து. நோய்களிலிருந்து நிவாரணம் பெற பயன்படும். ஆனால் போதைவஸ்தாக பாவிக்கப படுவது. கண்ணதாசன் இதைப் போலவே பெத்தடின் போன்ற போதைவஸ்துவைப் பாவித்ததாக எங்கோ வாசித்த நினைவு. இது ஊசி மூலம் ஏற்றிக் கொள்வது.

மோர்பிங் என்பதற்கு வருவோம். கம்பியூட்டர் உதவியுடன் ஒரு உருவத்தை இன்னொரு உருவமாக மாற்றுவதே இது. டி.வியில் சில விளம்பரங்கள் பார்த்திருப்பீர்கள். மைக்கேல் ஜாக்ஸனின் வீடியோ சோனி தயாரித்த லட்சக்கணக்கான பெறுமதி கொண்ட உபகரணங்களினால் தயாரிக்கப்பட்டது. மோர்ப் என்ற பெயரில் மக்கின்ரோஷ் கம்பியூட்டருக்கு ஒரு புரோகிராம் உண்டு. இது மக்கின்ரோஷ் உதவி கொண்டு இந்த ஜில்மால்களை செய்ய பயன்படும். இந்த புரோகிராமின் பெட்டியில் நமக்குப் பொருத்தமான படம் ஒன்று உண்டு. பூனையின் உருவம் எவ்வாறு புலியாக மாறுகிறது என்பது தான் அது. இரு உருவங்களினதும் வெளிப்பரப்ப ,கோடுகளையும் மாற வேண்டிய நேரத்தையும் கொடுத்தால் கம்பியூட்டர் மீதி வேலைகளைச் செய்கிறது.

நம்ம வீடியோக்காரர்கள் இன்னமும் இந்த விடயத்தில் கைவைக்கவில்லை. இது கிட்டத்தட்ட எல்லாக் கம்பியூட்டர்களிலும் சாத்தியமாகி விட்டது.

★ ★ ★

எனக்கு தமிழ் வீடியோப் பார்க்கும் போது எரிச்சலூட்டுவது இரண்டு விடயங்கள். இந்தியாவில் தயாரித்த படத்தின் வீடியோவை 'திருட்டு என்றே நம்மால் கருதப்படுகின்ற' வகையில் பிரதி செய்து விட்டு அதற்குள் ஏதோ தாங்கள் தான் தயாரித்தது என்ற மாதிரி, படம் தொடங்குமுன் 'கோமாளி வீடியோஸ்' பெருமையுடன் வழங்கும் என்று அறிவிப்பு வேறு. அதற்குள் படத்தின் பிரேமில் கால் பகுதியை விழுங்கி விடுகின்ற மாதிரி இவர்களின் வீடியோக்கடையின் பெயர் கீழே படத்தை மறைத்துக் கொண்டிருக்கும். தங்கள் பிரதிகளை வேறு யாரும் திருட்டுத்தனமாக கொப்பி பண்ணாமல் இருப்பதற்காக...

★ ★ ★

மோர்பிங்குக்கு வருவோம். பூனையைப் புலியாக்குவதில் தமிழர்கள் கைவந்தவர்கள். இதனால் இப்போது புலியின் வாலைப் பிடிக்க வேண்டிய கட்டாயம். அனுபவி ராஜா அனுபவி...

மோர்ஃப் என்பது உண்மையில் ஆங்கிலச் சொல்லான *Metamorphosis* என்பதிலிருந்து பிறந்தது. இந்தப் பெயரில் ஒரு கம்பியூட்டர் புறோகிராம் உண்டு. இது மக்கின்ரோஷ் கம்பியூட்டர்களுக்கான தமிழ் எழுத்துக்களை ஐ.பி.எம் கம்பியூட்டர்களுக்கான எழுத்துக்களாக மாற்றப் பயன்படுவது. (இதில் பல தொழில்நுட்பப் பிரச்சனைகள் உள்ளன. உங்களுக்கு தேவையில்லாத சமாச்சாரம் அவை) *Metamorphosis Professional* என்ற இந்த புரோகிராம் மெற்றோ புறோ என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

தமிழ் எழுத்துக்கள் என்றதும் ஞாபகம் வருகிறது. மக்கின்ரோஷ் கம்பியூட்டர்களில் எழுத்துக்களை உருவாக்கும் *Fontographer* இப்போது ஐ.பி.எம் கம்பியூட்டர்களுக்கும் வந்து விட்டது. எல்லோரும் வாங்கிப் பயன் அடையுங்கள். போலிகளை

அதிக விலை கொடுத்து வாங்கி ஏமாறுகிறீர்கள்.

★ ★ ★

Metamorphosis என்பது உருமாற்றத்தைக் குறிப்பது. மயிர் கொட்டி தான் வண்ணத்துப் பூச்சியாக உரு மாறுகிறது என்பது இன்னமும் பலருக்குத் தெரியாமல் இருக்கக் கூடும். பூச்சிகள் வாழ்வு இப்படியானது தான். உருவம் மாறும்.

மயிர் கொட்டியாற் கடிபடுவது என்பது ஒரு நல்ல அனுபவம். காரணம் சொறிவதற்கு அது நல்ல சந்தர்ப்பம். சொறிவதல்லால் சுகமேது? சொறி ஒன்று தான் வேதனையிலும் இன்பம் தருவது. முருக்கை மரங்களில் படை போலத் தொங்கியிருக்கும் மயிர் கொட்டிகளும் கறுப்பு நிற மயிர் கொட்டிகளும் எவ்வளவு அற்புதமானவை. மசுக்குட்டி என்ற செல்லப் பெயரில் கடித்து துன்புறுத்தும். ஆளையறியாமல் எங்காவது படும் போது சொறியத் தொடங்க விசர் வரும். மழை காலத்தின் பின்னர் ரோட்டில் போகும் போது சைக்கிளால் நசிப்பதில் பெருங் குஷி.. பழிவாங்கும் உணர்வு மிஞ்சி நிற்கும். Pre emptive strike என்பது போல, வருமுன் காத்தல்.

இந்த மயிர் கொட்டி கொஞ்சக் காலத்தின் பின் வழுக்கைத் தலையனுக்கு அழகான வண்ணத்துப் பூச்சியாக உருவெடுக்கும். சின்ன வயதில் வண்ணாத்திப் பூச்சி பிடிப்பதில் எவ்வளவு ஆர்வம்.. இரண்டு வண்ணாத்திப் பூச்சி... சே.. வண்ணத்துப் பூச்சிகளை இணைத்து நூலால் கட்டி அவற்றின் துன்பத்தில் இன்பம் கண்டது இந்த மனசு. இப்போது நினைக்கும் போது பரிதாபமாயிருக்கிறது.

இறக்கையைப் பிடித்தால் கையில் வண்ணக் கோலங்களை தீட்டிச் செல்லும்.

ஒரே உயிர்.. இரண்டு வடிவங்கள். வெவ்வேறான இயல்புகள்.. ஒன்றில் அகோரம்.. மற்றதில் அழகு. ஒன்று ஊரும். மற்றது பறக்கும். ஒன்று தீமை செய்யும். மற்றது மகரந்தம் சேர்த்து பயன் தரும்.

★ ★ ★

தாயகமும் இப்போது உருமாற்றத்திற்குள்ளாகியிருக்கிறது. பத்திரிகை என்ற அமைப்பிலிருந்து சஞ்சிகை என்ற அமைப்புக்கு உருமாறுகிறது. இயல்புகள் ஒன்றாகவே இருக்கும். உருவம் மாறினாலும் உள்ளடக்கம் மாறாது. நிலைப்பாடு மாறாது என்று நினைக்கிறேன். இதுவும் ஒரு Metamorphosis தான். அதிலும் சஞ்சிகைகளின் ஆயுள் அதிகமானது. வீடுகளில் அறுபதுகளில் வந்த பேசும் படம் இழுபட்டுக் கொண்டிருக்கும். ஆனால் பத்திரிகைகள் நீங்கள் அடுத்த முறை சாப்பாட்டுப் பார்சல் கட்டும் வரை தான் அதன் ஆயுள்.

★ ★ ★

சஞ்சிகைகள் வருவதும் போவதுமாக உள்ளன. எந்த சஞ்சிகை பற்றியாவது ஏதாவது ஒரு கொமண்ட் எழுதாவிட்டால் கியூறியஸ்க்கு தூக்கம் வராது. அதே போல தங்கள் சஞ்சிகை பற்றி ஏதாவது வராவிட்டாலும் சஞ்சிகையாளர்களுக்கு தூக்கம் வராது.

ரோஜா என்றொரு சஞ்சிகை பார்த்தேன். மிகுந்த பொருட்செலவில் அழகான அட்டைப்படம். ரோஜா என்ற தலைப்பை எங்கோ பார்த்த ஞாபகமாயிருக்கிறதே என்று பார்த்தால் ரோஜா படத்தின் விளம்பரத்திலும் Stroke எழுத்துக்களால் ரோஜா எழுதி ஒரு தனி ரோஜாவை அதன் கீழ்ப்புறத்தில் போட்டிருந்தார்கள். இந்த ரோஜாவின் தலைப்பும் அதே மாதிரி.. இதென்ன.. தலைப்பு வடிவம் கூட மறுபிரசுரமா?

★ ★ ★

பார்சல் ஹாண்ட் என்று அழைக்கப்பட்ட பொதிகை பற்றி ஒரு கொசுறு.. சஞ்சிகை வெளிவந்த போது விளம்பரம் போட்ட ஆசிரியர் மீண்டும் தாயகத்திற்கு விளம்பரம் கொடுத்திருக்கிறார். பொதிகை இனிமேல் வெளிவராது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறாராம். பரவாயில்லை. இது ஒரு தார்மீகக் கடமை. ஆனால் ஏற்கனவே சஞ்சிகை நடத்தி தேய்ந்தவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருக்குமே! Welcome to the club என்பார்களோ?

★ ★ ★

கழுதை தேய்ந்து கட்டெறும்பான சஞ்சிகை ஒன்றில் ஈழத்து ஓவியர்கள் பற்றி ஒரு பேராசிரியர் கட்டுரை தொடர் வரைந்திருந்தார். சோ.கிருஷ்ணராஜா என்ற பேராசிரியர் தான். சஞ்சிகை வராமல் விட்டதும் தொடர் வந்தது இன்னொரு சஞ்சிகையில்.. புலிகளின் எரிமலை சஞ்சிகையில்.. ஆனால் எழுதியவர் பெயர் சோகி என்று இருந்தது. சோ. கிருஷ்ணராஜா என்பது சுருங்கி விட்டது. பரவாயில்லை. அடுத்த முறை மாமனிதர்கள் வரிசையில் அடுத்த முறை தலைவர் சில ஓவியர்களுக்கு பதக்கம் கொடுத்து சிறப்பு செய்தி வெளியிடுவார் என்று எதிர்பார்க்கலாம். உலகத்தமிழரில் பின்புறம் தலைவரின் கவிதையும் வரலாம்.

ஓவியங்கள் தீட்டும்
தூரிகைகளாய் ஏ.கேகள்!
மாவீரரால் இவை
காவியம் தீட்டும்

சாவில்லை இவர்க்கு!
மக்கள் மனதில் இவர்
அழியாத ஓவியம்

சுட்டார் பெரியோர்
சுடாதார் இழிகுலத்தோர்
பங்கருக்குள் இருந்தபடி!

★ ★ ★

சவூதி பத்திரிகை ஒன்றில் ஒரு காட்டூன்.. மலை முன்னால் நின்ற மனிதன் 'இறைவா, நீ அங்கு இருப்பது உண்மை என்றால் ஏதாவது அறிகுறியைக் காட்டு' என்கிறான். அடுத்த படத்தில் மழை பொழிகிறது. மனிதன் சொல்கிறான். 'இரண்டு விடயங்கள் உண்மை. ஒன்று கடவுள் மேலே இருக்கிறார். மற்றது கடவுளுக்கு நகைச்சுவை உணர்வுண்டு'. சவுதி அரசுக்கு வந்தது கோபம். கடவுளின் இருப்பில் சந்தேகமா? ஆசிரியர் கைது செய்யப்பட்டிருக்கிறார்

★ ★ ★

சங்கம் பற்றிய தகவல் ஒன்று.. சங்கம் அமைப்பது ஏன்? எதற்கு என்று காரணம் உண்டு. ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினர் தங்களது

ம.ப.பா

நலன்களைப் பாதுகாக்க சங்கம் அமைப்பார்கள். ஏதாவது பாதிப்பு அந்தக் கூட்டத்தினருக்கு ஏற்பட்டால் அதற்கு எதிராய் குரல் கொடுக்க சங்கம் தொடங்குவார்கள். அல்லது ஒரே கருத்துக்களைக் கொண்டோர் கருத்துக்களைப் பரிமாறி நேரம் போக்க சங்கம் இருக்கும். ஊரில் வாழைக்குலைச் சங்கம், விவசாயிகள் சங்கம், சுருட்டுத் தொழிலாளர் சங்கம் என்றிருக்கும். அங்கே வருடாந்தம் சமுக சேவைத் திணைக்களம் கொடுக்கிற 75 ரூபாவுக்காக அலைந்த சனசமூக நிலையக்காரர்களை நினைக்க பரிதாபமாக இருக்கிறது. இங்கேயும் 'சுருட்டும் தொழிலாளர் சங்கம்' அதிகமாகி விட்டது. அரசாங்க உதவிப் பணத்தை சுருட்டும் நோக்கில் சங்கம் அமைக்கப்படுகின்றது. அன்றைக்கு ஒரு விளம்பரம் பார்த்தேன். நைஜீரியாவில் வாழ்ந்தவர்கள் சங்கம் அமைக்கப் போகிறார்களாம்.

போகிற போக்கில் 'சிறை சென்ற செம்மல்கள் சங்கம்', துப்பாக்கியால் சுட்டோர் சங்கம், தூள் விற்போர் சங்கம், வட்டிக்காரரர் சங்கம், சீட்டுக்காரரர் சங்கம், ஏஜன்சிக்காரரர் சங்கம், பேஸ்போல் மட்டை பாவனையாளர் சங்கம் என்று போகும் போலிருக்கிறது. ஆற்றில் போகிறது. அண்ணா குடி, தம்பி குடி...

நானும் தலைமாற்றி வந்தோர் சங்கம் அமைக்கப் போகிறேன். அனைவரும் திரண்டு வந்து இணைந்து கொள்ளுங்கள். கிடைக்கும் பணம் அங்கத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

★ ★ ★

சங்கத்தமிழர் பெருவிளம்பரம் செய்து ஐ.நா முன்னால் ஆர்ப்பாட்டம் செய்யப் போனார்கள், பஸ் பிடித்து.. ஜூலை கலவரத்தின் நினைவு தினம் கொண்டாட... ஒரு சில நூற்றுக்கணக்கிலேயே கலந்து கொண்டார்கள். போனவர்களையும் கட்டடத்திற்கு அருகில் கூட விடவில்லையாம். அத்தோடு எந்த வித மகஜர்களும் கொடுக்கவுமில்லை. அதையும் விட தமிழீழக் கொடியேற்றிய 'பொஸ்டன் வாசிகளும்' வரவில்லையாம்.

இனியென்ன, பத்திரிகைகள் எல்லாம் அமெரிக்க மண்ணில் தமிழீழக் கொடி. என்று முன்பக்கத்தில் தலையங்கம் எழுத வேண்டியது தான்.

★ ★ ★

ஏடு இட்டோர்க்கு,

தாயகம் வாசிப்பதன் முதன்மை நோக்கம் முக்கியமாக யாழ்ப்பாண சமூகத்தில் புரையோடிப் போன எத்தனையோ குறைபாடுகளை க(ல்)லாநிதி (சிலர் தமக்குத் தாமே கலாநிதிப் பட்டம் சூட்டிக் கொள்ளும் போது, என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாண சமூக ஆராய்ச்சியில் கியூறியஸ் ஒரு கலாநிதிதான்.) அவ்வப்போது தனது நகைச்சுவை உணர்வு மூலம் கிண்டல், கேலி வார்த்தைகளால் வெளிப்படுத்தும் விதம் தான். ஆனாலும் ஒரு ஆதங்கம். இந்த குறைபாடுடையவர்களை கியூறியஸின் வார்த்தைகளாவது நடைமுறை வாழ்க்கையில் திருந்தி நடக்க வைக்குமா? என்பது தான். ஏனெனில் தாயகத்தின் உண்மையான வாசகர் குழாமில் இந்தக் குறைபாடுடையவர்கள் இருக்க வாய்ப்பில்லை என்ற எனது எண்ணம் தான்.

இவ்வாறு தங்கா என்ற வாசகர் கடிதம் எழுதியிருக்கிறார். நன்றி வாசகரே.

★ ★ ★

சமீபத்தில் சோதிடர் ஒருவர் தனது பெயரின் முன்னால் பேராசிரியர் என்று போட்டிருந்ததைப் பார்த்து 'நான் தேவலாம்' என்று தோன்றியது. (விளம்பரம் ஒன்றில் டாக்டர் கங்கை அமரன் என்றிருந்தது)

புல்லாங்குழலில் காற்று நுழைந்தால் புதுப்புது இசையாகும், கல்லாநிதியின் காதில் நுழைந்தால் அறு(சு)வை விருந்தாகும்.. ஏதோ நம்மாலானது.. தன்னடக்கத்துடன் தலைவணங்கி தங்கள் வாழ்த்தைப் பெற்றுக் கொள்கிறேன்.


This newspaper is published by
Georgicka communications.
Editor: George R.Ckrbushchev
A member of
Ethnic Press Council Of Canada.

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.
Tel: (416) 920 9081 Fax: 963 5738
Email:71650,3216 Compuserve

பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு சாதனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்


உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் $60

வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)

ANTONY BROTHERS
516 3903

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை,
இந்திய, கனடிய உணவுப் பொருட்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அந்தனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்


லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழ், ஹிந்தி,
மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப்
பெறலாம்

- முத்திரை, சிகரெட்,
  TTC Tickets, Lottery Tickets
- ஃபாக்ஸ், போட்டோக்கொப்பி வசதிகள்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**



SIVA'S TRADING CO LTD

321-2739

அனைத்து வகையான இலங்கை,
இந்திய உணவு வகைகள்,
பலசரக்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

# சிவாஸ் ரேடிங் கோ

## 3852 Finch Ave East
Kennedy/Finch

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

தோசை, இடியப்பம், அப்பம்
சுடச்சுடக் கிடைக்கும்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே



# P.S.S.T

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு | 99 சதம் |
| Video Transfer (Any system) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினல்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

## Tel:609-0141

## 5210 Finch Ave East #23
(Finch/Middlefield)

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்